MA3
N26
68795

ஓம்

ஸ்ரீ

சரஸ்பதி அம்பாள் சகாயம்.

# பதார்த்தகுண பரிகாரம்.

மஹா ரிஷீஸ்வரரால் அருளிச்செய்ததை
சிறந்த ஜோசியரும், வைத்திய நிபுணரும்,
தேவதாசித்தியும் மாந்திரீக தேர்ச்சியும்பெற்ற

**மதுரை, டி. என். சீதாராமய்யர்**
அவர்கள் இயற்றியது.



OFFICE OF THE REGIST[illegible]
4-JAN 1927
MADRA[illegible]

**டி. என். சீதாராமய்யர் கம்பெனி,**
ஜோஸியம், நேட்டிவ் டாக்டர் அண்டு
மாந்திரீக ஹால்,
தெற்குவாசல் 49, எழுத்தாணிக்காரத்தெரு,
**மதுரை.**

விஜயன் பிரஸ், மதுரை.

[...ரைட] 1926 [விலை ரூ 1-0-0

MA3
N26
68795

ஓம்

ஸ்ரீ

சரஸ்பதி அம்பாள் சகாயம்.

# பதார்த்தகுண பரிகாரம்.

மஹா ரிஷீஸ்வராள் அருளிச்செய்ததை
சிறந்த ஜோசியரும், வைத்திய நிபுணரும்,
தேவதாசித்தியும் மாந்திரீக தேர்ச்சியும்பெற்ற

**மதுரை, டி. என். சீதாராமய்யர்**

அவர்கள் இயற்றியது.

OFFICE OF THE REGIST
BOOKS
4-JAN 192
MADRA



**டி. என். சீதாராமய்யர் கம்பெனி,**

ஜோஸியம், நேட்டிவ் டாக்டர் அண்டு
மாந்திரீக ஹால்,
தெற்குவாசல் 49, எழுத்தாணிக்காரத்தெரு,

**மதுரை.**

ஸ்ரீ விஜயன் பிரஸ், மதுரை.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1926. [விலை ரூ. 1-0-0.

MA3
N2
68795

1775
615 (1)
OFFICE OF THE ... RAR
4-JAN 1927
MADRAS

உ

# ஆயுர்வேத சகாயம்.

## முகவுரை.

இந்த பூமியினிடத்து முளைத்த ஔஷதி நான்கு வகைப்படும். அவையாவன? மரம், செடி, கொடி, புல், யென்பவைகளாம். இதில் ஒவ்வொரு வர்க்கங்களினின் றும் பிரிவுற்ற பேதங்கள் அளவற்றதாம். அவைகளில் சிலது வேர்முதல் வித்துவரை யெண்வகை பதார்த்தங் களாக விருக்கின்றன. அதாவது வேர், பட்டை, கட்டை, ரசம், இலை, புஸ்பம், பழம், வித்து யென்பவைகளாம். இவற்றுள் ஒவ்வொன்றும் கசப்பு, உப்பு, தித்திப்பு, கார்ப்பு, புளிப்பு, துவர்ப்பு ஆகிய ஆறுவகை ருசிகளையும் பற்பல குணங்களையும் பெற்றிருக்கின்றன.

கண்களால் பார்க்கப்படுவதுகளெல்லாம் பதார்த்தங் களாம் அவைகளில் ஜனங்கள் நாள்தோரும் உண்ணத்தக் கதான பதார்த்தங்களின் குணகுணங்களை நாம் அவசி யம் தெரிந்துகொள்ள வேண்டியது நமது முக்கியகடமை.

அதோடு இன்னொரு அவசியமான விசேஷ விஷய மாவது நாம் நாள்தோறும் உண்ணத்தக்கதான பதார்த்தங் களில் சிலது கெட்ட குணங்களுள்ளதா யிருப்பினும் அதை நாம் புசிக்காம லிருக்கமுடியவில்லை ஆதலால் நமக்கு பிணிகள் சம்பவித்து தேகம்மெலிந்து சக்தி யற்றுப் போவதுடன் பெருத்த அபாயமும் நேரிடுகிறது. ஆனதுபற்றி அதன் பரிகாரமும் தெரிந்துக் கொண்டு உடனுக்குடன் பரிகாரம் சேர்த்து உபயோகித்துவந்தால் (அல்லது பரிகாரம் செய்து வந்தால்) யாதொரு வியாதி யும் வராமல் திடகாத்திரத்துடன் விசேஷ இன்பமும் அளவில்லாத நன்மையும் அடையலாம் என்பதில் சற்றே னும் சந்தேகமில்லை.

இந்த புஸ்தகத்தில் ஜனங்கள் நாள்தோறும் உண்ணத்தக்கதான பதார்த்தங்களின் குணங்களையும் அந்த பதார்த்தங்களில் ஏதேனும் பித்தம், வாய்வு, உஷ்ணம், இருமல், ஜலுப்பு, க்ஷயம், முதலிய பல குற்றங்களிருப்பவைகளுக்கு பரிகாரமும் சொல்லப் பட்டிருக்கிறது.

இன்னும்திடகாத்திரத்துடன் சுகிக்கவேண்டி சரீரத்துக்குத் தேவையான நித்திரை, புணர்ச்சி, ஸ்நானபானாதி முதலிய பற்பல அரியபெரிய விஷயங்களின் கிரமமும் ஏதேஷ்டமாக இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

வியாதி வந்தபின் காப்பதைக்காட்டிலும் வியாதி வரவொட்டாமல் தடுக்கும் இந்த புஸ்தகம் யாவருக்கும் மிகுந்த நன்மை செய்யுமென்பது நிச்சயம்.

அதிசிரேஷ்டமான இந்த பதார்த்தகுண பரிகாரம் என்னும்சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட பதார்த்தங்களின் குணங்களையும் பரிகாரமும் நன்றாய் அறிந்து அவற்றுள் நித்திய போஜனத்துக்கு உதவத்தக்கபதார்த்தங்களை சித்தர்பாகம்,வீமபாகம், நளபாகம், தேவபாகம், என்னுஞ் சாஸ்திரங்களிற் சொல்லியபிரகாரம் பாகம்செய்து புசிக்க வேண்டியதுடன், சூரியோதயமுன் விழித்தல் முதலாகச் சொல்லபட்ட, தினகிரமங்களும் தவறாமல் நடப்பவர்கள் அதிகபலமும், புஷ்டியும், பூர்ணசௌக்கியமும், தீர்காயுளும்,இன்பமும், சந்தான சௌபாக்கியமும், பெற்று இவ்வுலகத்தில் சுகமாகவாழ்வார்கள்.

இந்த புஸ்தகம் விலை ரூ 1—0—0

☞ டி. என். சீதாராமய்யர் கம்பெனி,

தெற்குவாசல் 49, எழுத்தாணிக்காரத் தெரு, மதுரை.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

OFFICE OF THE ... 4-JAN 1927

# பதார்த்தகுண பரிகாரம்.

## நோயணுகாவிதி.

தேரையர் பாடல்.

வெண்பா.

திண்ணமிரண்டுள்ளே சிக்கவடற்காமற்
பெண்ணின்பாலொன்றைப் பெருக்காம்-லுண்ணுங்கா
னீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கியுண்பவர் தம்
பேருரைக்கிற் போமே பிணி.

இதன் பொருள்:- மலசலத்தை அடக்காமலும் விந்துவை அதிகமாக விடாமலும் உண்ணுமிடத்து நீரைக்காய்ச்சி மோரைவிளாவி நெய்யையுருக்கி உண்ணலுமாகிய தன்மை யுள்ளவர்களின் நாமத்தை யுச்சரிப்பவர்கட்கும் பிணி விலகும்.

இதுவுமது.

புசித்தாலன்றி சாப்பிடக்கூடாது. பசுவின்பாலை உபயோகிக்கவேண்டும். மூலரோகத்தை யுண்டாக்கும் பதார்த்தவகைகளை உண்ணக்கூடாது முன்னாளில் சமைத்தகறி, அமிர்தத்துக்கொப்பானாலும் புசிக்கக்கூடாது, தினமொன்றுக்கு 2-தரம் அல்லது 3-தரம் புசிக்கவேண்டும், 4-மாதத்திற்கொருதரம் பேதியாகும்படியும், 6 மாதத்திற்கொருதரம் வாந்தியாகும்படியும் மருந்துண்ணவேண்டும், $1\frac{1}{2}$-மாதத்திற்கொருதரம் நசியம் செய்துக்கொள்ளவேண்டும், 3-நாளுக்கொருதரம் கண்களுக்கு மையிடவேண்டும், மாதத்திற்கு 4-தரம் சவரஞ் செய்துக்கொள்ளவேண்டும்,

தினம் ஸ்நானம் செய்யவேண்டும், நான்கு தினத்திற்கொருதரம் அப்பியங்க ஸ்நானம் செய்யவேண்டும், வஸ்திரத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும், இளவெயிலை இச்சிக்கக்கூடாது கடவுளையும், பிதுர்க்களையும், ஆசிரியரையும் காலை மாலை பூசிக்கவேண்டும். இவ்விதம் நடப்பவர்களுக்கு நோயணுகாது.

## அறுசுவைகளின் மிகுதி குணம்.

புளிப்பும், துவர்ப்பும், அதிகரிக்கில் வாதம் அதிகரிக்கும். உப்பும் கசப்பும் அதிகரிக்கில் பித்தம் அதிகரிக்கும் உறைப்பும், தித்திப்பும் அதிகரிக்கில் சிலேஷ்மம் அதிகரிக்கும். ஆதலால் அறுசுவைகளையும் கிறமமாகப் பதார்த்தங்களிற் சேர்த்துண்ணில் பிணிகள் வராவாம்.

சென்ற இரவில் மீந்த பதார்த்தம் முதலியவைகளை மறுபடியும் ஒருதரம் அடுப்பில் வைத்துப் பாகம் செய்து புசிக்கில் இதுவே விஷமாம்.

## காலை விழிப்பின் குணம்.

உதயகாலத்தில் விழிப்பவர்களுக்கு புத்திக்கு தெளிவை உணர்த்துகின்ற சுத்தநரம்பு என்னும் ஒருவித நரம்பினது துவாரத்தில் நிறைந்திருக்கின்ற நீரானது கலங்கலின்றிப் பரிசுத்தமாயிருக்கும். பயித்தியகோபம் நீங்கும். வாதமும், பித்தமும், சிலேஷ்மமும் தங்களிடங்களிலே பொருந்தும்,

## விழித்தவுடன் சுத்தஜலம் அருந்தலின் குணம்.

நித்திரை செய்து விழித்தவுடன் சுத்தோதகமென்னும் நீராகாரம் அல்லது நல்லஜலம் இதுகளில் ஏதேனும் ஒன்றைப்பிரமாணமாகப் பருகில், பயித்திய தோஷம் விலக்கும் அன்றியும் மலஜலபந்தங்களும் நீங்கும் வாதம் முதலிய மூன்று தோஷங்களும் தத்தம் நிலைகளில் சஞ்சரிக்கும்.

## விழித்தவுடன் பார்க்கத்தக்க வஸ்துக்கள்.

நித்திரை செய்து விழித்தவுடன் தாமரைப்பூ, தங்கம், தீபம், கண்ணாடி, சூரியன், புகையொழிந்த நெருப்பு, செஞ்சந்தனம், கடல், வயல், சிவலிங்கப், முகில்சூழ்ந்த மலை, கன்றையுடையபசு, தமது வலக்கை, மனைவி, மிருதங்கம் இவற்றுளேதேனும் ஒன்றை பார்க்கில் உத்தமம்.

## விழித்தவுடன் கண்ணாடி பார்த்தலின் குணம்.

தூங்கிவிழித்தவுடன் கண்ணாடிபார்த்தலினால் வீரிய விருத்தியும், மகிழ்ச்சியும், சர்வ வசியமும், ஞானமும் அதிகரிக்கும்.

## விழித்தவுடன் பார்க்கத்தகாத வஸ்துக்கள்.

நித்திரை செய்து எழுந்தவுடன் அங்கஹீனம், வஸ்திரஹீனம், காவிவஸ்திரம், ஊமை, மொட்டைத்தலை, செவிடு, கூன், விரிந்த மயிர்த்தலை, சதாநித்திரை, குஷ்டம், எண்ணைத்தலை, மனோவியாகூலம், தரித்திரம், க்ஷயரோகம், இவையுடையவர் முகத்தையும், பாம்பு, பூனை, சாம்பல், எருமை, பெறுக்குமாறு, உலக்கை, முறம் என்னும் இவைகளையும் பார்த்தால் அன்றைக்குக் கெடுதியுண்டாகும்.

## சிலம்பம், மல்யுத்தம், குதிரையேற்றம், பாதநடை இவைகளால் உண்டாகும் குணம்.

காலையில் சிலம்பம், மல்யுத்தம் இவைகளைப் பழகுவதாலும், குதிரைஏறி சவாரி செய்வதாலும், பாதசாரியாக நடக்கிரதாலும் தளர்ந்த உடல் இறுகும். அதிக தீபனமாகும். கபவாத தொந்தமும், வாதசூலையும், பழய மலபந்தமும் நீங்கும்.

## மிதாமித வார்த்தையின் குணம்.

மிதமாக வசனித்தால் உள் அறிவும் சரீர சௌக்கியமும்உண்டாகும். அதிகமாகவசனித்தால் முற்கூறியஅறிவும் சௌக்கியமும் கெடும். அன்றியும் ரசதாதுவும் ரத்த தாதுவும் சுண்டும். இவை குறைவதினல் பித்தம் அதிகரிக்கும். அதனுல் கபநோய் பிறக்கும். நீர்ரோகம் உண்டாகும்.

## வெயிலால் உண்டாகும் குணம்.

வெயிலால் வாதாதிக்கமும், அழகும் விலகும். வருத்தம், வியர்வை, ஜடராக்கினி, பித்தகோபம் இவை அதிகரிக்கும்.

## காலை, மாலை வெயிலால் உண்டாகும் குணம்.

உதயகால வெயிலில் காய்ந்தவர்களுடைய சரீரத்தில் முன்பில்லாத வியாதிகளெல்லாம் பரவும்.

மாலைகால வெயிலில் காய்ந்தவர்களுக்கு முன்பிருந்த பழய வியாதிகளெல்லாம் நீங்கிவிடும்.

## நிழலால் உண்டாகும் குணம்.

குளிர்ந்த நிழலிலிருப்பவர்களுக்கு சரீரந் தூலித்தலும், வேறு நிறமான அழகும், நீங்கிய கடுப்புவாதமும், அலசமும், அசதியும் அதிகமாம். பரிகாரம் மயில் விசிறியால் வீசிக்கொள்ளவும்.

## வேள்விப்புகை, சுடுகாட்டுப்புகை, தைலப்புகை இவைகளின் குணம்.

வேள்விப் புகையானது தீர்க்காயுசு கொடுக்கும், சுடுகாட்டுபுகையானது உள்ள ஆயுளேயும் கெடுக்கும், நல்ல தைலப் புகையானது வாத ரோகத்தை போக்கும்.

## மலஜலம் விடுத்தலின் குணம்.

மலஜலம் இரண்டையும் சிக்கலின்றி காலேமாலேக் காலங்கடோரும் விடுப்பவர்களிடத்து வாதபித்தகபங்கள் தத்தம் நிலேகளிலுலாவும் ஜடராக்கினி அதிகரிக்கும், நோய் கூட்டம் ஒழியும் எமனுக்கினேயும் செல்லாவாம்.

## பல் விளக்கின் குணம்.

தூள், இலே, கொம்பு இவைகளால் பல்விளக்கினுல் பல்லுகளுக்கூனமில்லே, வாதபித்த கபங்களால் பல்லினிடத்தும் அவ்வேரினிடத்தும் பிறக்கின்ற 23 ரோகங்களும் உண்டாகாது. ஆனுல் அந்த தூளும், இலேயும், கொம்பும் இயல்பாகத் துவர் உள்ளதுகளா யிருந்தால் பல்லுகள் அசைவற்று உறுதியாயிருக்கும்.

## பல் விளக்கத்தக்க கொம்புகள்.

கருவேல்குச்சியால் பற்களுக்குறுதியும், வேப்பங் குச்சியால் பற்களுக்கொளிவும், வீரியவிருத்தியும், ஆலம் விழுதுக்கு லட்சுமி கடாட்சமும், நாயுருவி வேருக்கு முக வசீகரமுண்டாகும்.

## பல் விளக்கத்தகாத வஸ்துக்கள்.

செங்கல், மணல், கரி, தென்னம்பாளை, வைக்கோல் இவைகளால் தினமும் பல்துலக்குவரிடத்தில் லக்ஷிமி நீங்கி மூதேவி சேர்வாள்.

## சுத்த ஸ்நானத்தின் குணம்.

ஆறு, மடுக்களில் அதிகாலையில் தினம் சுத்தஸ்நானம் செய்பவருக்கு தினவு, சோர்வு, வெப்பம், தேகக்கனதி இவை நீங்கும். தேஜசும், வன்மையும், தீபனமும், நல்ல வனப்புமுண்டாம்.

## காலைக் குளியலின் குணம்.

மா, நெல்லி முதலிய இலைகளை ஊறவைத்த ஜலத்தை யாவது, வாசனைப்பொடி தூவிய பரிமள ஜலத்தையாவது அது கலவாத சுத்த ஜலத்தையாவது, வென்னீரையாவது தங்கள் இருப்பிடங்களில் வைத்துக்கொண்டு கால தேச தேக பேதங்களை யுணர்ந்து அதிகாலையில் ஸ்நானம் செய் பவர்களுக்கு ஜடராக்கினியும், புஷ்டியுமுண்டாம். சகல வியாதிகளும் போம். இவ்வண்ணம் மாலை காலங்களில் ஸ்நானம் செய்பவர்களுக்கு மேற்சொல்லிய குணங்களில் மத்திபமாம்.

### மஞ்சள் குளியலின் குணம்.

பரிமள கலவையுள்ள மஞ்சள் காப்பிட்டுக்கொண்டு ஸ்நானம் செய்பவர்களுக்கு கற்றாழை நாற்றமும், முகத்தி லுண்டாகின்ற ரோகமும், சீரண சிலேஷ்மமும், வியர்வையும் நீங்கும்.

## அப்பியங்க ஸ்நான விதி.

### பஞ்சகற்பத்தின் குணம்.

கஸ்தூரிமஞ்சள், மிளகு, வேப்பம்வித்து, கடுக்காய்த் தோல், நெல்லிப்பருப்பு, இவைகளை கிரமப்பிரகாரம் பசுவின் பால் விட்டரைத்து அதே பாலில் கொதிக்க வைத்து முடிவில் பசுவெண்ணெயைக் கொஞ்சம் போட்டு இரக்கி ஆறினவுடன் சிரசிற்றேயித்துக்கொண்டு ஸ்நானஞ் செய்தால் எந்நாளும் பிணிகளுக்கிஞ்சித்தேனும் இடமில்லை. இதுவே பஞ்சகற்பகவிதியென்றறியக்கடவை.

### அப்பியங்கனத்தின் குணம்.

அப்பியங்கனத்தால் மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற பஞ்சேந்திரியங்களும் பலத்துத் தெளிவுறும். சிரசு, முழங்கால்களுக்குப் பலமும், ரோம வளர்ச்சியும், நற்றெரனியும் உண்டாம். தலைவலி விடும்.

### நித்திய அப்பியங்கனத்தின் குணம்.

தேகேந்திரிய பளபளப்பும், தேக புஷ்டியும் உண்டாம். சோருதல், தனிக் கபநோய், திரிதோஷ தொந்தம், அரோசகம், உபகிருச ரோகம் இவைகள் நீங்கும்.

## பசுவின் நெய் முழுக்கின் குணம்.

பசுவின் நெய் முழுக்கானது பால, குமார, விருத்தர்களுக்கும் ஆகும். ரசதாதுவின் கொதிப்பாற்கண்ட எரிச்சல், உன்மாதம், மூர்ச்சை, மூளையைப்பற்றிய கபம், ரத்த பித்தம், விதாகம், இவைகளை நீக்கி நன்மையைத்தரும்.

## தைலாதிகளின் குணம்.

எண்ணெமுக்கூட்டு, பசுவின் நெய், உயர்ந்த தைலம் முதலியவைகளை எட்டு தினத்திற்கு இரண்டுதரம் ஸ்நானஞ் செய்யில் சகல ரோகங்களும் தேகத்தை வருத்துதற்கு அதிகாரமில்லை.

## தைலம் தேய்க்கும் விதி.

நல்ல தைலங்களை மூக்கில் 4 துளியும், காதில் 6 துளியும் விட்டு சிரசு, உடம்பு, பாதத்தினடி இவைகளில்விட்டு தேய்த்து ஊறவைத்துப்பின்பு சிகைக்காய் தேய்த்து வெந்நீரில் ஸ்நானஞ்செய்து அந்த நீரும் வியர்வையும் நீங்கும்படி உலர்த்துவாயாக.

## பாதாதிகளில் தைலமிடலின் குணம்.

எண்ணெ முதலிய தைலங்களை உள்ளங்காலில் தேய்க்கில் கண்ணைப்பற்றிய ரோகங்களும், கண்ணுக்கு கட்டினல் செவி ரோகங்களும், செவியிற் குத்தினல் சிரஸ்தாபங்களும், சிரசில் தேய்த்து ஸ்நானஞ்செய்தால் சரீரத்தினுள்ள சகல ரோகங்களும் நிவர்த்தியாகும்.

## அரைப்பு வகை.

விரணதேகிகட்கு உசிலத்தூளும், சொறி, தினவை உடையவர்களுக்கு இலுப்பைபிண்ணாக்கும், எண்ணே முதலிய தைலங்களுக்கு சிகைக்காயும், பொன்னாங்காயும், பசுவின் நெய்க்குப் பச்சைப்பயறும், பன்றி, காக்காய் முதலிய நெய்கட்கு காரைச்செடிகளின் தூளும் அரைப்பாகும்.

# எண்ணே வகை.

## ஆமணக்கு எண்ணேயின் குணம்.

உஷ்ணதிக்கமுள்ள முத்துக்கொட்டை எண்ணேயை முறைப்படிக்கு குடித்தால் விரோசனமாம். இதனல் கோரவாதம், குன்மம், குடலேற்றமும், தேகம், கண், மூக்கு, செவி, வாய் இவைகளில் உண்டாகிற யெரிச்சலும் நீங்கும் பொன்னிறமும் தாதுவிருத்தியுமுண்டாம்.

## சிற்றுமணக்கு எண்ணேயின் குணம்.

பற்பல ஔஷதங்களின் வெப்பங்களேயும், வாய்வினல் மூலத்திலுண்டாகின்ற உஷ்ணங்களேயும், நீக்கும் அன்றியும் சிசுக்களேத் தாய் வளர்ப்பதுபோல் உடலே வளர்ப்பிக்கும்.

## எள்ளு எண்ணேயின் குணம்.

புத்திக்கு தெளிவு, விழிக்குக் குளிர்ச்சி, மனமகிழ்ச்சி தேகபுஷ்டி, பலம், தேஜசு, வாலிபத்தன்மை என்னும்

இவைகள் உண்டாகும். அன்றியும் நேத்திர நோய், கர்ண ரோகம், கபால உஷ்ணம், காசம், விரணம் ஆகிய இவைகள் நீங்கும்.

## வேப்பெண்ணெயின் குணம்.

மகாவாதம், கிரந்தி, கரப்பான், சிரங்கு, ஆகிருஷ்ணஸ்தம்பனவாதம், ஜ்வரம், ஜன்னி இவைகள் நீங்கும்.

## தேங்காய் எண்ணெயின் குணம்.

தீயால் வரும் விரணம், தந்தமூல ரோகம், படர்தாமரை, சிரங்கு ஆகிய இவை போம். தலைமயிர் வளரும்.

## கடுகு எண்ணெயின் குணம்.

சூடுள்ள கடுகு எண்ணெயால் குன்மம், ரத்தபித்தம், குஷ்டம், மகாவாதம், க்ஷயம், மூளை மூல விரணம், சூலை முதலிய பிணிகள் நீங்கும்.

## முக்கூட்டு எண்ணெயின் குணம்.

பசுவின் நெய், எள்ளெண்ணெ, ஆமணக்கெண்ணெ கிரமப்படி கூட்டி காச்சி ஸ்நானம் செய்யில், பித்தவாத கோபங்கள் மீறுமல் தத்தம் நிலையிற் பொருந்துவதால் அத்திரிதோஷங்களால் வரும் சகல ரோகங்களும் நீங்கும்.

## முக்கூட்டு எண்ணெ சேர்க்கும் விதி.

வாததேகிகளுக்கு:-

| | | |
|---|---|---|
| பசுவின் நெய் | 3 | பங்கு |
| எள்ளெண்ணெ | 2 | பங்கு |
| ஆமணக்கெண்ணெ | 3 | பங்கு |

பித்ததேகிகளுக்கு:—

| | |
|---|---|
| பசுவின் நெய் | 3 பங்கு |
| எள்ளெண்ணெ | 1 பங்கு |
| ஆமணக்கெண்ணெ | 2 பங்கு |

சிலேஷ்மதேகிகளுக்கு:—

| | |
|---|---|
| பசுவின் நெய் | 2 பங்கு |
| எள்ளெண்ணெ | 3 பங்கு |
| ஆமணக்கெண்ணெ | 1 பங்கு |

இவ்வாறு கூட்ட வேண்டும்.

## ஐங்கூட்டு தைலத்தின் குணம்.

ஆமணக்கு, எள்ளு, வேம்பு, புண்ணை, புங்கு, இவற்றின் நெய்களை ஒன்றாக கலந்து தைலமாகச் செய்து உபயோகிக்கில் பின்னிசுவு, மகாவாதம், சந்நிபாதஜுரம், கபதோஷம் ஆகிய இவைகள் நீங்கும்.

## தைலஸ்நான கால விதி.

ஆனி, ஆடி மாதங்களில் காலை 9 மணிக்குள்ளும், மற்ற மாதங்களில் காலை 8 மணிக்குள்ளும், பக்குவ பாகமுள்ள தைல ஸ்நானம் செய்தால் அதிக உத்தமம்.

## க்ஷவரத்தின் குணம்.

ஒரு மாதத்திற்கு மூன்றுதரம் செய்துகொள்ளும் க்ஷவரத்தினல் மனத்துயரம், குத்தல், இருமல் ஆகிய இவைகள் உடனே கொஞ்சம் சௌக்கியமாம். தேகவொளிவும், மன சந்தோஷமும், விழிக்குப் பிரகாசமும், தாது விர்த்தியும் உண்டாகும்.

# ஜலவகை.

## சமுத்திர ஜலத்தின் குணம்.

கவிகை யென்னும் ஒருவித உதிரரோகம், பெரு வியாதி, சரீரக்குடைச்சல், ரத்தகுன்மம், குஷ்டம், வாத குன்மரோகம், ஜுரம், உதிரவாதம், நீராமைகட்டி, பெருவயிறு, * பீலிகத்தைப்பற்றிய வியாதி ஆகிய இவை கள் விலகும். இதில் ஸ்நானம் செய்தால் மகோதர முத லிய வீக்கங்களைப் போக்கும். சூடு அதிகரிக்கும், சொறி சிறங்கு, தினவு உண்டாகும். பரிகாரம் நெய், பால், சக் கரை சேர்த்துக்கொள்ளவும்.

சமுத்திர ஜலத்தைக் காய்ச்சியுண்டால், வாதகுன் மம், குடற்கரி ரோகம், மலஜலபந்தம், மிகு உழைப்பினல் வந்த வியாதிகள், தேகக்கடுப்பு, சோணிதவாதம், கபவா தம், நாக்குப்பிடிப்பு, ஜன்னிதோஷம் ஆகிய இவைகள் விலகும்.

## சுத்தஜலம் அல்லது தண்ணீரின் குணம்.

தண்ணீரின் குணங்களெல்லாம் மண்ணின் குணமே யன்றி வேறில்லை. அதன் விபரம் ஆறு, குளம், ஏறி, மடு, கிணறு, சுனை முதலியதில் தங்கிய ஜலத்திற்கு அவ்வவ் விட பெயர் பெற்ற நீரென சொல்லப்படும். ஜலங்களின் குணமானது பூமிக்கொத்த குணங்களாய் பேதிக்கும். ஆயினும் ஜலம் எவ்வளவு மிருதுவாயும், மெலிந்தும்,

* பீலிகமென்பது இருதயத்துக்கு இடபுரத்திலிருக்கும் ஒருவித மாமிசக்கண்டம்.

தெளிவாயும், கனம்குறைந்தும் இருக்கிறதோ அவ்வளவு அதில் நற்குணங்கள் உண்டாயிருக்கும். எந்த ஜலமாயினும் வடிகட்டி சுண்டக்காய்ச்சி ஆரவைத்து இளஞ்சூடாக உபயோகித்தால் ஒருபொல்லாப்புமில்லை.

## மழை நீரின்குணம்.

குளிர்ச்சியும், ஜிலிர்ப்புமாம், சுத்த இரத்தத்தை உண்டாக்கும். நல்ல அறிவு, சுக்கிலம், சோணிதம், இவைகள் அதிகரிக்கும். தாகத்தையடக்கும் தேகத்துக்கு ஒழிக்கொடுக்கும், தீபனமுண்டாகும், ஔஷதங்களின் பொல்லாப்பை நீக்கி சுத்திசெய்யும், பித்தத்தின் கொதிப்பை யாற்றும், ஆனல் முந்திப்பெய்த நீரில் பூமியின் சூடு கலப்பதால் அதை நீக்கிப் பிந்திப்பெய்யும் நீரைக் கொள்ளவேண்டியது. குளிர்ச்சியைபற்றிய ஜுரத்துக்குதவாது பரிகாரம் காடி, வெங்காயம், தேன்.

## பனிக்கட்டி நீரின்குணம்.

குளிர்ச்சியும், ஜிலிர்ப்புமாம், சுத்த இரத்தத்தையுண்டாக்கும். சூட்டைப்பற்றிய ரோகங்களை நன்றாய்க் கண்டிக்கும், பித்தஜுரத்தை படியவைக்கும், தீனிபைக்கும், ஈரலுக்கும் பலம் கொடுக்கும், தீபனமுண்டாம், சிலேஷ்மம், பிரமேகம், பெரும்பாடு, நேத்திரத்தில் புகைகம்மல், கை, கால் எரிவு, விக்கல், சுவாசம், மயக்கம், இவைகளை நீக்கும். குளிர்ச்சியையுண்டாக்கும். குளிர்ந்த தேகத்தோர்களுடைய பற்களுக்கு உதவாது பரிகாரம் கற்கண்டு, வெங்காயம், தேன்.

---

நளவீம பாக சாஸ்திரம் விலை ரூ 1—0—0.
விலாஸம்:- டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

## பனி நீரின்குணம்.

பனிநீரை சூரியோதயகாலத்தில் அருந்துவோர்க்குச் சொறி, கிரந்தி, குஷ்டம், தாபம், காசம், கிராணி, தனி வாதகோபம், திரிதோஷம், தேகவறட்சி, நீரழிவு, ஆகிய இவைகளில்லை.

## ஆற்று நீரின்குணம்.

வாதம், பித்தகோபம், கபதோஷம், தாகம், பித்த சம்மந்தமான சிற்சில ரோகம், உட்சூடு, சொறிசிரங்கு, கண்புகைச்சல், ஆகிய இவைகளைப் போக்கும். தேஜஸும், சக்கிலவிருத்தியும் உண்டாகும். மேற்கிலிருந்து கிழக்கு முகமாக எப்போதும் கட்டுப்படாமல் ஓடிவரு கிற ஆற்றுநீர் தேக சௌக்கியத்துக்கு ஒரு அமிர்தமாம்.

## வைகை நதி நீரின்குணம்.

வாதமேகம், குஷ்டம், சோபாரோகம், கரப்பான், தேக யெரிச்சல், தாகம், பாதாக்ஷேபகவாதம், தாதுநஷ்டம், சிலவிஷம், ஆகிய இவைகள் நீங்கும்.

## கோதாவரி நதி நீரின்குணம்.

முத்தோஷகோபம், பலவித சொறிகள், உள்சிறங்கு, நடுக்கற்ஜுரம், இவைபோம்.

மற்ற நதிகள் நீரின்குணம் 2-ம் பாக புஸ்தகத்தில் காண்க.

## குளத்து ஜலத்தின் குணம்.

வாதரோகத்தை விருத்தி செய்வதுமன்றி மதுப்பிர மேகத்தையும், சீதளத்தையும், உண்டாக்கும். பரிகாரம் ஜலத்தை வடிகட்டி சுண்டக்காய்ச்சி ஆரவைத்து இளஞ் சூடாக உபயோகிக்கவும்.

### தாமரைக்குளத்து ஜலத்தின் குணம்.

வாதபித்த தொந்தம், புராணஜுரம், அதிதாகம் இவைகள் அதிகரிக்கும். பரிகாரம் ஷை.

### அதிகுளிர்ச்சி சரகூரல் உள்ள குளத்து ஜலத்தின் குணம்.

தேகங்கட்டுவிடல், விக்கல், வாதசிலேஷ்ம தொந்தம், வண்டுகடி முதலிய சில விஷம், வாந்தி, குளிர், காசம், வயிற்றுவலி ஆகிய இவைகளை உண்டாக்கும். அதில் சரீரம் ஊறுமானல் இன்னும் பற்பல ரோகங்களும் உண்டாகும். பரிகாரம் ஷை.

### ஏரி ஜலம், கற்சுனை ஜலம் இவைகளின் குணம்.

ஏறிஜலமானது வாய்வை விர்த்திசெய்யும், கற்சுனை ஜலம் வாதபித்த தோஷமாம், அதை ஒருநாள் வைத்திருந்து மருநாளருந்தில் குளிர்ச்சி நீங்கி உஷ்ணமுண்டாகும். பரிகாரம் ஷை.

### கிணற்று ஜலத்தின் குணம்.

குற்றமில்லாத கிணற்றுஜலம்:— அதிகதாகம், உஷ்ணம், தீபனம், தேகஅழற்சி, சூலை, சரிரத்துட் கடுப்பு, இடுப்புக் குடைச்சல், மயக்கம், வீக்கம், பித்ததோஷம், சுவாசம் ஆகிய இவைகள் விலகும்.

### ஓடை ஜலத்தின் குணம்.

மதுரமுள்ள ஓடைஜலம் குடிப்பவர்களுக்கு மிகுந்த தாகமும், புஜபலமுமுண்டாகும். பரிகாரம் ஷை.

---

ஒஸ்தி தாதுவிர்த்தி சஞ்சீவி மாத்திரை டப்பி விலை ரூ 3. இதனால் தேககாந்தி, முகதேஜஸ், புருஷத்வம், வல்லபம், இன்பம் ஜனிக்கும்.

## உப்புநீரின் குணம்.

சரீரத்தில் ஓடி குத்துகின்ற வாயுவும், அற்பபோஜனமும், பித்தமதிகரிப்பும், வாயில் துவர்ப்பாக வூருகின்ற ஜலமும், அதிகரிக்கும். ஆனால் குடல்வாதம் விலகும். பரிகாரம் ஷை.

## சுனை ஜலத்தின் குணம்.

சுனைத்தண்ணீரை உண்டவருக்கும், அதில் ஸ்நானம் செய்தவருக்கும் இருமலோடும் கூடிய சீதஜுரம், வாதகோபம், கபவாதரோகம், பயித்தியதோஷம், இவையுண்டாகும். பரிகாரம் ஷை.

## ஊற்று ஜலத்தின் குணம்.

மதுரம் பொருந்திய ஊற்று ஜலமானது பித்தத்தையும், அதிக தாகத்தையும், உடனே சாந்தி செய்யும், தீனிபைக்கு வலுவைக் கொடுக்கும், ஜீரணமாகும், சூட்டைம்புக்கு தலை கனக்கும். பரிகாரம் ஷை.

## பாறை ஜலத்தின் குணம்.

உவர்ப்பைத் தருகின்ற பாறை ஜலத்தினால் தேகஞ்சில்லிடலும், வாதகோஷமும், சந்த ஜுரமும் உண்டாம் பரிகாரம் ஷை.

## சுக்கான் பாறை ஜலத்தின் குணம்.

மூத்திரக்கடுப்பு, நெஞ்சிற் கபக்கட்டு, பித்தாதிக்கம், கபத்தைப்பற்றிய சிற்சில ரோகங்கள், மனோவியாதி ஆகிய இவைகளை உண்டாக்கும். ஆனால் மகாவாத ரோகத்தை விலக்கும். பரிகாரம் ஷை.

## கரும்பாறை ஜலத்தின் குணம்.

வீக்கம், சர்த்தி, அசிர்க்காரோகம், பித்தஜுரம், மயக்கம், மூத்திரகடுப்பு, தாகம் ஆகிய இவைகளை விலக்கும். வீரியம், புத்தி, அழகு, ஆகிய இவற்றை உண்டாக்கும்.

## அருவி ஜலத்தின் குணம்.

மலை அருவிஜலம் ப்பிரமேகத்தையும், ரத்த பித்த ரோகத்தையும் விலக்கும். சிலேஷ்மத்தையும், தேகபலத்தையும் உண்டாக்கும்.

## அடவி ஜலத்தின் குணம்.

அதிக சீதளம், தேகபாரிப்பு, இளைப்பு, சரீரம் வயிறு ஆகிய இவைகளிடத்தில் வெப்பம், தலைகனம், வலியவிஷம், ஜுரம், ஆகிய இவைகள் உண்டாம். பரிகாரம் ஷை.

## சிவந்த ஜலத்தின் குணம்.

இருமலால் பிறந்த பித்த உஷ்ணம் விலகும். ஜுரமும், எரிவும், விந்து நஷ்டமும் உண்டாகும். பரிகாரம் ஷை.

## கறுத்த ஜலத்தின் குணம்.

வாந்தி, கரப்பான், உஷ்ணம், யெரிவு, மார்ப்புச்சளி, காசம், சுவாசம், விடாஜுரம், புளித்த ஏப்பம், தாகம், நடுக்கல், ஆகிய இவைகளை விலக்கும். பசியைத்தரும்.

---

தோஷ நிவாரண மந்திர குளிகை விலை ரூ. 5—0—0. பேய் பிடித்து வருந்தல், கெட்ட சொர்ப்பனங்காணல், நாளுக்குநாள் மெலிந்துபோதல் முதலிய எவ்வித கடூரமான தொந்தரவையும் இக்குளிகை கட்டினால் சூரியனைக் கண்ட பனி போல் ஆச்சரியப்படத்தக்கதாய் நீங்கும்.
விலாசம்:- டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

## வயல் ஜலத்தின் குணம்.

நெற்கழனிகளிலிருக்கும் தண்ணீரால் பிரமேக விதாகம், வெள்ளை, மூர்ச்சை, ரத்தகாசம், ஜுரம், ஆகிய இவைகள் விலகும். சப்ததாதுக்களும்குளிர்ச்சி அடைந்து தேகம் பலக்கும்.

## நண்டுக்குழி நீரின் குணம்.

வயல்களிலிருக்கிற நண்டுக்குழி நீரினல் வமனம், விதாகம், நீங்காத விக்கல், தேக வெப்பம், எரிவு ஆகிய இவைபோம்.

## பாசி நீர் முதலிய மல நீரின்குணம்.

வழுவழுத்த பாசிஜலம் பல பிணிகளையும் உண்டாக்கும். கட்டுக்கடை ஜலத்தால் குடல் வாதம் பிறக்கும். நிழலைஅடைந்த சுனை ஜலம் பெருவயிறும். இறைப்பில்லாத கிணற்று ஜலம் க்ஷயத்தை வளர்க்கும். வரத்தும் போக்குமில்லாத குளத்துஜலம் பிணியைத்தரும். ஊற்றுள்ள ஒடை ஜலத்தால் சகலநோய்களும் நீங்கும். பனி மாசு படிந்த ஜலமானது பித்தகோபத்தை விலக்கும். மழை ஜலம் தளர்ந்த தேகத்தையும் இறுகும். வரத்து போக்குமுள்ள குளத்து ஜலத்தால்நோயில்லை. ஜீவ நதி ஜலத்தால் அழகு உண்டாகும்.

## ஸ்நானபானங்களுக்குதவாத நீரின் குணம்.

சந்திர சூரிய கிரணங்கள், காற்று இவைகள் அணுகாததும். கிருமி, துர்வாசனை, சேறு தடித்தல், சாகுதிரல், ருசியின்மை என்னும் இவைகள் பொருந்திய ஜலமானது ஸ்நானபானங்களுக்கும் ஆகாவாம். ஆகில் ரோக சம்பவமாம்.

# வெந்நீர் வகை.

## வெந்நீரின் பொது குணம்.

அழாக்கு என்னும் அளவாகக் குடிக்கின்ற வெந்நீரினால் எதிர்க்கின்ற உணவு, நெற்றிநோவு, புளியேப்பம், குன்மம், சீதக்கட்டு, ஜுரம், காசம் இவைபோம்.

## காய்ச்சி ஆற்றிய வெந்நீரின் குணம்.

உழலைநோய், விக்கல், பேதியாற் இளைத்த • பித்தகோபம், மூர்ச்சை, சிலவிஷம், வாந்தி, மயக்கம், சுக்கிலமேகம், திரிதோஷம், கண்ணோவு, செவிகுத்தல், சூலை, குன்மம், ஜுரவேகம், கோழை, வாதாதிக்கம் இவைகளை நீக்கும்.

## கால்கூறு, அரைகூறு, முக்கால்கூறு காய்ந்த வெந்நீரின் குணம்.

வைத்த அளவுக்குக் காற்பாகஞ் சுண்டிய வெந்நீரால் பித்தகோபம் நீங்கும். பாதிசுண்டிய வெந்நீரால் வாதபித்த தோஷம் விலகும். அதை மறுநாள் வைத்துண்ணில் திரிதோஷகோபம் போம். முக்கால் பாகஞ்சுண்டிய வெந்நீரால் வாத விர்த்தி, குளிர் நடுக்கல், கொடுஞ்ஜுரம் பற்பல பேதி, திரிதோஷம் இவைகள் போம்.

## ஊணுக்கு முன், பின், நடு இக்காலங்களில் அருந்தும் வெந்நீரின் குணம்.

உணவுக்கு முந்தி வெந்நீரை குடித்தால் பசி மந்தப்படும். பின்பு உண்டால் நன்மை உண்டாம். சாப்பிடும் போது மத்தியில் அருந்தினுல் பசி மத்திபமாம். வெந்நீரின் சுபாவம் வாதஜுரத்தை நீக்கும்.

# இளநீர்வகை.

## இளநீரின் பொது குணம்.

முறைமையாக இளநீரை பருகினால் பித்ததோஷம், வெப்பம், தேகபாரிப்பு, பயித்திய கோபம், வமனம், அதிசாரம் ஆகிய இவைகள் நீங்கும். மனத்தெளிவு, நேத்திரத்துலக்கம், குளிர்ச்சி, மூத்திரப் பெருக்கம், மலப்போக்கு ஆகிய இவைகள் உண்டாகும். இது உஷ்ணசீதளத்தை யுடையது.

## செவ்விளநீரின் குணம்.

தினமும் செவ்விளநீரை அருந்தில் பித்தவிருத்தி, தாகம், இளைப்பு, அயர்வு, பற்பல க்ஷயம் இவைகள் நீங்கும்.

## புதிய பழைய இளநீரின் குணம்.

இள வழுக்கையுடைய புதிதாகப் பரிக்கப்பட்ட இளநீரை உண்பவர்களுக்குப் பித்தகோபம் விலகும்.

பழய இழநீரை யுண்டால் ஜலதோஷம் முதலியபல ரோகங்கள் உண்டாகும். பரிகாரம் தேன்.

## பச்சை இளநீரின் குணம்.

கிழ்ப்பிரமேகம், பழயஜுரம், கபாதிக்கம், எறிகிறச் சொறி, கண்ணோய் ஆகிப இவற்றை நீக்கும்.

## உண்பதற்குமுன் அருந்தும் இளநீரின் குணம்.

காலைப் புசிப்பிற்கு முந்தி இளநீரை உண்டால், பசி நீங்கலன்றிக் குன்மமாம். மாலையில் உண்டால் எரி கிருமிகள் ஒளியும். பரிகாரம் சீனிசர்க்கரை.

## உண்டபின் அருந்தும் இளநீரின் குணம்.

புசித்த பின்பு இளநீரை யுண்டால் வாதபித்த கோபம், தணிவதுமன்றித் தனிப்பித்த தோஷம் விலகும். தாராளமாக மலங்களியும். அதிதீபன முண்டாகும் நோய் அணுகாது.

மற்ற இளநீர் வகை குணம் 2-ம் பாகம் பார்க்க.

# பால்வகை.

## மாதர்ப்பால் பொதுகுணம் (முலைப்பால்.)

வெப்பம், ஜந்நிபாதம், வாதபித்த கபஜுரங்கள், திரிதோஷம், வாதகிரிச்சரம், நாவரட்சி, ஆகிய 7 வகை தோஷங்களை விலக்கி நன்மையைத்தரும். ஔஷத அனுபானத்திற்கும், கலிக்கத்திற்கும் ஆகும்.

## கருமை, செம்மை நிற மாதர்களின் பால் குணம்.

கரியநிற மாதர்ப்பால் கண்வயித்தியங்களுக்கேயன்றி ஔஷதங்களுக்குபயோகமாகாது. வியாதியில்லாத செம்மைநிற மாதர்ப் பால் வாதாதி மூன்று தோஷங்களையும் போக்கும்.

## பரத்தையர் பால் குணம்.

வேசையர்ப் பாலால் திரிதோஷங்கள், வாதரோகம், இரத்தச்சொறி, சிரங்கு, விரணம், கழல்வாதம், இவை யுண்டாகும். பரிகாரம் பசுவின் பால் அல்லது கோழி முட்டை.

## பசுவின் பால் பொதுகுணம்.

சூடு, கொழுமை, ஜிலிர்ப்பு, இம்மூன்றும் சமமாகும். தேகந்தழைக்கும், பலம் கொடுக்கும், சரீரம் பொன்னிர மாகும், மூளைக்கு வலுவைக்கொடுத்து ஞாபகசக்தியுண் டாக்கும், தாதுபுஷ்டி அதிகரிக்கும், மலசுத்தியாகும். இது பாலருக்கும், விர்த்தருக்கும், பழய ஜுரம், விரணம், சூலை, பிரமேகம், துர்ப்பலம், அதிசுட்கரோகம் ஆகிய இவையுடையவர்களுக்கும் ஆகும். நீர்தாரையிலும், குண் டிக்காயிலும் கல்விளையும், மண்ணீரலை பலஹீனப்படுத்தும் பரிகாரம் தேனும், சர்க்கரையும்.

## வெண்மை, செம்மை, கருமை, கபிலை என்னும் இன்னிரமுள்ள பசுக்களின் பால்குணம்.

வெண்மைநிற பசுவின்பால் பித்த கோபத்தையும், செம்மைநிற பசுவின்பால் வாததோஷத்தையும், கருமை நிற பசுவின்பால் கபரோகத்தையும், கபிலைநிற பசுவின் பால் திரிதோஷத்தையும் போக்கும்.

கபிலை என்பது கருமை கலந்த பொன்நிறமாம்.

## காராம்பசுவின் பால் குணம்.

விழிப்பிணி, க்ஷயம், மற்ற பாலின் தோஷங்கள், ரத்த பித்த ரோகம், இவைகளை நிக்கும். இராஜவசியமாம்.

## மூன்றுமீற்று நான்காமீற்று பசுக்களின் பால் குணம்

மூன்றுமீற்றுப் பசுவின்பால் நீடித்த சிலேஷ்ம நோயை நீக்கும். நான்காமீற்றுப் பசுவின்பால் வாதாதி

மூன்று தோஷங்களையும் நீக்கும். சரீர சௌக்கியமும் மகிழ்ச்சியுமுண்டாகும்.

## ஆகாப்பசுவின் பால் குணம்.

ஆகாப்பசுவின் பால் ஐவகைப்படும் அவையாவன:—

அரணைநோய், தாராநோய், மிகவும் சுற்றுதலோடு தூங்கித்திரிந்தது, மலம் அருந்தல், சுடுகாட்டெலும்புண்ணல், ஆகிய இவைகளுடைய பசுவின் பால் சேருமாகில் வாதாதி மூன்று தோஷங்களும் மார்ப்பிற் சேர்ந்து க்ஷயத்தை விளைவிப்பதும், ஆயுளை குறைப்பதுமாம். பரிகாரம் சீனக்கர்க்கண்டு, மிளகு, வுளுந்து.

## இறவில் சுரந்து பகலில் கறக்கின்ற பசுவின் பால் குணம்.

இது குழந்தைகளுக்கு பக்குவமானது. ஆனால் சில சமயம் பற்பல கபநோயையும், தாம்பூலம், புளிப்பு முதலியது சேருமிடத்தில் கெடுதியையும் செய்யும். உட்சூட்டையும், வெப்பத்தையும் நீக்கும். பரிகாரம் சுக்கு.

## பகலில் சுரந்து இரவில் கறக்கின்ற பசுவின் பால் குணம்.

பகலிற் சுரந்து இறவில் கறக்கின்ற பாலை விதிப்படி காய்ச்சியருந்த தேக அழற்சி, கபரோகம், சுவாசம், பித்த கோபம், நேத்திர வியாதி, விந்துவின் கெடுதியால் அனுசரித்த சிற்சில ரோகங்கள் ஆகிய இவைகள் நீங்கும். தேகத்தில் மினுமினுப்பும், சுக்கிலப்பெருக்கமும், மாதர் மேல் விருப்பமும் உண்டாகும். இது பத்தியத்திற்கும் உதவும்.

## எருமைப்பால் குணம்.

தேகந்தழைக்கும், பலம் கொடுக்கும், தாதுபுஸ்டியாகும், மந்தமும் அற்பபித்தமுமாம், வயிற்றில் கழிம்புகட்டும், திமிர்வாய்வைத் தருவிக்கும், தெளிந்த புத்தியின் கூர்மையையும், நல்ல மருந்தின் குணத்தையும் கெடுக்கும். பரிகாரம் சுக்கும், தேனும், சர்க்கரையும்.

இந்தப்பாலை ஓலையில் ஏற்றி துத்திக்கொம்பினுல்த் துளாவி சுண்டக்காய்ச்ச அப்படியே தோய்ந்து போகும் அதிற்கற்கண்டு சேர்த்துக் குடித்துவர மூலரோகம் போய் விடும்.

## வெள்ளாட்டுப்பால் குணம்.

வாதபித்த தொந்தம், சுவாசகாசம், சீதாதிசாரம், கபதோஷம், விரணம், வாதத்தால் உண்டாகிய வீக்கம் முதலிய துன்பங்கள்நீங்கும் நல்லபசியுண்டாகும். பழமையான ஜுரங்களுக்கும், எலும்புருக்கி ஜுரத்துக்கும், மார்பின் புண்களை ஆற்றுவதற்கும், தேகத்தின் சூட்டை ஆற்றி சாந்தப் படுத்துவதற்கும் அதிக உபயோகப்படும். என்று மிதை கொப்பளிப்பதனுல் தொண்டைக்கம்மல், உண்ணாக் குவீக்கம், நாவைப்பற்றிய ரோகங்கள் நீங்கும். கர்ப்பஸ்திரீகளுக்கும், ஈரல் பஞ்சைப் பட்டவர்களுக்கும், காக்கை வலிப்புக்கும் உதவாது பரிகாரம் தேனும், சர்க்கரையும்.

## செம்மறி ஆட்டுப்பால் குணம்.

பித்த சிலேஷ்மதொந்தம், வயிற்றுப்பிசம், மேற்சுவாசம், அதிகவாய்வு இவையுண்டாகும். குடலுக்கும், மூளைக்கும் பலம் கொடுக்கும். மார்பின் புண்ணையாற்றும். சூட்

டைப் பற்றிய இருமலை நிறுத்தும். சிரசைப் பற்றிய நரம்புகளுக்குதவாது. பரிகாரம் தேனும், சர்க்கரையும்.

### பாத்திர பேதத்திலுண்டாகிய பால் குணம்.

செப்புப்பாத்திரத்தில் காய்ச்சிய பால் வாதசிலேஷ்ம தொந்தத்தையும், பொன், மண் இப்பாத்திரங்களிற் காய்ச்சிய பால் பித்ததோஷத்தையும், வெள்ளி, வெங்கலம், இரும்பு இப்பாத்திரங்களிற் காய்ச்சிய பால் காசரோகத்தையும் போக்கும்.

### ஆடையெடுத்த பால் குணம்.

ஏடு நீக்கிய பாலால் அக்கினி மந்தமும், சப்த தாதுக்களின் ஜீரணமும் உண்டாகும். வாத பித்த கபதோஷங்கள் நீங்கும்.

### காய்ச்சும் பாலுக்கு நீரளவை கூறல்.

பசு, வெள்ளாடு இவைகளின் பாலுக்கு 8-ல் 1 பங்கும், எருமை, செம்மறியாடு இவைகளின் பாலுக்கு 4-ல் 1 பங்கும் ஜலம்விட்டு காய்ச்சவேண்டும். எவ்வித பாலுக்கும் சுக்கு, சிறுகாஞ்சொறி வேர் சேர்த்துக் காய்ச்சினால் வெள்ளாட்டுப் பாலுக்கு நேராமென்க.

### பாலேட்டின் குணம்.

பயித்திய நோவும், கொடிய வாந்தியும், மூர்ச்சையும் நீங்கும். மிகுபலமும், சுக்கிலமும், ஜடராக்கினியும் விருத்தியாகும். இதை துர்பல தேகிகள் உண்டாலும் குற்றமில்லை.

### சீப்பால் குணம்.

தேகத்துக்கு பலம் கொடுக்கும், மந்திக்கும். நீர்தாரையில் கல்விளையும் பரிகாரம் சர்க்கரை.

## தேங்காய்ப் பால்குணம்.

வாதவிகாரம், பித்தாதிக்கம், கரப்பான், சுக்கில விருத்தியுமாம். முற்றின தேங்காய்பால் சாப்பிட பேதியாகும். பரிகாரம் எலுமிச்சம்பழ முதலிய புளித்த பதார்த்தங்களாம்.

## பசும்பாலின் பத்தியம்.

பசும்பாலை சாப்பிட வேண்டுமானால் புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கைப்பு, கார்ப்பு, இனிப்பு என்னும் 6 சுவையில் சுக்கிலத்தை விர்த்தி செய்யும்படியான கார்ப்பு, இனிப்பு என்னும் 2 சுவையுள்ள வஸ்துக்களை அனுப்பானமாகச் சேர்த்துக் கொண்டு உண்ணென சிலர் சொல்லுவார்கள். ஆனாலும் அந்த 2-சுவையில் ஒரு சுவையாகிய கார்ப்புள்ள பொருள் நோயுள்ளபோது அனுப்பானமாகக் கொள்ளலாம். மற்றகாலத்தில் பாலை தனியேஉண்ணவேண்டில் அதற்கு அனுபானம் கற்கண்டுப் பொடி பொருந்தும். அன்னத்துடன் உண்ணவேண்டில் மதுரமுள்ள பழம் அனுப்பானமாகப் பொருந்தும்.

## பால் அருந்துதற்கு நாழிகை யளவைகூறல்.

பசுவின்பால் கறந்த ஒண்ணேகால் மணிக்குள் அல்லது இரண்டு மணிக்குள் உண்ணக் கடவை. இவ்வாறுண்டால் அந்தப்பால் தேவாமிர்தத்தை நிகராகும்.

## காலையில் பச்சைப் பால் உண்பதின் குணம்.

சூரியன் உதய காலத்தில் கறந்து சுடுகை ஆறுவதற்குமுன் பருகும் பசுவின் பாலினால் கை, கால், உடம்பு

களில் எரிவு, காமாலை, ரத்தபித்தரோகம், பாண்டு, உஷ்ணத்தால் பிறந்த மார்புச்சளி இவைநீங்கும். மேனியிடும், சுக்கில விர்த்தியாகும். அன்றியும் குழந்தைகட்கும் பொருந்தும்.

மற்ற பால்வகை இரண்டாம் பாகம் பார்க்க,

## தயிர் வகை.

### பசுவின் தயிர் குணம்.

பசியுண்டாக்கும், தாகத்தை அடக்கும், இசிவுறும், ஆயாசம், காசம், சரீர எரிச்சல், தீனிப்பையிலுள்ள சூடு, ஜீரணரோகம் ஆகிய இவைகள் நீங்கும். வாய்வு உண்டாகும், முதுகுதண்டு வலிக்கும். பரிகாரம் இஞ்சி, புதினா.

### பசுவின் புளித்த தயிர்குணம்.

சூட்டை அகற்றும், சாதத்தை ஜீரணப்படுத்தும், தாகத்தை அடக்கும், பற்களின் ஈறை வீங்கச்செய்யும். பரிகாரம் தேன் கலந்த நீர்.

### ஆடை எடுத்த தயிர்குணம்.

சிலேஷ்மரோகம், ஆயாசம், மூத்திரக்கிரிச்சரம், வாத கிராணி, குஷ்டமேகம் இவைகளை நீக்கும்.

### எருமைத்தயிர் குணம்.

எரிச்சலும், பித்தநோயும் போக்கும். கபத்தைப்பற்றிய கரப்பான், வாதரோகம், புத்திமந்தம், கண்ணுக்கு குளிர்ச்சி, அதிதூலரோகம் ஆகிய இவைகள் உண்டாகும். பரிகாரம் சுக்கு, சீரகம், இஞ்சி, புதினா.

### வெள்ளாட்டின் தயிர், மோர், பாலேடு இவைகளின் குணம்.

தயிர் அதிக உஷ்ணம், பாலேடு மந்தம், மோர் பிரமேக ரோகத்தை போக்கும். பரிகாரம் கொத்தமல்லியிலை.

### செம்மறியாட்டு தயிர் குணம்.

கரப்பான், புடை, மூலக்கடுப்பு, ரத்தமூலம், வாத ரோகம், ஆகிய இவைகள் பலப்படுவதுமன்றி சரீரத்துக்கு துன்பம் உண்டாகும். பரிகாரம் இஞ்சி, புதினா.

## மோர் வகை.

### பசுமோர் குணம்.

வீக்கம், மகோதரம், வயிற்றுவலி, பாண்டுரோகம், பித்தகோபம், இடுமருந்தால் வரும் நோய்கள், பேதி, திரிதோஷம், அக்கினிமந்தம், வெப்பம் ஆகிய இவைகள் போகும்.

### எருமைமோர் குணம்.

தாகம், கிராணிரோகம், மலக்கழிச்சல், காமாலை, கிருமி, ஆகிய இவைகள் நீங்கும். போகவிருப்பமாகும். சிறந்த மானிடருக்கு கெடாத அமுதமாகும்.

---

**ஸ்தன்னியத்தில் பாலில்லாத மாதர்களுக்கு:—**

ஓரிலைத்தாமரையை எலுமிச்சங்காயளவு அரைத்து அரை ஆழாக்குப் பசுமோரில் 2 வேளையும் 40 நாள் கொடுக்கில் ஸ்தன்னியத்தில் பால்சுரக்கும், வாதமேகமும் போகும்.

# வெண்ணெய் வகை.

## மாதர்மூலைப்பால் வெண்ணெயின் குணம்.

கண், கை, கால், நாசி இவ்விடங்களிலுண்டாகும் எரிச்சல் நீங்கும்.

## பசு வெண்ணெயின் குணம்.

கண்ணோய், கண்ணெரிச்சல், பீளை, சாரல், தேக வெப்பம், மார்ப்பின் வறட்சி, விக்கல், பிரமேகரோகம் இவைபோம். தீபாக்கினி உண்டாகும், உடல் பருக்கும், பொன்னிறமாகும், கண்குளிரும், மலம்கழியும், மந்திக்கும். பரிகாரம் சர்க்கரை, கற்கண்டு.

## எருமை வெண்ணெயின் குணம்.

பித்தமூத்திர கிரிச்சரம்நீங்கும், மலாசயக்கிருமி, அக்கினி மந்தம், வாதரோகம், கபாதிக்கம், கரப்பான், தொந்தரோகம் இவைகள் உண்டாகும். பரிகாரம் சுக்கு, மிளகு.

## வெள்ளாட்டு வெண்ணெயின் குணம்.

ஜுரரோகம், பித்தநோய், கரப்பான், இவை நீங்கும். பசியை உண்டாக்கும்.

# நெய் வகை.

## பசுவின் நெய் குணம்.

உஷ்ணம், வரட்சி, தாகம், உழலைப்பிணி, அதிசுட்கரோகம், வாந்தி, பித்தாதிக்கம், வாதவிஷம், விரணப்பிரமேகம், வயிற்றிலெரிவு, பித்தவிக்கல், இருமல், வயிற்றுவலி, சினைப்பு, குடல் நெளிதல், அஸ்தி, சோம்பல், மூல

ரோகம், ஆகிய இவைகளை நீக்கும். தேகம் பொன்னிறமாகும், கண் குளிரும், ஒளி உண்டாகும், பதார்த்தங்களின் ருசியை அதிகரிக்கச்செய்யும், தீபனமாகும். சூட்டுதேகத்தோருக்கு மார்பின் இரத்தத்தை தோயபண்ணும். பரிகாரம் பதார்த்தங்களில் சேர்த்து பரிமாரவேண்டியது அல்லது உருக்கிக்கொள்ளவேண்டியது.

## காராம்பசுவின் நெய்குணம்.

நேத்திரத்திற்கொளிவும், சரீரபுஷ்டியும், பொற்சாயலும், உண்டாகும். கண்,புருவம்,நெற்றி,சிரசு இவைகளைப் பற்றிய நோய்கள் விலகும்.

## எருமை நெய்குணம்.

அறிவு, அழகு, கண்ணொளி இவைகள் மத்திபமாம். வாதபித்ததோஷம், கரப்பான் இவையுண்டாகும். பரிகாரம் எலுமிச்சம்பழம், சுக்கு, மிளகு.

## கலப்பு நெய்க்குணம்.

எருமை நெய்முதலிய கலப்பு நெய்யால் சுக்கிலம் பெருகும், தீபனமுண்டாம், பித்த தோஷமும், தேக கொதிப்பாலாகிய பித்தஜுரமும் போம்: உடலும் பலக்கும்.

## வெள்ளாட்டு நெய்க்குணம்.

சிலேஷ்மாதிக்கத்தையும், வாதகோபத்தையும் போக்கும், சரீரத்தை வளர்ப்பதுமன்றி கண்ணுக்கொளியையுண்டாக்கும். பத்தியத்திற்கும் உதவும். செம்மறியாட்டு நெய்யால் கபநோய் அதிகரிக்கும். பரிகாரம் இஞ்சி.

மற்ற தயிர், மோர், நெய் வகைகள் 2-ம் பாகத்தில் காண்க.

# அரிசிகளின் வகை.

## கல்லுண்டைச் சம்பா அரிசியின் குணம்.

மல்யுத்தக்காரரும் எதிற்கக்கூடாத புஜபலமும், மிகு வார்த்தையும் உண்டாகும்.

## மல்லிகைச்சம்பா அரிசியின் குணம்.

நாவுக்கு ருசி, சரீரத்துக்கு சௌக்கியத்தையும், உறுதியையும்தரும். கரப்பான், பிரமேகம், நேத்திர வெப்பம் ஆகிய இவைகளைப் போக்கும்.

## மணிச்சம்பா அரிசியின் குணம்.

அதி மூத்திரத்தை விலக்கும். அதிக சுகத்துடன் உடலையும், விருத்தர், பாலர்களையும் வளர்க்கும்.

## கோரைச் சம்பா அரிசியின் குணம்.

பயித்தியம், உட்சூடு, பிரமேகம், நமைச்சல் இவைகளை நீக்கும் சௌக்கியந்தரும் குளிர்ச்சி யென்பர்.

## மிளகுச்சம்பா அரிசியின் குணம்.

சௌக்கியத்தைக் கொடுத்துத் தீபாக்கினியை வளர்க்கும் மகாவாத முதலிய பலவித ரோகங்களைப் போக்கும்.

## சீரகச்சம்பா அரிசியின் குணம்.

மதுரமுள்ளது, மீளவும் உண்பதற்கான தீபனமுண்டாகும். அற்பவாத ரோகங்கள் நீங்கும்.

## களான்சம்பா அரிசியின் குணம்.

உறுதியையும், சௌக்கியத்தையும் தரும். சிற்சில வாதரோகங்களை நீக்கும்.

## மைச்சம்பா அரிசியின் குணம்.

அரோசகம், வாதபித்ததொந்தம், தனிவாதகோபம், வாந்திரோய் ஆகிய இவைகளைப் போக்கும்.

## கோடைச்சம்பா அரிசியின் குணம்.

முத்தோஷத்தால் பிறந்த வாதவலியும், சரீரத்திலுள்ள சிற்சில நோய்களும் விலகும்.

## காடைச்சம்பா அரிசியின் குணம்.

பிரமேகஜுரமும், சில அற்ப நோய்களும் நீங்கும். சுக்கில தாதுவிருத்தியும், பலமும் உண்டாகும்.

## குன்றிமணிச் சம்பா அரிசியின் குணம்.

அற்பவாத ரோகமுதலிய சிற்சில நோய்கள் நீங்கும். சரீர பலமும் சுக்கில தாதுவும் விருத்தியாகும்.

## அன்னமழகி அரிசியின் குணம்.

மிகுமதுரமுள்ளது, சகல ஜுரங்களையும், பித்த வெப்பத்தையும் போக்கி தேகத்திற்கு சௌக்கியத்தைக் கொடுக்கும்.

## கார் அரிசியின் குணம்.

அதிகபலம், சரீரபுஷ்டி, மந்தகுணம், தனிவாதம் விளைவு, கரப்பான் இவைகள் உண்டாகும் வயிறு கனக்கும், மந்திக்கும், மலத்தைக்கட்டும். பரிகாரம் மிளகு, சீரகம், அதிக உழைப்பு.

## பச்சை அரிசியின் குணம்.

பத்தியத்திற்கு விலக்கான பச்சரிசியினால் தனிவாத கோபமும், அலசரோகமும், மிகுந்த பலமும் உண்டாகும். பித்த யெரிச்சல் நீங்கும். பரிகாரம் அச்சிவெல்லம்.

## புழுங்கல் அரிசியின் குணம்.

குழந்தைகள், வாதரோகியர்கள், அரும்பத்தியமுள்ளவர்கள் இவர்களுக்கும் உதவும். ஆனல் உடலுக்கு உறுதியில்லை. பரிகாரம் நெய், மாம்சம், பால்.

## பழய அரிசியின் குணம்.

விருத்தர், பாலர், ரோகிகளுக்கும் ஆகும். பசியும், குளிர்ச்சியுமாம். கபமும், சிற்சில நோயும் நீங்கும்.

## சவ்வரிசியின் குணம்.

பிரமேகம், அஸ்தி சிராவரோகம்; வெண்மேகம், உதிரமேகம் இவைபோகும். சுக்கிலமும், கபமும் விளையும். பரிகாரம் சீனைக்கற்கண்டு.

## கோதுமை அரிசியின் குணம்.

நல்லபலம், சுக்கிலம், பித்தம் இவைகளை விருத்திசெய்யும். தனிவாத கோபத்தையும், பிரமேகத்தையும் நீக்கும். மந்தப்பிரசவத்திற்குக் கொடுத்தால் சீக்கிரம் சிசுவை வெளிப்படுத்திவிடும். பரிகாரம் பச்சக்கொத்தமல்லி யிலை, கருகப்பிலை துவயல்.

## கேழ்வரகின் குணம்.

பஞ்சந்தாங்கி யென்கிற கேழ்வரகு அதிக பலத்தை உண்டாக்கும். சுத்தவாதத்தை வருவிக்கும் அல்லது பித்தவாதத்தையாவது உண்டாக்கும், சூடும், மூலஜுரமும் அதிகரிக்கும். பரிகாரம் நெய், வெண்ணை, எலுமிச்சம் வூருகாய், இஞ்சி.

---

மூலநிவாரண மோதிரம் 1-க்கு விலை ரூ 2.
விலாசம்:- டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

## கம்பு அரிசியின் குணம்.

நெருங்கிய நமைச்சலையும், சிரங்குகளையும், வீரியத்தையும் உண்டாக்கும். சரீர வெப்பத்தை நீக்கும். குளிர்ச்சியைத்தரும். பரிகாரம் புதினா துவயல்.

## சாமை அரிசியின் குணம்.

தாகஜுரம், பிரமேகம், மகத்வாதநோய், சோபா ரோகம் இவை நீங்கும் தேகபுஷ்டியுண்டாகும்.

## தினை அரிசியின் குணம்.

ஜன்னிபாதஜுரம், கபரோகம், சுத்தவாதம், சோபா ரோகம் இவைகளைப்போக்கும் பித்தத்தையும், சீக்கிரம் பசியையும் உண்டாக்கும். பரிகாரம் எலுமிச்சம்பழம்.

## செஞ்சோள அரிசியின் குணம்.

அற்பகிரந்திகள், விரணங்கள், மந்தரோகம், கரப்பான் இவைகள் அதிகரிக்கும். சரீர அழகும் பசியும் விலகும். பரிகாரம் பால் அல்லது வெண்ணெ.

## கருஞ்சோள அரிசியின் குணம்.

நமைச்சல், கிரந்தி, விரணம், அயர்வு, இவைகளை உண்டாக்கும். மாறுநிறமான அழகைத்தரும். பரிகாரம் இஞ்சி, காடி, பால் அல்லது வெண்ணெய்.

மற்ற அரிசிவகைகளை 2-ம் பாகத்தில் காண்க.

---

கூந்தல்வளரும் குளிர்ச்சி தைலம் புட்டி 1-க்கு விலை ரூ 1.
கூந்தல் அழகுடன் கருத்து நீண்டு நெருங்கி அடர்த்தியாய் வளரும், கண்களுக்கு குளிர்ச்சியையும், விசேஷ பிரகாசத்தையும் உண்டாக்கும் முகதேஜஸ், உற்சாகம், ஆனந்தம் ஏற்படும் மனோரம்மியமான வாஸனை வீசும், தலைவலி, கண்ணில்நீர்வருதல் முதலிய வியாதிகளை நிறுத்தும்.
விலாசம்:— டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை

# புசிப்புவகை.

## பசியின் குணம்.

பசியினால் வனப்பு, பலம், மகிழ்ச்சி, ஆசை, ஆகாரம், பேச்சு இவை நீங்கும். அன்னரசத்தால் வளருகின்ற சப்ததாதுக்களுக்கு விகற்பமும், மூப்புத்தன்மையும், சுற்றத்தாற் விரோதமும் உண்டாகும். பரிகாரம் பசிவேளை தப்பாமல் சாப்பிட வேண்டும்.

## போஜனகால விதி.

தர்மசாஸ்திரத்திற்கூறிய இரண்டுகால போஜனமே நலமாம் அதுதப்பி மூன்றுகால போஜனம் வேண்டுமானால் காலை 8 மணிக்கும், பகல் 2 மணிக்கும், இரவு 8 மணிக்கும் நலம்பெற உத்தமம்.

## போஜனம் செய்விதி.

போஜனமுதலில் மதுர வஸ்துவும், மத்தியில் புளிப்பு, உப்பு, உரைப்பு, இலைக்கறிகளும், முடிவில் துவர்ப்பு, சம்மந்தமான புளித்த தயிர், ஊறுகாய்கள் உண்ணில் இன்பத்தையடைவாய்.


கெர்ப்ப எண்ணெய் புட்டி 1-க்கு விலை ரூ 2—8—0

மாதர்களுக்கு மாதாந்தரத்தில்வரும் வயிற்றுவலியை அதேநாளில் அவசியம் நிறுத்தும், காலகிரமப்படி பஹிஷ்டையாக்கும், எவ்வித கெர்ப்ப நோய்களையும் சொஸ்தமாக்கும், கட்டாயம் கெர்ப்பம் தரிக்கும், அது கெடாமல் நிலைநிறுத்தும், அட்டியில்லாமல் அழகும் பலமுள்ள சிசு உற்பத்தியாகும்.

விலாஸம்:—டி. என். சிதாராமய்யர் கம்பெனி, மதுரை.

## போஜன அளவை கூறல்.

சகலதேகிகளுக்கு, முக்கால்வயிறு உணவேயன்றி முழு உணவு இல்லை. அதன் விபரம் அன்னமும், கறிகளும் கூடி அரைவயிறும், பால், மோர், ஜலம் கூடி கால் வயிறும், ஆக முக்கால் வயிறு உணவேயாம். இன்னும் கால் வயிறு இடைவெளி வைத்ததற்கு காரணம், சமான வாய்வும், அனல்பித்தமும் ஜொலித்து அவ்வுண்டியை பஸ்மஞ் செய்வதற்கேயாம்.

## நீர் அருந்தும் கிரமம்.

நீரை அண்ணாந்து அருந்தில் பாதிரியவாதமும், குனிந்தருந்தில் இருமலும் உண்டாகும். பாத்திரத்தை வாயால் கடித்து அருந்தில் ஒருரோகமுமில்லை.

## உண்டபின் வெந்நீரருந்துதலின் குணம்.

போஜனந்தத்தில் திருப்தியாகும்படி வெந்நீரை ஒரு தரமாக உண்டால், ருட்சை, வாதாதிக்கம், விதாகம், அலசம், வயிற்றுப்பிசம் ஆகிய இவைபோம். ஆயுசும், சுக்கிலமும் விர்த்தியாகும்.

## உண்டபின் குருநடைக்கொள்ளுதலின் குணம்.

இராபோஜனம் செய்தவுடன் தனது காலால் சிறு நடையாக 100 அடி உலாவியபின் நித்திரைக்கொள்பவர்களுக்கு முன்பு உண்ட அன்னத்திற்சேர்ந்த பதார்த்தங்களெல்லாம் ஒன்ருகக்கலந்து ஜீரணிப்பதுந்தவிர அவ்வுண்டியில் திரிதோஷமும் சாருதென்றுணர்க.

### புசித்தபுசிப்பின் பிரிவு கூறல்.

தீனிப்பையில் தங்கிய உணவானது பிரியும் வகை:- ஒருபங்கு கிருமிகளுக்கும், ஒருபங்கு மலத்திற்கும், ஒரு பங்கு ஜடாராக்கினிக்கும், ஒருபங்கு தேகத்திற்குமாம்.

### புசித்த அன்னசாரச் செய்கை கூறல்.

ஒருநாளுண்ட உணவின் அன்னரசமானது அன்றைக்கு ரசதாதுவை நனைத்து ஊறி தங்கும். 2-ம் நாள் உண்ட அன்னரசம், அந்த ரசதாதுவில்ஏற, முன்புஊறி நின்ற ரசம் ரத்ததாதுவில் பாயும். இவ்வாறே 3-ம் நாள் மாமிசதாதுவிலும், 4-ம் நாள் மேதோ தாதுவிலும், 5-ம் நாள் அஸ்திதாதுவிலும், 6-ம் நாள் மகஜை தாதுவிலும், 7-ம் நாள் சுக்கிலதாதுவிலுமாகச் சென்று அத்தாதுக்களை விருத்தியடையச்செய்து 8-ம் நாள் தேகத்துக்கு குன்றாத வன்மையைக் கொடுக்கும்.

## உண்கலவகை.

### தங்கக்கலத்தின் குணம்.

தங்கபாத்திரத்திற் புசிக்கில், சுக்கில விருத்தியும், சமஅக்கினியும், வன்மையும், உற்சாகமும் உண்டாகும் பித்த சோபை நீங்கும்.

### வெள்ளிக்கலத்தின் குணம்.

வெள்ளிப்பாத்திரத்தில் அருந்த, சிலேஷ்ம கோபமும், பித்தகோபமும், நீங்கும். தேஜசும், மகிழ்ச்சியும் உண்டாகும்.

## செம்புக்கலத்தின் குணம்.

செப்புப்பாத்திரத்தில் உண்ணில் சரீர சௌக்கியம், தேஜஸ், கண்ணுக்கொளிவு, சுகிர்தம் இவை உண்டாகும். ரத்தபித்த ரோகம் விலகும்.

## வெண்கலத்தின் குணம்.

வெண்கலபாத்திரத்தில் புசிக்க சோர்வும் உதிரபித்தமும் போகும்.

## உண்கலத்தில் எவை முக்கியம்?

மனோஉற்சாக போஜனத்திற்கு, வாழையிலைநன்று. மற்றஇலைகள் மத்திமமாம் தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம் இவைகளாற்செய்த உண்கலங்கள் மிகவும்நலமாம். இவைகளைவிட மண்கலமேசிறந்தது. இதில்புசிக்கில், க்ஷயமும், பாண்டுரோகத்தாற்பிறந்த நீர்ச்சுரப்பும் விலகும்.

## வாழையிலையின் குணம்.

வாழையிலையில் சாப்பிட்டால் சரும தாதுவிற் பளபளப்பும், சுகபோகங்களும் பொருந்தும். மந்தாக்கினி, துர்ப்பலம், க்ஷீணவாதம், சிலேஷ்ம அரோசகம் இவை நீங்கும் பித்த கோபம் சாந்தமாம்

## தாமரை இலையின் குணம்.

தாமரை இலையில் புசிக்கில், வெப்பமும், வாதரோகமும், மந்தாக்கினியும், உண்டாகும். சம்பத்து நீங்கிவிடும். பரிகாரம் நெய்.

---

ஆத்மரட்சாமிர்தமென்னும் வயித்திய சார சங்கிரகம்.
விலை ரூ 2—0—0.
விலாசம்:—டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

# சித்திரான்னவகை.

## பொங்கல் அன்னத்தின் குணம்.

சம்பாபச்சரிசிப் பொங்கலன்னம், விந்துவை வளர்ப்பிக்கும். மற்ற பச்சரிசிப்பொங்கல். அன்னமெல்லாம்,சகல அலசரோகம் வயிற்றுப்பிசம், அங்கலசனவாதம், வெப்பம் இவைகளை உண்டாக்கும். பரிகாரம் இஞ்சி.

## பாற்பொங்கலின் குணம்.

ருசியுள்ள பாற்பொங்கலருந்துவதினால் தனிவாத கோபமும், இதில் நெய்யுஞ் சருக்கரையும் சேர்ந்தால் சிலேஷ்மாதிக்கமும், உண்டாகும். ஜுர அந்தத்தில் ஜனித்த பித்தமும், ரத்தபித்தமும் நீங்கும் பரிகாரம் மிளகு, சுக்கு.

## பருப்புப் பொங்கலின் குணம்.

பச்சைப்பருப்புப் பொங்கல் அன்னத்தினால் வீரிய விருத்தியும், வாதப்பெருக்கமும் உண்டாகும் பித்த கோபம் விலகும். பரிகாரம் இஞ்சி.

## சருக்கரைப் பொங்கலின் குணம்.

அருசி, வாந்தி, பயித்தியம் இவைகளை நீக்கும்.

## மிளகோதனத்தின் குணம்.

பொருமுகின்ற வாயு, குடலிரைச்சல், கபாதிக்கம், பித்தகோபம் இவைவிலகும். தீபனமுண்டாகும்.

## புளியோதனத்தின் குணம்.

வமனவேகம், அருசி, பயித்தியம் இவைகள் போகும்.

## கடுகோதனத்தின் குணம்.

கடுகும், புளியும் சேர்த்து சமைத்த அன்னத்தை உண்டால் வாததோஷமும், சிலேஷ்மகோபமும் ஒழியும்,

## எள்ளோதனத்தின் குணம்.

வாதபயித்திய தொந்தம் விலகும். சிலேஷ்மாதிக்கமும், தேகவலுவும் உண்டாகும். பரிகாரம் எலுமிச்சம்பழம்.

## உழுந்தோதனத்தின் குணம்.

சிலேஷ்மவாத தொந்தமும், அலஜரோகமும், சரீர வளமையும்அதிகரிக்கும். பித்தகோபம் நீங்கும். பரிகாரம் நெய்.

## ததியோதனத்தின் குணம்.

மாறுஉட்சூட்டையும், பித்தநோயையும் விலக்கும். உடலை இரக்ஷிக்கும் ஆதலால் இது சிறந்தது.

## தோசையின் குணம்.

அரிசி, உழுந்து இம்மாவுகளால்ச் செய்த தோசையானது பித்தகோபத்தையும், வாதசிலேஷ்ம தொந்தத்தையும் நீக்கும்.

## சம்பாரத்தோசையின் குணம்.

பெருங்காயம், மிளகு, இஞ்சி, கருவேப்பிலை முதலிய பரிசுத்தமுள்ள பல சம்பாரஞ் சேர்த்த தோசையானது வாததோஷமும், பயித்திய சிலேஷ்மகோபமும் விலக்கும். சுக்கில விருத்தியை உண்டாக்கும்

## சுத்தஇட்டலி, சம்பாரஇட்டலி இவைகளின் குணம்.

அரிசி, உழுந்து இம்மாவுகளாற்செய்த சுத்த இட்டலியால் பித்தகோபம் நீங்கும். காரஞ்சேர்த்த மேற்படி மாவுகளாற்செய்த சம்பாரஇட்டலியால் திரிதோஷங்கள் அதிகரிக்காது.

# அன்னத்தின் வகை.

## சுத்த அன்னத்தின் குணம்.

சுத்த அன்னம் என்பது பழய அரிசியை தவிடு, நொய் முதலியவை போம்படி நன்ருக தீட்டி, முழு அரிசியாக ஆய்ந்து எடுத்து இழவென்னீரால் கழுவி வஸ்திரத்திற்கொட்டி, சற்றே ஆறவைத்து ஒரு பாண்டத்தில், அரிசிக்கு மூன்றுபங்கு ஜலம்விட்டு அடுப்பேற்றி அது நுரைகட்டிக்கொதிக்கும்பொழுது அந்த அரிசியை அதிற் போட்டு முக்காற்பாகமாக வெந்தவுடன் கறண்டியால் துழாவி வடித்துக்கொண்டு மறுபடியும் தணலில்வைத்து பக்குவமாயிருக்கும் சமயத்தில் இறக்கிக்கொள்வதாம்.

இவ்வன்னத்தை நற்கறிகளோடு உண்ணக்கடவை. அது வாத, பித்த, சிலேஷ்மம் என்னும் மூவிததேகிகளுக்கும் முக்கியமாக உதவும். பத்தியத்திற்கும், வாதாதி மூவித ரோகங்களுக்கும் ஆகும். அன்றியும் குடலைப்பற்றிய நோய்கள் முழுமையும் விலகும். குற்றமில்லை.

## அன்னத்தின் குற்றங்கள்.

அன்னத்திற்கு எப்போதும் குற்றமேஇல்லை. ஆயினும் பாகபேதங்களினல் 8 வகை தோஷங்கள் உண்டாகின்றன. அவையாவன:—

1 கஞ்சி, சிக்கிக்கொள்வது இதனல் தூமம், விதூமம்என்கிற அஜீரணங்கள் பிரப்பனவாம் பரிகாரம்இஞ்சி.

2 அன்னம் குழைந்துபோவது இதனல் வாதபிரமேகம், இருமல், தூர்ப்பலம், பீநசம் இவை உண்டாகும். ஜடாராக்கினி அணைந்துவிடும். பரிகாரம் எலுமிச்சம்பழம்.

3 மையிர், கிருமி, உமி முதலியவைகளோடு சமைப்பது. இதனுல் அரோசக ரோகமுண்டாகும். பரிகாரம் உசார், விலக்கு.

4 நருக்கரிசி அன்னம். இதனுல் அலசரோகமுண்டாகும். பரிகாரம் இஞ்சி.

5 ஆறிஉலர்ந்த அன்னம். இதனுல் விதூமரோகமுண்டாகும். பரிகாரம் எலுமிச்சம்பழம், மோர்.

6 காந்தின அன்னம். இதனுல் ஜீரணதாது ரோகமுண்டாகும். பரிகாரம் இஞ்சி.

7 கொழியலரிசி அன்னம். இதனுல் ஆயுள்முதலானவை கெடும். பரிகாரம் ஜாக்கிரதை, விலக்கு, தவரினுல் எலுமிச்சம்பழம்.

8 நொந்து ஜலம் பிறந்து நூலிழைந்த அன்னம். இதனுல் அதிக நித்திரையும், சீதாதி ரோகங்களும் உண்டாகும். பரிகாரம் இஞ்சி.

## சம்பா பச்சைஅரிசி அன்னத்தின் குணம்.

சூடும் கொழுமையுமாம், சுத்த இரத்தத்தை உண்டாக்கும், அதிக வலுவைக்கொடுக்கும், தேகந்தழைக்கும், அழகு கொடுக்கும், ஜீரணமாகும், தாதுவிர்த்தியாகும், பித்தகோபத்தையும், கிரிச்சரத்தையும் நீக்கும். ஆனுல் குடற்கட்டு உண்டாகும், குளிர்ந்த திரேகத்திற்கு வாய்வு அதிகரிக்கும், குழந்தைகளுக்கு மாந்தத்தைஉண்டாக்கும். பரிகாரம் தவிடுபோகக்கழுவி ஜலத்தில் நன்ருக ஊறவைத்து தண்ணீர்போக்கவேண்டும், மிளகு, சீரகம்.

## கார் பச்சை அரிசி அன்னத்தின் குணம்.

குளிர்ச்சியும், வறழ்ச்சியுமாம், அசுத்த இரத்தத்தை உண்டாக்கும். அதிக வலுவைக்கொடுக்கும், தேகம் தளைக்கும், வயிறுகனக்கும், மந்திக்கும், மலத்தைகட்டும், வயிற்றில் வாய்வு அதிகரிக்கும். பரிகாரம் மிளகு, சீரகம்

## புழுங்கலரிசி அன்னத்தின் குணம்.

சூடும், வறழ்ச்சியுமாம், அற்ப இரத்தத்தை உண்டாக்கும், சொற்ப வலுவைக் கொடுக்கும். வாதகோபமும் வலிய ரோகங்களுமில்லை, பலஹீனருக்கும், குடல் புஷ்டியில்லாதவர்களுக்கும், நோயாளிகளுக்கும், சிறு குழந்தைகளுக்கும் ஆகும். தேகபுஷ்டி குறைந்துபோகும். பரிகாரம் ஆவின்நெய், பால், மாம்சம்.

## அற்ப சூடுகை அன்னத்தின் குணம்.

கொஞ்சம் சுடுகை அன்னமானது உத்தமத்திலும் உத்தமம். அது வாதபித்த கபங்களாலும், பீனசத்தாலும் விளைகின்ற நோயையும், அரோசகத்தையும் நீக்கும், சரீரத்துக்கு நன்மையைத்தரும்.

## அதிக சூடுள்ள அன்னத்தின் குணம்.

உதிரபித்தம், தாகம், பிரமை, மதரோகம், இவைகளை உண்டாக்கும். பரிகாரம் அற்ப சூடானபிறகு புசிக்கவும்.

## நன்ருக சமையாத அன்னத்தின் குணம்.

மலஜலம் சிக்குவதும் தவிர மருநாளும் ஜீரணமாகாது அவ்வன்னரசம் உடலிலும் பரவாது. பரிகாரம் இஞ்சி, அதிக உழைப்பு.

## பசுவின் பாலும், அன்னமும் புசித்தலின் குணம்.

சூடும் கொழுமையுமாம், சுத்த இரத்தத்தையுண்டாக்கும், அதிக பலம் கொடுக்கும், மார்புக்கும் நுரையீரலுக்கும் உறுதிக்கொடுக்கும், மார்ப்பின் புண்ணையும் இருமலையும் போக்கும், பித்த சோபமும், தாகமும் விலகும், தேகபுஷ்டியும், உடனே வீரிய விருத்தியுமுண்டாகும். இது பால, கௌமார, விருத்தருக்கும் உதவும், ஆனல் கொஞ்சம் மந்தமாகும், சீதளதேகத்திற்கு நீர் அதிகரிக்கும். பரிகாரம் சர்க்கரை அதிகமாக சேர்த்துக்கொள்ளவும்.

## நெய் அன்னத்தின் குணம்.

நெய்யும்,அன்னமும், கலந்துண்ணில் வன்மை,விழிக்குளிர்ச்சி, ஜீரணம் இவையுண்டாகும், பித்தவிகாரம் விலகும். இது பத்திய உணவாம். இந்த கிருதபோஜனசிகிச்சை விர்த்தர்களுக்கே முக்கியமாம்.

## நெய்அன்னத்துடன் துவரம்பருப்பு சேர்ப்பதின் குணம்.

சீதமுள்ள மலைநாட்டு துவரம்பருப்பை வெந்நீரிலிட்டுச்சமைத்து அதை பசுவின் நெய்யுடன் அன்னத்திற் கலந்து உண்ணில் ஒருபிடி அன்னத்திற்கு ஒருபிடி சதை வளரும். போஜன ஆரம்பத்தில் இவ்விதமுண்பதினல் பழயமலபந்தம்,சிக்வாகண்டகரோகம், பித்தாதிக்கம்,வாதகபதோஷம், நீங்காச்சொறி, இவைகள் நீங்கும். அதிஞாபகம், தேஜஸு, வனப்பு, கண்ணுக்கு ஒளிவு இவைகள் உண்டாகும். குறிஞ்சிநிலத் துவரை மிகு விசேஷமாம்.

## நல்லெண்ணெய் அன்னத்தின் குணம்.

அன்னத்தில் நல்லெண்ணெய் சேர்த்து உண்ணில் வன்மையும், புணர்ச்சியில் அதிக திடமும், நல்ல தீபனமும் உண்டாகும். வாதகபப் பிரமேகம் நீங்கும்.

## போஜனமுடிவில் தயிர், உப்பு சேருவதின் குணம்.

போஜன அந்தத்தில் புளித்ததயிரும், உப்பும், கூட்டி சாப்பிட்டால் சகல பதார்த்தங்களும் இலகுவில் ஜீரணமாவதுடன் திரிதோஷங்கள் நீங்கும்.

## பசுவின்தயிர் அன்னத்தின் குணம்.

தாகம், சூடு, தேகஎரிவு, இவைபோகும் தயிர்ப்புளிப் பேரியிருந்தால் சீக்கிரத்தில் ஜீரணமாகும். ஆனால் சீதள ஜுரம், வயிற்றிற்களிம்பு, தலைவலி இவைகள் உண்டாகும். பரிகாரம் வெங்காயம்.

## மோரும் அன்னமும் புசிப்பதின் குணம்.

மோரும் அன்னமும் கலந்து புசிக்கில் ஜடராக்கினி அதிகரிப்பதுமன்றிப் பித்தமேக மூத்திரம், முளைமூலம், பாண்டு, தாகம், கிராணி, சிலேஷ்மசோகை, இவைகள் விலகும். ரணங்களுக்கும், குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும், ஆகாது. பரிகாரம் இரும்பை சிவக்க காய்ச்சி நன்றாய் தோய்த்து முறிக்கவும் இது பசுவின்மோர் எருமைமோர், வெள்ளாட்டுமோர் இவைகளுக்குண்டாகிய குணமாம்

## கட்டமுதின் குணம்.

கட்டமுதை நித்தியமும் புசித்தால், தேகமுற்றிலும் குத்தல், சுக்குலாஸ்மரி இரைப்பு, இருமல், கண்டமாலை, முதலிய ரோகங்கள் உண்டாகும். ரத்தப்பிரமேகமும், ஒழுக்கு வெள்ளையும் நிவர்த்தியாகும்.

## அதிக பலம் கொடுக்கும் வஸ்துக்கள்.

அருசுவையோடு மிக்கப்புசிக்கின்ற அன்னத்தால் உடலுக்குண்டாகின்ற பலத்தைவிட 8பங்குபலம் மாவும், அவலுமாம். இவ்விரண்டைப்பார்க்கிலும் 8 பங்கு பலம் பாலும், பழமுமாம். இவைகளைவிட 8 பங்கு பலம் மாமிசமும், கிழங்குமாம் இவைகளுக்குமேல் 8 பங்கு பலம் பற்பல நெய்களுமாம். இந்த நெய்கள் மிதம் தப்பினல் தீமையையும் செய்யும்.

## மாமிசங்கலந்து சமைத்த அன்னத்தின் குணம்.

தேகத்தழைப்பும் கொழுமையும் மிகுந்த பலமும் உண்டாகும், க்ஷிணஞ் செய்யாநின்ற கபாரம்பமும், பித்தமும் சாந்தியாம். பலஹீனருக்கு மந்திக்கும், விரணத்தோருக்கு ஆகாது உழைப்புள்ள தொழில் செய்பவர்களுக்கு மிகவும் ஒத்துக்கொள்ளும். பரிகாரம் புதினு, துவயல், சீரகமுமாம்.

## புலாவு அன்னத்தின் குணம்.

தேகத்தழைப்பும், தாதுவிர்த்தியும் அதிகரிக்கும். சம்போகிகளுக்கும், தாதுநஷ்டப்பட்டவர்களுக்கும் அனுகூலமாயிருக்கும், குண்டிக்காய்க்கும், ஹிருதயகமலத்துக்கும், குடலுக்கும் பலம் உண்டாகி தைரியம் கொடுக்கும். தலைநோய், மயக்கம், தாகம் இவைகள் உண்டாகும் பரிகாரம் எலுமிச்சம்பழச்சாற்றை வெந்நீரில்விட்டு சருக்கரைகலந்து குடிக்கவும்.

---

இந்துபாக சாஸ்திரம் விலை ரூ 2—8—0
விலாசம்:- டி. என் சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

## கிச்சிடி அன்னத்தின் குணம்.

தேகத்தழைப்பும், அதிகபலமும், தாதுவிர்த்தியுமுண்டாகும். பலஹீனருக்கு மந்திக்கும். அதிக உழைப்பாளிகளுக்கு ஒத்துக்கொள்ளும். பரிகாரம் புதினாதுவயல்.

## பழய அன்னத்தின் குணம்.

இரவில் நீர்பூட்டிய அன்னத்தை அந்நீராகாரத்துடன்சூரியோதயகாலத்தில் அருந்தில், சுக்கிலவிருத்தியும், உதராக்கினியும், சரீரமுழுதும் தேஜஸூம் உண்டாகும். பயித்தியவாத தொந்தம் விலகும்.

## மோர்சேர்ந்த பழய அன்னத்தின் குணம்.

பழய அன்னத்தில் மோர்ச்சேர்த்து திருப்தியாக உண்பவர்களுக்கு தேகஎரிச்சலும், பித்தரோகமும், பிரமைமுதலிய நோயும் நீங்கும். சிலேஷ்மாதிக்கமும், நித்திரையும் அதிகரிக்கும். பரிகாரம் இஞ்சி,கொத்தமல்லியிலை.

## புளித்த அன்னத்தின் குணம்.

புளித்த பழயகாடி சாதத்தால் உஷ்ணம், பித்தாதிக்கம், மந்தத்தினல் வெளுப்பாகஇறங்குகிற மலம், வமனம், இவைகளை நீக்கும்.

## ஊசிய அன்னத்தின் குணம்.

உடனே நித்திரை, வாதகோபம், சீதாதிக்கம், பித்தவிருத்தி, இவையுண்டாகும். பரிகாரம் இஞ்சி, எலுமிச்சம்பழம்.

## கேழ்வரகின் களி, கூழ் இவைகளின் குணம்.

களியால் வன்மையும், வாதகோபமும் உண்டாகும். கூழினல் வாதபித்தமிஸ்ரமும், உதிரரோகமும் நீங்கும். பரிகாரம் எலுமிச்சம்பழம் ஊர்காய்.

## கம்பு சாதத்தின் குணம்.

உதிரம் சுண்டுவதுமன்றி இருமல், இரைப்பு, விரணம், சரீரம் ஸ்தூலித்தல் ஆகிய இவையுண்டாகும் பரிகாரம் இஞ்சி.

## தினைமாவு, சாதம், கஞ்சி இவைகளின் குணம்.

தினைமாவு, சிலேஷ்மவாத தொந்தத்தை விலக்கும். அதன்சோறு பித்தகுணமாயினும் வீரியத்தை விருத்திசெய்து வாதகோபத்தை நீக்கும். ஷை கஞ்சி, வீக்கதோஷ வருக்கங்களை ஒழிக்கும். பரிகாரம் பச்சகொத்தமல்லியிலை, கருகப்பிலைதுவயல்.

## சாமை அன்னம், கஞ்சி இவைகளின் குணம்.

சாமை சாதத்தையுண்ணில் வாதநோய், க்ஷயம், சிலேஷ்மவிருத்தி, வீக்கம், இவைகள்போகும் பித்தமும், சுக்கிலமும் விருத்தியாகும். ஷை கஞ்சியால் வாதாதி மூன்று தோஷங்களும் விலகும். பரிகாரம் பச்சகொத்தமல்லியிலை, கருகப்பிலைதுவயல்.

## வரகு சாதத்தின் குணம்.

மூச்செறிகின்ற சுவாசம், இதைச்சேர்ந்த சிலநோய்கள், புடை, தினவு, கிரந்தி, பித்தாதிக்கம், இவைகள் உண்டாகும். பரிகாரம் நெய், வெண்ணை, இஞ்சி, பச்சகொத்தமல்லியிலை, கருகப்பிலைதுவயல்.

## சோள சாதங்களின் குணம்.

கருமை, வெண்மை, செம்மை என்னும் சோளசாதங்களினால் தினவு, விரணம், கரப்பான், இவைகள் அதிகரிக்கும். நல்ல ஔஷதமும் கெடும். பரிகாரம் பால் அல்லது வெண்ணை.

### காடை கண்ணிச் சாதத்தின் குணம்.

சரீர எரிச்சலும், பித்தாதிக்கமும் உண்டாகும், கப வாத தொந்தம் ஒழியும். பரிகாரம் தயிர், பச்சகொத்த மல்லியிலை, கருகப்பிலைதுவயல்.

## ரொட்டி வகை.

### கோதுமைமாவின் ரொட்டி குணம்.

அதிக வலுவைக்கொடுக்கும், தேகந்தழைக்கும், ஜீரணமாகும், தாதுவிர்த்தியாகும், குண்டிக்காயில் கல்லுண்டாகும், வாய்வு அதிகரிக்கும். பரிகாரம் காடியும்,தேனும்.

### பழயரொட்டியின் குணம்.

சொற்ப வலுவைக்கொடுக்கும், ஜீரணமாகும், உதிரத்திலுள்ள கொழுமையை வறளச்செய்யும், சூடு அதிகரிக்கும், வயிற்றில் வலியுண்டாகும். பரிகாரம் நெய்யும், சர்க்கரையும்.

### கோதுமைத்தவிட்டின் ரொட்டி குணம்.

அதிக உழைப்பாளிகளுக்கொத்துவரும், ஜீரணமாகும், சூடதிகரிக்கும், வறழ்ச்சியுண்டாகும், மலம் அதிகரிக்கும், சத்துக்குறையும், தினவுஉண்டாகும், வயிற்றில் வலிகாணும். பரிகாரம் நெய்யும், சர்க்கரையும்.

### கோதுமைப் புளித்த ரொட்டியின் குணம்.

தேகந்தழைக்கும், கொழுமை அதிகரிக்கும், சத்து அதிகரித்து மலம் குறையும், விரைவில் ஜீரணமாகும். சூட்டுடம்புக்கு உஷ்ணம் அதிகரிக்கும். பரிகாரம் வெண்ணெய், அல்லது சவ்வரிசி பாயசம்.

## கோதுமை நொய்ரொட்டியின் குணம்.

தேகந்தழைக்கும், தீபனமுண்டாகும், அற்பசூட்டைக்கொடுக்கும். பரிகாரம் வாதுமைப்பருப்பும் பாலும் சேர்ந்த பாயசம்.

## அரிசிமாவின் ரொட்டி குணம்.

வயிறு கனக்கும் அதோடு வலிக்கும், களிம்புகட்டும், மந்திக்கும், திமிருண்டாகும், நெஞ்சுகரிக்கும், வாய்வு அதிகரிக்கும் அதிக உழைப்பாளிகளுக்கு ஒத்துவரும் சொற்ப வலுவைக்கொடுக்கும் பரிகாரம் புதினாவும், சீரகமும்.

## கடலைமாவின் ரொட்டி குணம்.

அதிக பலம்உண்டாகும், தேகம்தளைக்கும், தாதுவிர்த்தி அதிகரிக்கும், தேகபலமுள்ளவர்களுக்கு ஒத்துவரும். மந்திக்கும், குடலில் வாய்வு அதிகரிக்கும், ஈறல் வலுவை குறைக்கும் பரிகாரம் கொழுப்புச்சேர்த்து சமைக்கவேண்டும். அல்லது நெய்.

## உழுந்துமாவின் ரொட்டி குணம்.

தேகந்தழைக்கும், அதிக பலம் உண்டாகும், தாதுவிர்த்தி அதிகரிக்கும், குண்டிக்காய்க்கு வலுவைக்கொடுக்கும், மந்திக்கும், வயிறுப்பும், வாய்வு உண்டாகும். பரிகாரம் புதினா, சீரகம், இஞ்சி.

---


## தாதுபுஷ்டி சூர்ணம்.

தாதுபுஷ்டி, போகசக்தி, ஜீரணசக்தி, ஞாபகசக்தி, ஊக்கம், உற்சாகம், திடகாத்திரம், அதிகபலம், தேஜஸ் முதலியவைகள் கண்டிப்பாய் உண்டாகும்.

விலை பெரியடப்பி ரூ 4. சிறியடப்பி ரூ 2.

விலாசம்:— டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை

# கஞ்சி வகை.

## பால் கஞ்சியின் குணம்.

பசும்பாலில் பச்சரிசிசேர்த்து காய்ச்சிய கஞ்சியால் அதிகபலம் உண்டாகும், தேகந்தழைக்கும், தேஜஸ்உண்டாகும், பித்தஎரிவு நீங்கும், புத்தியும், சுக்கிலமும் விருத்தியாகும்.

## கஞ்சி அன்னத்தின் குணம்.

சாதத்தில்வடித்த சுடுகஞ்சியால் பலமும், வாதரோகமும், தாகவிடாயும் விலகும். வடித்தகஞ்சியும், அன்னமுமாய்குடிக்கில் தேகந்தூலித்தலும், ஒளியும், கபாதிக்கமும் உண்டாகும், வெப்பமும், பித்தகோபமும் நீங்கும்

## வடிகஞ்சி, உறைகஞ்சி, கொதிகஞ்சி குணம்.

சாதத்திலிருந்து வடிக்கப்பட்ட கஞ்சிகளெல்லாம் மந்தமேயானுலும்விழிக்குக்குளிர்ச்சியாம். இவற்றுல்பித்தகோபம் நீங்கும். காலாதீதப்பட்டுத் தயிரைப்போல் உறைந்த கஞ்சியானது வாதாதிக்கத்தையும், கபப்பெருக்கையும் உண்டாக்கும். சாதம்வேகும்போது மீட்கின்ற கொதிதண்ணீர் என்கிற கஞ்சி நீர்சுருக்கைப்போக்கும் பரிகாரம் கொத்தமல்லியிலை.

## பச்சரிசி, சிறுபயறு, உழுந்து, சேர்த்து காய்ச்சிய கஞ்சியின் குணம்.

சிறுபயறும், பச்சரிசியும் சேர்த்து காய்ச்சியக் கஞ்சி பித்தகோபத்தை விலக்கும். உழுந்து சேர்ந்த கஞ்சி, வாதத்திற்கு உறமாம். பச்சரிசிகஞ்சி வாதசிலேஷ்மத்தைப் போக்கும்.

## முடிச்சு கஞ்சியின் குணம்.

அரைஆழாக்கு அரிசிக்கு இரண்டுபடி ஜலம்விட்டு அரைப்பலம் சுக்கை, சீவி, கத்தரித்து, துணியில்முடிந்து அதிற்போட்டு நாலிலொரு பங்காக காய்ச்சிய கஞ்சியின் தெளிவைக்குடிப்பதனல் வாதசோகம், வெப்பம், சிவந்து இறங்குகிற மூத்திரம், பித்தாதிக்கத்தாலுண்டாகிய சிற்சில நோய்கள், குடலைப்பற்றிய செரியாமந்தம், முதலிய ரோகங்களும், நீங்கும். உதராக்கினி விருத்தியும், போஜனப்பெருக்கமும் உண்டாகும்

## புனர்ப்பானத்தின் குணம்.

வாதாதி மூன்று தோஷங்களையும், ஜுரவெப்பத்தையும் போக்கும். குடிப்பதற்கு ஹிதத்தையும், சரீரசௌக்கியத்தையும் தரும். புனர்ப்பானமென்பது ஒருதரம் வடித்த அன்னத்தை மறுபடியும் வெவ்வேறு உலையிலிட்டு வடித்து அதை மறு உலைகளில்ப் பாய்ச்சி ஜலரூபமாக்கிக் கொடுப்பதாம். இதனைத்தாரக பத்தியமென்பர்.

## எவர் அரிசிக்கஞ்சியின் குணம்.

துன்பப்படுகிற சட்க கபரோகிகளும் சரீரமுழுதும் எலும்புதவிர மாமிசப்பசை இழந்தவர்களும், பலமற்று கை, கால், ஓய்ந்துவிழுகின்றவர்களும், உன்னைப் பிரார்த்திப்பாரேயாகில், அவர்களுக்கு எவர் அரிசி கஞ்சியையே மருந்தாக கொடுப்பாயாக.

---

சிவேந்திரபாக சாஸ்திரம் விலை ரூ 2—0—0
விலாசம்:- டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

## பஞ்சமுஷ்டிக் கஞ்சியின் குணம்.

தாரகபத்தியத்திற்கு உதவாநின்ற பஞ்சமுஷ்டி கஞ்சியை அருந்தில் திரிதோஷவிகாரம் அதிகரிக்காது, ஆயாசம் நீங்கும். பஞ்சமுஷ்டி கஞ்சியென்றால் துவரை, உழுந்து, கடலை, சிறுபயறு, பச்சரிசி இவைகளில் ஒவ்வொன்றில் ஒவ்வொருபிடி எடுத்து தனித்தனியே மெல்லிய வஸ்திரத்தில் முடிந்து ஒரு பாத்திரத்திற்போட்டு அதில் ஆற்றுஜலம் இரண்டுபடிவிட்டு 8-ல் ஒரு பங்காக் காய்ச்சுவதாம்.

## பூநொய்க் கஞ்சியின் குணம்.

சூட்டை அகற்றும், களை தீரும், தீபனமாம், உபவாசமிருப்பவர்களுக்கு அதிக உபயோகப்படும்.

## நெற்பொரிக் கஞ்சியின் குணம்.

பயித்திய தோஷத்தைப்போக்கும், சூட்டையும், வயிற்றுச்சிக்கலையும் போக்கும், மார்நோய்க்கு உபயோகப்படும், சொற்ப காற்றை —ண்டுபண்ணும். பரிகாரம் சருக்கரை, நெய்.

## கொள்ளுக் கஞ்சியின் குணம்.

களை தீரும், தேகவலிப்பைத் தீர்க்கும், தேகஸ்தூலத்தைமாற்றும், நீர்த்தாரையில் விளையும் கற்களைப் பொடியாக்கிவிடும், நீர்ப்பெருக்கை மாற்றும், சூடு அதிகரிக்கும். பரிகாரம் நெய், பால், வெண்ணெய்.

---

சைவபாக சாஸ்திரம் விலை ரூ 0—12—0
விலாசம்:—டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

### கொள்ளும், அரிசியும் சேர்த்துக் காய்ச்சிய கஞ்சியின் குணம்.

அதிகபசி, மிகுந்தபலம், வீரியவிருத்தி இவைகள் கிழவர்களுக்கும் உண்டாகும்.

### கோதுமைக்கஞ்சியின் குணம்.

வாதஜுரம், ஜலதோஷம், கபம், ஜந்நிபாதம் இவைகளை விலக்கும். தேகத்திற்கு நன்மையைத்தரும்.

### நீராகாரத்தின் குணம்.

மிகுமதுரமான நீராகார ·தெளிவு ஜலமானது வாத, பித்த, சிலேஷ்பன, வரட்சிகளையும், தாபத்தையும் விலக்கும். சுக்கிலத்தையும், அழகையும் விருத்தி செய்யும்.

### காடிநீரின் குணம்.

பழமையாகிய காடி ஜலத்தினுல் பித்தமயக்கமும், சோபாரோக முதலிய சிற்சில ரோகங்களும், அஜீரணமும், வாதாதிசாரமும், பெரியதாகிய ஔஷதங்களின் நற்குணங்களும் விலகும்.

மற்ற கஞ்சிவகை 2-ம்பாக புஸ்தகத்தில் காண்க.

---

புது பொற்புதையல். புக் விலை ரூ 1—8—0

இதில் அதிசொற்பமொதலில், கஷ்டமில்லாமலும், நஷ்டம்வராமலும், இலகுவில் பெரும் இலாபம் பெறத்தக்க அருமையான அநேக அற்புத விஷயங்களடங்கியுள்ளன.

விலாசம்:—டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

# பலகார வகை.

## உழுந்து வடையின் குணம்.

சுத்த உழுந்திஞல் செய்த வடையால் வாதாதிக்கமாம், பித்தகோபமும், உதராக்கினியும் கெடும். இதை உண்டியோடுண்ணில் நலமாம். பரிகாரம் சுக்கு.

## தயிருழுந்தின் வடைக் குணம்.

உழுத்தம்பருப்பைப்புளித்தத்தயிரில் ஊறவைத்துப்பெரும்படிசாக அரைத்துப் பாகமாக சுட்டவடையை, நல்ல தேனில் தோய்த்து உண்டால் சிலேஷ்ம பயித்திய ரோகமும், வாததோஷமும் நீங்கும்.

## வாழைக்கனி வடையின் குணம்.

பேயன் வாழைக்கனி சேர்ந்த உழுந்துவடையை, நெய்த்தொட்டுத் தினமும் உண்டால் திரிதோஷங்கள் அதனதன் இடத்தை உற்றிருக்கும்.

## முருக்கின் குணம்.

சிலேஷ்மமும், பித்தமும், விருத்தியாகும், வாதகோபம் கொஞ்சம் தணியும். பரிகாரம் நெய்.

## தேன்குழலின் குணம்.

சிலேஷ்மவாத தொந்தமும், வெப்பமும், அதிதாகமும் உண்டாகும், பசி கொஞ்சம் மந்தப்படும், பரிகாரம் தேன்.

## அதிரசத்தின் குணம்.

கபமும்,பித்தமும் விருத்தியாகும். தேகசவரக்ஷணைக் குரிய சுத்தவாதம் கழித்து உள்ளடங்கும். பரிகாரம் தேன், சீரகம்.

## பிட்டின் குணம்.

அரிசிமாவின் பிட்டு உண்ணில் வன்மையும், உள்ளில் வாதவெப்பமும் உண்டாகும். மாதர்களுக்கு ருதுகாலத்தில் மிதமன்றி ஒழுகுகிற உதிரம் கட்டுப்பட்டு தெளிவையுறும். பரிகாரம் காப்பிக்கொட்டை.

## கொழுகட்டையின் குணம்.

கொழுகட்டை என்கிற மோதகத்தையருந்துவருக்கு வாதவிருத்தி, உதராக்கினிமந்தம், சிலேஷ்மாதிக்கம்ஆகிய இவைகள் உண்டாகும். பரிகாரம் காப்பிக்கொட்டை.

## கோதுமை அடையின் குணம்.

சரீரவன்மை, உதராக்கினி, சுக்கிலதாது, இவைகள் அதிகரிக்கும் சிலேஷ்மகோபம் நீங்கும்.

## பொரியுண்டையின் குணம்.

பாகிற்சேர்த்துப் பிடித்த நெற்பொரியுண்டையை யுண்பாயாகில் நலமாம். வாந்தி, பயித்தியம், வாதகோபம், கபவாதமிஸ்ரம் இவைபோகும்.

---

மிலிடேரி பாகசாஸ்திரம் விலைரூ 0—8—0
ஷை புலவுநூல் விலை ரூ 0—8—0
விலாசம்:—டி. என் சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

## சேர்க்கை அவலின் குணம்.

அவலில் பாலும், நெய்யும், சேர்த்து உண்டால் சரீரத்துக்கு அதிகபலம் உண்டாகும். அதை தயிர்களில் கலந்து உண்டால் மந்தமுண்டாகும். மோரில் உண்டால் சோபமும், எரிவும் விலகும். ஜலத்தில் ஊறவைத்து உண்டால் உளியால் வெட்டினுல் அதுவும் வாய் மடங்கத்தக்க உறுதியான வாயுவு உண்டாகும். ஆகாரமும் ஏற்றுக் கொள்ளாது. ஏதாவது புளிகளில் சேர்த்து உண்டால் பித்தரோகம் நீங்கும். பரிகாரம் இஞ்சிதுவயல்.

## நெற்பொரியின் குணம்.

நெற்பொரியை பாகப்படிக்கு தின்னில் அதிதாகம், வமனம், மந்தாக்கினி, பயித்திய வாததொந்தம், மதரோகம், மூர்ச்சை, அதிசாரவருக்கம், அரோசகம் இவைகள் நிவர்த்தியாகும்.

## அப்பளத்தின் குணம்.

உழுந்துமாவின் அப்பளம் வாதப்பெருக்கையும், உடலுக்கு உறுதியையும் தரும், ஆமத்தைபற்றிய கபத்தைநீக்கும். பரிகாரம் தேன். அரிசிமாவினுல்செய்த சோத்துஅப்பளம் திரிதோஷங்களை வரவொட்டாமல் சமப்படுத்தும்.

## பாயசத்தின் குணம்.

பாலில் நெய் முதலியவை சேர்த்துக் காய்ச்சிய பாயசத்தினுல் மலபந்தம், வாந்தி, பித்தம், இளைப்பு, இவை நீங்கும். (பஞ்சேந்திரியங்களுக்கு நலம்,) அழகு, பலம், மனத்தெளிவு, தீபனம், புத்தி இவைகள் உண்டாகும். அற்பமந்தமென்பர்.

மற்ற பலகாரவகை 2-ம் பாக புஸ்தகத்தில் காண்க.
விலாசம்:—டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

# பாகம்செய்த பதார்த்த வகை.
# குழம்பு, ரசம், ச்சாறு வகை.

## காலேக்கறி வகை.

காலேபதார்த்தங்களுக்குதவும் பயறு முதலியவைக ளாவன:- காராமணி, உழுந்து, கடலை, துவரை, மொச்சைக் கொட்டை, தட்டைப்பயறு, கடுகு, மிளகு, சுக்கு, பெருங் காயம் இவைகளாம்.

## மத்தியானகாலக் கறிவகை.

மத்தியான போஜனத்தில் கிழங்கு வகைகள், பழங் கள், வாதவஸ்துக்கள், மந்தபதார்த்தங்கள், மணமும், சீதளமுமுள்ள இலைக்கறிகள், எருமைநெய், தயிர், மோர் முதலியவைகளை உண்ணினும் சூரிய வெப்பத்தினாலும் தேக உழைப்பினாலும் அவைகளின் தோஷம் நீங்கும்.

## இராக்காலக் கறிவகை.

அவரைப்பிஞ்சு, அத்திக்காய், பசுவின்பால், நெய், மோர், முருங்கைப்பிஞ்சு, துவரம்பருப்பு, ஆற்றுமுள்ளிக் காய் முதலியவைகளை மாலைக்காலக் கறிகளாக உண்ணில் குற்றமில்லை.

## குழம்பின் பேத குணம்.

உறைப்புள்ள கொழும்பால், வாததோஷம் ஜனிக் காது. அவ்வாறில்லாதக் குழம்பால், வாதசின்னம் உண் டாகும். காரத்தோடுவுள்ள குழம்பால், வாதாதி மூத்தோ ஷங்களும் விலகும்.

## ரசத்தின் குணம்.

துவரம்பருப்புக் கட்டிறுத்த ஜலத்தில் மிளகு, வெள்ளைப்பூண்டு முதலிய சம்பாரங்கள் சேர்த்து ரசம்வைத்து அதை நற்கரிகள் சேர்ந்த உணவுடன் சேர்த்து சாப்பிட்டால் அக்கினிமந்தமும், வாதபிரகோபமும் நீங்கும்.

## கொள்ளுச்சாற்றின் குணம்.

சூடுள்ளக் கொள்ளுச்சாற்ருல், சுட்கிதேகம் பருப்பதுமன்றி ஸ்தம்பம்போல் உரக்கும். வாததோஷம், பித்தகோபம், கிரகணி, குன்மம், ரூட்சை, சுவாசம், காசம், கண்ணைப்பற்றிய விரணமுதலிய சிலநோய்கள், ஜலதோஷம் ஆகிய இவைகள்நீங்கும். கொள்ளு என்பது காணம்.

## காடைச்சாற்றின் குணம்.

போதகி வர்த்தம முதலிய சில நேத்திர நோய்கள், ஜந்நிபாததோஷங்கள், கிரகணி, வயிற்றுநோய், ஜுரம், சுவாசம், காசம், இவைகள் போகும். இளைத்த உடம்பு பருக்கும், ஆயுளும் வளரும்.

## வருப்பதின் பேத குணம்.

இளவருப்பாகவறுத்த பதார்த்தத்தினுல், மந்தமும், கருகும்படி வருக்கில் வாதபித்த கபதோஷங்களும் உண்டாகும். இவற்றில் இரண்டிற்கும் நடுத்தரமாக வறுத்த கறிகள் தொந்தவாதத்தை நீக்குவதுமன்றி கபசம்மந்தமான சகல தோஷங்களுக்கும் உதவும்.

சைவபதார்த்த முறை. விலை ரூ 0—2—0
விலாசம்:—டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

## பொரியலின் பேத குணம்.

உறைப்புச்சுவை அதிகரித்த பொரியல், கபத்தைத் தரும். பரிகாரம் சிறுக்கற்கண்டு. புளிச்சுவை மிகுந்த பொரியல், அலசநோயையும், வாதப்பிணியையும், விளைவிக்கும் பரிகாரம் நாட்டுசர்க்கரை.

## பச்சடியின் பேத குணம்.

புளிச்சுவையுள்ள பச்சடியால், பித்தபிரகோபமும், உறைப்புபச்சடியால் சிலேஷ்மவாதமும், இனிப்பு பச்சடியால் அரோசகமும் நீங்கும். துவர்ப்புள்ள பச்சடியால் வாதாதிக்கம் உண்டாகும். பரிகாரம் இஞ்சி.

## துவையலின் பேத குணம்.

புளியாரையிலை முதலியப் புளிப்பிலை துவயல் பித்த கோபத்தை நீக்கும். வெறும்புளி துவையல் ரத்தத்தை முறிப்பதால் நன்மையன்று புளிசேராத துவையல் நலம். அதிக காரம்சேர்ந்த நல்ல துவையல் பசியை யெழுப்புவதால் மிக உத்தமம்.

## ஊறுகாயின் குணம்.

போஜனத்துடன்கூட்டிப்புசிக்கிற நெல்லிக்காய் முதலிய பற்பல ஊறுகாய்களும் தீபாக்கினியை வளர்க்கும். அரோசகம், சிலேஷ்மபயித்திய தொந்தம், வாததோஷம் இவைகளை போக்கும்.

## தற்கால பலாபல பதார்த்தங்கள்.

குளிர்ந்தஜலம், மாமிசம், பசும்பால் இந்த மூன்றும் உடனே தற்கால பலத்தைக்காட்டும், கடூர வெய்யில், புணர்ச்சி, நல்ல தைலஸ்நானம் இந்த மூன்றும் உடனே தற்கால துர்ப்பலத்தைக் காட்டும்.

# தானியவகை.

## துவரையின் குணம்.

நல்லதுவரை, பஞ்சமுஷ்டித்தாரக பத்தியத்திற்கும், உப்பில்லாத பத்தியத்திற்கும், ஜுரத்திற்கும், ஜன்னிக்கும், எழுந்திருக்க சக்தியில்லாமல் மிக மெலிந்தவர்களுக்கும்கூட உதவும். இது சூடும், வறட்சியுமுடையது. தீனிபைக்கும், குடலுக்கும், புஷ்டியுண்டாகும், வயிறிளகும், தேகந்தழைக்கும், பலம்கொடுக்கும் சூட்டுடம்புக்குவயிறு உப்பும். பரிகாரம் நெய், புளிசேர்த்து சமைக்கவும்.

## உளுந்தின் குணம்.

நல்ல உழுந்திற்கு கபவாதமிஸ்ரம், அலஜம், இடுப்பிற்கு உறுதி, மிகுவீரியம், இவையுண்டாகும். பயித்தியமும், எலும்புருக்கியும் நீங்கும். குளிர்ச்சியும், கொழுமையுமுள்ளது, தேகந்தளைக்கும், மந்திக்கும்,மலசிக்கலுண்டாகும், வாய்வு, வயிறுப்பும். பரிகாரம் நெய், ஜீரணபதார்த்தம்.

## கடலையின் குணம்.

வயிறுப்பிசம், பித்ததாகம், குடல் நோயுடன்கூடிய கிரகணி, மயக்கம், மூலவாய்வு, இவைகள் உண்டாகும். நல்லமருந்தை முறிக்கும், தேகந்தழைக்கும், தாதுவிளையும், நுரைஈரலுக்கு பலத்தைக் கொடுக்கும், சூடு அதிகரிக்கும், மந்திக்கும், குண்டிக்காயில் வலியும், நீர்த்தாரையில் புண்ணையும் விளைவிக்கும். பரிகாரம் கசகசா, காடி.

## பட்டாணிகடலையின் குணம்.

நுரைஈரலுக்கும், மார்ப்புக்கும், புஷ்டியுண்டாகும், கட்டுகளை அவிழ்க்கும், வாய்வுகளைபோக்கும், வயிறுப்பும், மந்தப்படுத்தும், மிகுபித்தம். பரிகாரம் கொத்தமல்லி, பன்னீர், கிலே, அர்மனி.

## மொச்சைக்கொட்டையின் குணம்.

திரிதோஷங்களையும், இறைச்சலைத்தருகின்ற ஆவிருத வாயுவையும் உண்டாக்கும். பரிகாரம் சீரகம்,மிளகு,உப்பு.

## பெரும்பயறின் குணம்.

பெரும்பயறை அதிகமாக தின்பவருக்கு தீபாக்கினி கெடுவதுமன்றி அஜீரணம், அதிசாரம்,கபரோகம், வாதப் பிடிப்பு, இவைகள்உண்டாகும். மலம் அதிகரித்து குடலை சுத்தப்படுத்தும், வயிறுப்பும், நீர்பெருகும், கண்ணொளி குன்றிவரும், கண்புகைச்சலுண்டாகும், நித்திரையில் மருட்சியுண்டாகும், துஷ்டகனவு காணும், இதற்கே பெருங்காராமணி என்பர். பரிகாரம் கடுகு, சுக்கு, இஞ்சி.

## சிறுபயறின் குணம்.

கபகோபம், பயித்தியம், அரோசகம் இவைகளைப் போக்கும், பித்தவாதத்தையுண்டாக்கும். பரிகாரம் கடுகு, சுக்கு, இஞ்சி.

## பச்சைபயறின் குணம்.

பித்தத்தைநீக்கும், வாயுவைத்தரும் சீதளமென்பர். பரிகாரம் கடுகு, சுக்கு, இஞ்சி, தேன்.

## பயறுகளின் குணம்.

தட்டப்பயறு அக்கினிமந்தத்தையும், ஜந்நிபாதத்தையும்உண்டாக்கும். பரிகாரம் காடி,தேன்,சுக்கு. வெண் பயறு ஓடிவாதத்தைப் போக்கும். கரும்பயறு சிலேஷ்ம வாதத்தையும், பங்குவாத ரோகத்தையும் விலக்கும்.

## கொள்ளின் குணம்.

பீஜவாய்வு, பித்தகுன்மம், பயித்தியம் இவை உண்டாகும். வாதவலி, நீரேற்றம், நளிர்ஜுரம், மருந்தீடூரம் இவைகள் போகும். குண்டிக்காய், நீர்த்தரை இவைகளில் விளையுங்கற்களை பொடி பொடியாக்கி நீரின் வழியாய் நீக்கும். உதிரச்சிக்கல், உதிரக்கட்டு இவைகளை இளக்கிச் சுத்தப்படுத்தும், அதிக சூட்டைக் கொடுக்கும், தலைசுற்றல், வாந்தி, ஒக்காளம், வயிறுகடுப்பு, இவைகளையுண்டாக்கும். பரிகாரம் நெய், வெண்ணெய், புளி.

## எள்ளின் குணம்.

அபத்தியமாகிய எள்ளால் பலம், கபம், காசரோகம், பித்தநோய், இவைகளை வருவிக்கும், குரல் தொனியைக் கெடுக்கும், ஸ்திரீகளின்வயிற்றில் கட்டுப்பட்டஉதிரத்தை வெளிப்படுத்தும், கண்ணுக்கு ஒளிவுக்கொடுக்கும், சூடும் குளிர்ச்சியுமாம், சுத்த இரத்தமுண்டாகும், தேகத்திற்கும், மார்ப்புக்கும், நுரைஈரலுக்கும் குளிர்ச்சிக்கொடுக்கும், இருமலை போக்கும், நீரை வறட்டும், இதை யூறவைத்தஜலம் உதிரச்சிக்கலை மாற்றும். பரிகாரம் எள்ளுவறுத்துத் தேன் கலந்துண்ணவும்.

# கிழங்கு வகை.

## கிழங்குகளின் பொது குணம்.

கிழங்கு வகைகளால் மூலவாய்வு விர்த்தியாகும், கருணைக்கிழங்குகளால் மூலரோகங்கள் நீங்கும்.

## காருக்கருணைக் கிழங்கின் குணம்.

சிலேஷ்மரோகம், வாதநோய், ரத்தமூலமுளை, அக்கினிமந்தம் இவைகள் நீங்கும். பசியுண்டாகும், தீனிப்பைக்குப் பலத்தைக் கொடுக்கும், மூல உதிரத்தை நிறுத்தும், நாவுக்கும், தொண்டைக்கும் உதவாது. பரிகாரம் நெய், புளி.

## உருளைக் கிழங்கின் குணம்.

தேகபுஷ்டி உண்டாகும், தும்மலை நிறுத்தும், மந்திக்கும், தீனிப்பைக்கு உதவாது, வாயுவை விளைவிக்கும். பரிகாரம் இஞ்சி, புதினா, எலுமிச்சம்பழச்சாறு.

## சேமக் கிழங்கின் குணம்.

உதிரம்விளையும், குண்டிக்காய்க்கும், மூளைக்கும், நரம்புகளுக்கும், பலத்தைக் கொடுக்கும். மந்தப்படும், காற்றை விளைவிக்கும். பரிகாரம் நன்றாக ஊறவைத்துப் பிசைந்து கழுவிப் புளியிட்டு சமைக்கவும்.

## பூமிச்சருக்கரைக் கிழங்கின் குணம்.

பிரமேகம், அதிசுவேஷ்கம், வெள்ளைவிழல், ஜுரம், மூலம் இவைகள் போகும். தேகம் பூரிக்கும்.

## முள்ளங்கிக் கிழங்கின் குணம்.

வாதப்பிணி, கரப்பான், வயிற்றிலெரிச்சல், குத்தல், குடல்விருத்திநோய், இருமல், கபம், தலைவலி, நீரேற்றம், பல்நோய், பலசிந்தி, குன்மம், சுவாசம், மூலக்கடுப்பு, தொண்டைக்கம்மல் இவைகள்போகும்.

## செம்முள்ளங்கிக் கிழங்கின் குணம்.

கண்ணொளி அதிகரிக்கும், நீர்த்தாரையில் விளையும் கல்லைப்பொடியாக்கி நீரின்வழியாய்ப் போக்கும், இருமலை நீக்கும், வயிற்றுப்பலை எடுக்கும், நீர்பெருகும். பரிகாரம் குல்கந்து, இஞ்சி.

## பெருவள்ளிக் கிழங்கின் குணம்.

திரிதோஷதொந்தம், வாதமூலம், வாதகுன்மம், முதலிய சிலநோய்கள், அக்கினிமந்தம் இவையுண்டாகும். இதனை ஆள்வள்ளி என்பர். பரிகாரம் சுக்கு சீரகம்,தேன், சருக்கரை.

## சிறுவள்ளிக் கிழங்கின் குணம்.

மந்தம், கரப்பான், சிலேஷ்மவிருத்தி, முளைமூலம் ஆகிய இவையுண்டாகும் உதராக்கினிக்கெடும், தீனிபைக் குபலத்தைக்கொடுக்கும், ஹிருதயத்தின் சக்தியை அதிகரிக்கச்செய்யும், சூட்டையும், பித்தத்தினுல்வந்த தாபத்தையும்நீக்கும், நீர்பெருகும், மந்திக்கும், வயிறுகனக்கும். பரிகாரம் சருக்கரை, தேன், நெய்.

---

ஜீவரக்ஷாமிர்தம் என்ற வைத்திய சாஸ்திரம்.
விலை ரூ 7. ஷை நயம் ரூ 8.
விலாசம்:— டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

## சருக்கரைவள்ளிக் கிழங்கின் குணம்.

அதிமந்தமுள்ள சருக்கரைவள்ளிக்கிழங்கு திவ்விய ஔஷத குணத்தைக் கெடுப்பதுமன்றி மூலமுளையையும், குடலிரச்சலையும், கிரகணியையும் விளைவிக்கும். பரிகாரம் தேன், சீரகம், எலுமிச்சம்பழம்.

## கருடன் கிழங்கின் குணம்.

அரையாப்புக்கட்டி, வெள்ளை, கொருக்குமாந்தை, அற்புதவிரணம், இவைகள் நீங்கும், சற்பங்கள் நடுங்கும். இதனை பேய்ச்சீந்தில் கிழங்கு என்பர்.

## கூகைக் கிழங்கின் குணம்.

தேகபுஷ்டியுண்டாகும். இருமல், ஜுரம், தாகம் இவைகள் நீங்கும்.

## நிலப்பூசினிக் கிழங்கின் குணம்.

தளர்ந்ததிரேகம் இறுகப்படுவதுமன்றி இளைத்த சப்த தாதுக்களுக்குச் செழுமையும், சரும தாதுவிற்கு ஒளிவும், நுட்பஅறிவும் உண்டாகும், மலபந்தம் நீங்கும்.

## பேதிக் கிழங்கின் குணம்.

விரோசனம், பித்தாதிக்கம், குடற்சுத்தி, வீரியவிருத்தி, இவைகளையுண்டாக்கும், வாதகோபத்தையடக்கும், இதற்கு ரேவல் சின்னிக்கிழங்கு என்றும் சொல்வர்.

## மெருகன் கிழங்கின் குணம்.

கட்டிப்பிரமேகம், வயிற்றுநோய், அரோசகம், கபரோகம், அஸ்திதாதுகதஜுரம், சிலேஷ்மாதிக்கம், இவைகள் போகும், உடலுக்கு குளிர்ச்சியுண்டாகும்.

## அமுக்கிராக் கிழங்கின் குணம்.

க்ஷயம், வாதசூலை, வாதகரப்பான், பாண்டு, ஜுரம், வீக்கம், ஜலதோஷம் இவைகள் போகும். மாதர்மேலிச்சையும், பசியும் உண்டாகும். இதற்கு அசுவகந்திக் கிழங்கு என்றும் சொல்வர்.

## பனங் கிழங்கின் குணம்.

அஸ்திச்சூடும், பித்தமேகமுதலிய மேகங்களும் போகும், குளிர்ச்சியும், வளப்பும் உண்டாகும்.

## நிலப்பனங் கிழங்கின் குணம்.

மேகமூத்திர வெப்பமும், வெள்ளைகுஷ்டமும், விலாக்குத்தலும், ஒழுக்குப்பிரமேகமும், நீலாஞ்சன ரோகமும், போகும். புணர்ச்சியில் இச்சையுண்டாகும். இருமல், மாரடைப்பு, மூலம் இவைகளை நீக்கும், மேகரோகங்களை நன்றாய் கண்டிக்கும். இதை மோரில் ஊறவைத்து, வேகவைத்து சருக்கரைப்பாலில்முறப்பாசெய்து சாப்பிட்டுவர மேகஊரலை நாசப்படுத்தும். வயிறு உப்பும், மந்திக்கும். பரிகாரம் மிளகு, சீரகம், இஞ்சி.

## இஞ்சியின் குணம்.

காசம், கபம், வெள்ளொக்காளம், ஜந்நிபாதஜுரம், வாதசாரம், வாதசூலை, வாதகோபம் இவைகள் போகும், பசியுண்டாகும், தீனிபைக்கு பலத்தைக்கொடுக்கும், ஈரலை பற்றிய கட்டுகளை அறுக்கும், அஜீரணபேதியை நிறுத்தும், பழவர்க்கங்களிலுள்ள பொல்லாப்புகளை நீக்கும், தொண்டைக்குதவாது. பரிகாரம் வாத உடம்புக்கு தேனும், சூட்டுடம்புக்கு வாதுமை நெய்யுமாம்.

## மஞ்சளின் குணம்.

உடலை பொற்சாயலாக்கி புலால்நாற்றத்தை நீக்கும், புருஷவசியமுண்டாகும். வம்மை, பித்தகபவாத கோபங்கள், தலைவலி, ஜலதோஷம், பிரமேகம், நாசிகாரோகம், ஐவகைவலி, வீக்கம், வண்டுகடிவிஷம், பெருவிரணம் இவைகள் போகும்.

## மரமஞ்சளின் குணம்.

மூலநோய், அரோசிகம், கணஜுரம், உட்ஜுரம், இவைகள் விலகும்.

## கஸ்தூரிமஞ்சளின் குணம்.

பெருவிரணம், கரப்பான், கிருமிரோகம், அக்கினிமந்தம், இவைகள் போகும். வீரியமும், அறிவும் விருத்தியாகும்.

## வெங்காயத்தின் குணம்.

தேகஉஷ்ணம், மூலம், சிரங்கு, இரத்தநோய், பித்தம், கண்டகம், தாகம், உஷ்ணபேதி இவைகள் நீங்கும். தாது விளையும், கெட்ட காற்றுகளின் விஷத்தை மாற்றும், பலபல ஜலங்களிலுள்ள பொல்லாப்பை நீக்கும், பசியுண்டாகும், நீரடைப்பையும், உதிரச்சிக்கலையும் அறுக்கும், மலமிளகும், பிததத்தைப்பற்றிய ஒக்காளத்தை மாற்றும், பேய்நாய்க்கடி விஷத்தை நீக்கும், தலைவலி, தாகம், அக்கினிமந்தம், ஜந்நிபாதம், இருமல், வயிற்றுப்பிசம், இவைகள்உண்டாகும். பரிகாரம் ஜலத்தில் நன்றாய் ஊறவைத்து உப்பு சேர்க்கவும்.

## நரிவெங்காயத்தின் குணம்.

சர்பவிஷம், சீதளத்தாலுண்டாகிய கோழை, சுவாசம், மூலகபரோகம், இவைகள்போகும். இதற்கு காட்டீருள்ளி என்பர்.

## ஷாகுல் மிசிரியின் குணம்.

திரேகபலம், அழகு, தாதுவிளைவு, பிராணசூடு இவைகள் உண்டாகும். இடுப்பு வலியை மாற்றும். பசுவின் பாலில் நெய், சருக்கரை கலந்து காய்ச்சி இதில் ஒரு விராகனிடை தூள் கலந்து குடிக்க அப்பியாசப்பட்டவர்களின் அண்டையில் அழகிய வாலிபப் பெண்ணில்லாமல் நித்திரை பிடியாது. தலைவலியுண்டாகும், தீபனத்தை யடக்கும். பரிகாரம் தேன், இஞ்சிமுறப்பா. இது அகப்படாத சமயத்தில் இதற்குப்பதிலாய் சல்கூசா வென்னும் விரையை உபயோகப்படுத்தலாம்.

## போஜிதான் மிசிரியின் குணம்.

தாதுபுஷ்டி, நரம்புகளுக்குபலம், பேதி, இவைகள் உண்டாகும். கீல்வாதம்,இசிவு,வீக்கம், மகோதரம்,இவைகள் நீங்கும். இதை பச்சை அரிசியிற்கலந்து வெள்ளாட்டுப்பால், சருக்கரை சேர்த்து அல்வா கிண்டி சாப்பிட அப்பியாசப்படுத்த கதிரைப்போலிழைத்ததேகம் பருத்துச்செக்கைபோல்ஆகும். குடலுக்கு உதவாது. பரிகாரம் தேன், கடுகு.

மற்ற கிழங்கு வகை 2-ம் பாக புஸ்தகத்தில் காண்க.

# காய், பிஞ்சு வகை.

## வாழைக் காயின் குணம்.

பித்தவாந்தி, பயித்தியம், பித்தாதிஜுரம், உமிழ்நீர்ச் சுரப்பு, வயிறளைதல், உஷ்ணம், இருமல், இவைகள் போகும். தேகம் பருக்கும், இரத்தவிருத்தி, பலம், போஜனம் இவைகள் அதிகரிச்கும். மந்திக்கும், வயிறு வலிக்கும். பரிகாரம் மிளகு, சீரகம்.

## வாழைப் பிஞ்சின் குணம்.

இரத்தக்கடுப்பு, உள்வளய ரத்தமூலம், அதிமூத்திரம், உதிரப்போக்கு, வயிற்றுவிரணம், இவைகள் போகும் மந்திக்கும். பரிகாரம் நெய், மிளகு.

## பலாக் காயின் குணம்.

தாதுபுஷ்டியும், சுக்கிலவிருத்தியும் அதிகரிக்கும். வயிறு பருக்கும், அக்கினிமந்தம், வாதகோபம், ஆயாசம், சுவாசம், இவைகள் உண்டாகும். பரிகாரம் இஞ்சி, மிளகு, சீரகம்.

---

## தந்திப்பிரமேக நிவாரணி.

தந்திமேக மேற்பட்டு ஆண், பெண், குறியிலிருந்து வெளிப்படும் வெளுத்த மெல்லிய நூல்போல் மேகம்தோன்றல், துர்கந்தமுள்ள மேகநீர் ஒழுகுதல், வெள்ளைவிழுதல், மூத்திரம் மோர்போல அல்லது நிறம்மாறிப்போதல், மூத்திரத்தில் இரத்தம் கலந்து போதல், சுருக்கு சுருக்கென குத்தல் முதலிய ஸ்திரிபுருஷர்களுக்கு வந்த எல்லாவிதப் பிரமேக ரோகங்களையும் போக்கும்.

ஒரு அவுன்ஸ் பாட்டில் ரூ 2—8—0

விலாசம்:- டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

## பலாப் பிஞ்சின் குணம்.

பாலுள்ள பலாப்பிஞ்சால் தாகம், பித்தநோய், சூடு, இவைகள் நீங்கும் சுக்கிலவிருத்தி, மந்தாக்கினி, குன்மம், வயிறுவலி இவைகள் உண்டாகும். பரிகாரம் கறமசால.

## பூசினிக் காயின் குணம்.

இனிப்புள்ள பூசினிக்காயால் அனலால் வரும் அழற்சியையும், மிகுபித்தத்தையும் நீக்கும். நல்ல பசியையும், கப கோபத்தையும் விளைவிக்கும். பரிகாரம் சுக்கு, சீரகம். இதற்கு பறங்கிக்காய் என்றும் சொல்லப்படும்

## கோடைப் பூசினிக் காயின் குணம்.

குழிப்பறங்கிக்காய் என்ற கோடைப்பூசினிக்காயால் வாதகடுப்பு, வாதசூலை, அக்கினிமந்தம், இவை உண்டாகும். இதனைக்குளிர்ச்சி என்பர். பரிகாரம் சுக்கு, சீரகம்.

## கலியாணப் பூசினிக் காயின் குணம்.

பெரும் பூசினிக்காய் என்ற கலியாணப் பூசினிக்காயால் பயித்தியரோகம், உட்காச்சல், காரமேக மூத்திரக்கிரிச்சரம், இடுமருந்து, பித்தஜுரம், அஸ்திதாதுகதஜுரம், பேய்ச்சொறி, பிரமேகம், இவைகள் போகும். தாதுபுஷ்டியுண்டாகும், வாதாதிக்கமாம், ஜீரணசக்தியில்லாதவர்களுக்கு உதவாது. பரிகாரம் சருக்கரை கற்கண்டு.

## கத்திரிக் காயின் குணம்.

பித்தத்தால்வந்த கபத்தை நீக்கும் ஆறியசிரங்கு, நமை, குடல்புஷ்டி, வறட்சி, சொறி, விலாவில்வலி இவைகள் உண்டாகும், படை, கிரந்தி அதிகப்படுத்தும், கட்டை அவிழ்க்கும். பரிகாரம் நெய், இறைச்சி.

## கத்திரிப் பிஞ்சின் குணம்.

கத்திரிப்பிஞ்சு திரிதோஷத்தை விலக்கும். முகிழ் விரியாக் கத்திரிப்பிஞ்சால் ஜுரம், பித்ததோஷம், கபம் இவைநீங்கும். மலம்இளகியிறங்கும், குரற்ருெனிபலக்கும்.

## கண்டங்கத்திரிக் காயின் குணம்.

சிலேஷ்மநோய், அசதி, வாய்வு இவைகள் போகும், தீபனம், சுருசுருப்பு, வயிறுவலி, இவைகள் உண்டாகும். பரிகாரம் விரையைப்போக்கி சமைக்கவும்.

## அத்திக் காயின் குணம்.

பிரமேகம், வாதநோய், சூலை, சரீரவெப்பம், விரணம், இவைகள் போகும். சூட்டுடம்புக்கு மிகவும் உபயோகமா னது விரைவில் ஜீரணமாகாது. பரிகாரம் சீரகம், புதினா.

## அத்திப் பிஞ்சின் குணம்.

மூலவாய்வு, கிரகணி, ரத்தமூலம், வயிற்றுக்கடுப்பு, இரத்தக்கடுப்பு, உதிரபேதி, பெரும்பாடு இவைகள் விலகும். மந்திக்கும். பரிகாரம்வேகவைத்து தண்ணீர்இறுத்து விடவும்.

## முருங்கைக் காயின் குணம்.

நிதான நூலிற்கூறும் பலபிணிக்கும் ஔவியதாயும், மத்தியக்கறியாயும் இராநின்ற முருங்கைக்காயால் கபம் நீங்கும், விந்துவூறும், நீரைப்பெருக்கும். பரிகாரம் புளிப்பு அல்லது நெய்.

## முருங்கைப் பிஞ்சின் குணம்.

முருங்கையினது பூப்பிஞ்சைப் பாகஞ்செய்து இளந் தோலுடன் உண்ணில், அஸ்திஜுரம், எலும்பையுருக்கிற வெப்பம், அரோசகம், விந்துநஷ்டம், இவைகள் நீங்கும். நீர்ப்பெருகும், தாதுவிளையும், பத்தியத்திற்குதவும், வேர் பட்டை ரசம் செய்துக்கொடுத்தால் பாரிசவாதம், சீத ஜுரம், காக்காய்வலி, சூதகஜந்நி இவைகள்நீங்கும். முருங் கைப்பூவை பாலில் காய்ச்சி சாப்பிட்டால் இந்திரியபுஷ்டி யுண்டாகும் சூட்டைக்கொடுக்கும். பரிகாரம் பால், நெய்.

## மாங் காயின் குணம்.

சுக்கிலநாசம், மிகுவாயு, சிரங்கு, தேகம்வெடித்த லோடு ஆறுவிரணம், தந்தங்கூசுதல், சொற்றவரல் இவை கள் உண்டாகும். பசிபோகும். கறிபதார்த்தங்களின் ருசி யை அதிகரிக்கச்செய்யும், மாங்கொட்டைப்பருப்பு அரைத் துக்கொடுக்க மூலச்சூடு, ரத்தமூலம், நீங்கும், வேர்பட்டை கஷாயத்தால் சீதபேதி குணமாகும். பரிகாரம் உப்பு, காடி, சீரகம்.

## மரீயங் காயின் குணம்.

வாய்கசப்பும், அரோசகமும் நீங்கும், இது ஜுர ரோகிகளுக்கு உதவும். இதை புளிமாங்காய் என்பர்.

## மாம் பிஞ்சின் குணம்.

வாதாதிமுத்தோஷங்கள், அரோசகம், சர்த்தி, அக் கினிமந்தம், இவைகள் போகும். சொறிசிரங்கு உண்டா கும், வயிறு வலிக்கும். பரிகாரம் உப்பு, சீரகம்.

## நெல்லிக் காயின் குணம்.

கடல்அமிதம் ஒத்த நெல்லிக்காயைப் பகற்போதுண்ணில் சூடு, தாகம், பயித்தியம், கபநோய், பீநசம், வாய்நீர்ச்சுரப்பு, வாந்தி, உன்பலமாதம், மலபந்தம், தலைச்சுழலல், பிரமேகம், வாய்வு இவைகள் போகும். காற்றை உண்டுபண்ணும் நரைஈரலுக்குஉதவாது. பரிகாரம்தேன்.

## அவரைக் காயின் குணம்.

மலம் அதிகரித்து உதிரம் குறையும், விரைவில் ஜீரணமாகாது, வயிற்றிலும், குடலிலும் காற்றையுண்டாக்கும். பரிகாரம் குல்கந்து, இஞ்சி.

## வாள் அவரைக் காயின் குணம்.

பசுமையுள்ள வாளவரைக்காயால் பித்தாதிக்கம், வாந்தி, அருசி, வாதரோகம், வாய்நீரூறல், அரோசிகம் இவைகள் உண்டாகும். பரிகாரம் தேன், புதினா, இஞ்சி.

## கொத்தவரைக் காயின் குணம்.

அபத்தியமான கொத்தவரைக்காயால் பயித்தியம், கபம், வாதக்கடுப்பு, மந்தம், இவையுண்டாகும், பித்தத்தால் நளிரையும், மருந்தையும் முறிக்கும். பரிகாரம் இஞ்சி, சுக்கு, சீரகம், நெய்.

## கொட்டை அவரைக்காயின் குணம்.

வித்துமுதிர்ந்த அவரைக்காயினால் அருசியும், ஔஷதநன்மையும் நீங்கும். அக்கினிமாந்தம், அதிசாரம்,சரீரபளுவு, வாததோஷம், சிலேஷ்மகோபம், குத்தல் இவைகள்உண்டாகும் பரிகாரம் தேன், சீரகம்.

### அவரைப் பிஞ்சின் குணம்.

விதைமுதிராத வெள்ளை அவரைப்பிஞ்சு, இராப் போஜனத்திற்கும், மருந்துண்பவருக்கும், வாதாதிமுத் தோஷம், விரணம், ஜுரம், விழிக்குள் முதிர்ந்த சிலேஷ்ம பில்லம், முதலிய ரோகிகளுக்கும் ஆகும்.

### வெள்ளரிக் காயின் குணம்.

கரப்பான், நீர்த்துவாரத்தினவு, நீர்ச்சுறுக்கு, சூடு, தாகம், இவைகள் நீங்கும். இதைப்புசித்தபின் யுண்ணப் பசியாம், மருந்தைமுறிக்கும், நீரைப்பெருக்கும், குளிர்ந்த தேகத்திற்கு காற்றையுண்டுபண்ணும். பரிகாரம் சுக்கு, சோம்பு, உப்பு, தேன்.

### வெள்ளரிப்பிஞ்சு, பழம், விதை இவை குணம்.

வெள்ளரிப்பிஞ்சால் முத்தோஷங்களும் நீங்கும். நைந்தப்பழத்தால் கபமும், வித்தால் நீர்ப்பேதியுமாகும் பரிகாரம் காடி, தேன்.

### கக்கரிக் காயின் குணம்.

பித்ததோஷம், மூலச்சூடு, ரத்தபித்தம், இவைகள் நீங்கும். கோழை, குளிர்ச்சி, மந்தம் இவைகள் உண்டாகும். குளிர்ந்த தேகத்துக்கு வாய்வாகும். பரிகாரம்மிளகு, ஓமம். இதற்குமுள் வெள்ளரிக்காய் என்றும் சொல்வர்.

### ஆகாய கக்கரிக் காயின் குணம்.

பந்தலில் காய்கின்ற ஆகாயக்கரிக்காயால் தேகச்சூடு, கரப்பான், பயித்தியதோஷம், மருந்தின் வீரியம், பித்த வாந்தி, இவைகள் போகும். கபாதிக்கமும், புணர்ச்சியிலிச்சையும் உண்டாகும். பரிகாரம் சீரகம், சுக்கு.

## மொச்சைக் காயின் குணம்.

திரிதோஷங்கள் தொனிக்கதக்கவாதம், க்ஷீணமலம், இவைகளை விருத்திசெய்யும். மிகு சூட்டைத் தணிக்கும். பரிகாரம் குல்கந்து, மிளகு, சுக்கு.

## புடலங் காயின் குணம்.

சுக்கிலம், கபம், பயித்தியம் இவைகள் அதிகரிக்கும், சூட்டைக்குறைக்கும், தேகத்தின் அழலையை மாற்றும், வறழ்ச்சியை நீக்கும் தழைப்புண்டாகும் குளிர்ந்த தேகத்திற்குதவாது. பரிகாரம் இறைச்சி, கறம்மசாலா.

## பன்றிப் புடலங் காயின் குணம்.

கரப்பான், புடை, கிரந்தி, சீதளம், இவைகள் உண்டாவதுமன்றிக் காணுக்கடி, சிலந்தி, சர்ப்பம் முதலிய விஷங்கள் இறங்கியதாயினும் உடனேயேறும். இது பன்றிமாமிசத்தை யொத்தது. பரிகாரம் இறைச்சி, கரமசாலா.

## சுரைக் காயின் குணம்.

வாதபித்தம், அரோசகம், பீலிகரோகம், ஆமம்,மார்புநோய், இவைகள் உண்டாகும். உட்சூடு, மலபந்தம், தவனம் இவைகள் நீங்கும். பரிகாரம் புளிப்புகாடி.

## பீர்க்கங் காயின் குணம்.

சீதளமும், பித்தம் தன் மாத்திரைக்குமேல் மூன்றுபங்கு அதிகமுமாம். வாதகபங்கள் தத்தம் நிலை பிசகும். பரிகாரம் கொத்தமல்லியிலை, சீரகம்.

## பச்சைக் கடுக் காயின் குணம்.

பச்சைக் கடுக்காயைக் கொட்டைநீக்கி யிடித்து அதற்கு 5-ல் ஒருபங்கு உப்பிட்டு 105 நாள் சென்றபின் பிசைந்து அதை அன்னத்திற் சேர்த்தாவது தனித்தாவது புசிக்கில் அரோசகந்தீரும், பசியுண்டாகும், மலங் கழியும். இதனை பரிதகிக்காய் என்பர்.

## அருநெல்லிக் காயின் குணம்.

சீதபித்தம், தாகம், காசம், உட்சூடு, இவைகள் நீங்கும். குளிர்ச்சி, தலைவலி, ஜுரம் இவைகள் உண்டாகும், சளிபிடிக்கும். பரிகாரம் கல்லுப்பு, கறியுப்பு.

## புளியங் காயின் குணம்.

பித்தத்தை நீக்கும், பசியுண்டாகும், சயித்தியத்தை அதிகரிக்கும், தலைவலி, காய்ச்சல், சளி, இவைகளை உண்டாக்கும். பரிகாரம் உப்பு, பச்சை மிளகாய்.

## புளியம் பிஞ்சின் குணம்.

ருசியைக்கொடுக்கின்ற கொட்டை முதிராத புளியம் பிஞ்சால் சோருதலையும், பித்தகோபத்தையும் நீங்குவதும் தவிர வாததோஷத்தை உண்டாக்கும் இது கருப்பஸ்திரீகளுக்கு விருப்பமாம். பரிகாரம் மிளகு, சீரகம்.

## எலுமிச்சங் காயின் குணம்.

குற்றமற்ற எலுமிச்சங் காயால் திரிதோஷம், வாதசிலேஷ்மம், சூலை, சர்த்திகுன்மம், இடுமருந்து, பித்தஉஷ்ணம், இவைகளை போக்கும்.

## கொடியெலுமிச்சங் காயின் குணம்.

வாந்தி, பித்தமயக்கம், மலபேதி, பித்த அருசிரோகம், இவைகள் போகும்.

## கலுமிச்சங் காயின் குணம்.

எலுமிச்சங்காய்போற்றோற்றுகின்ற கலுமிச்சங்காய் பற்களை விழச்செய்யும், சீதளம்,வீரியநஷ்டம் இவைகளை உண்டாக்கும். பரிகாரம் புளி, காடி, தேன்.

## நாரத்தங் காயின் குணம்.

வாதநோயும், வாலுள்ள மலக்கிருமியும் நீங்கும். பசியுண்டாகும். இதன் புளிப்பினால் தேகஞ் சுத்தியாகும்.

## கடார நாரத்தங் காயின் குணம்.

பித்தநோயும், வாய்நீரூறலும், அருசியும் போகும். இது பத்திய வஸ்துவாம். நோயளருக்கும் உதவும்.

## கொளுஞ்சி நாரத்தங் காயின் குணம்.

இருமல், ஆமதோஷம், வாதகுணம், கபாதிக்கம், தாகம், இவைகளை நீக்கும். இதனை கொடிநாரத்தை, மூலையெலுமிச்சை, துரிஞ்சி, எனவுஞ் சொல்வர்.

## நாரத்தங்கச்சலின் குணம்.

ஜுரரோகிகளும் உண்ணுகின்ற நாரத்தங்கச்சலால் சீதளம், அரோசகம், வயிற்றுப்பொருமல், எரிகிருமி, இவைகள் நிலைக்காது. சுக்கிலதாதுவும், தீபாக்கினியும் உண்டாகும். உணவைமிகுதியாக உட்செலுத்தும். இதனை போஜனகஸ்தூரி என்றும் சொல்வர்.

## மிள காயின் குணம்.

வாதரோகங்களையும், சீழ்மூலத்தையும் நீக்கும். உன்னிற்போலயிருக்கிற வெண்டு முளகாயால் வாதகோபம் நீங்கும். ஆகாயத்தை நோக்கிக் கருமைநிறத்துடன் காய்க்கின்ற குண்டுமுளகாய் உஷ்ணமாம்.

## ஊசி முளகாயின் குணம்.

மிகு கார்ப்புச்சுவையைப் பெற்ற ஊசி முளகாயால் சீதபேதி, மூத்திரக்கிரிச்சரம், மூலம், சூத நெகிழ்ச்சி ரோகம் இவைகள் உண்டாகும். பரிகாரம் எலுமிச்சம் பழம், தயிர்.

## பச்சை மிள காயின் குணம்.

விதையடர்ந்த பச்சை மிளகாயை சம்பாரஞ்சேர்த்துண்ணில் அன்னமிறங்கும், அரோசிகத்தை மாற்றும், பதார்த்தங்களின் ருசியை அதிகரிக்கச்செய்யும், கீரைகளின் குளிர்ச்சியை மாற்றும், பேதியாகும். பரிகாரம் எலுமிச்சம்பழச்சாறு, உப்பு, வெங்காயம்.

## ஊமத்தங் காயின் குணம்.

வாதநோய், கரப்பான், கிரந்தி, சொறி, இவைகள் நீங்கும். பித்தமயக்கமும்,உன்மாதரோகமும் உண்டாகும். பரிகாரம் எள்ளெண்ணெய், நெய், காடி.

## இத்திக்காய், பிஞ்சு இவை குணம்.

இத்திக்காயால் வாதமலபந்தம் போகும். இதன் பிஞ்சால் அதிசாரமும், பெரும்பாடும், உட்சூட்டினால் பிறக்கின்ற பிணியினமும் நீங்கும்.

## வெண்டைக் காயின் குணம்.

சூட்டையகற்றும், மார்ப்பின் கபத்தையறுக்கும்;சூட்டால் ஏற்பட்ட இருமலுக்காகும்; மந்தம், கரகணி, பேதி, சீதரத்தாதிசாரம், சிலேஷ்மவாதம் இவைகள்உண்டாகும். இதனை வெண்டுக்காய் என்பர். பரிகாரம் றாமிமஸ்த்தகி, நாட்டுசீரகம்.

## கறிமுள்ளிக் காயின் குணம்.

வாதபித்த கபதோஷங்கள், ஜ்ாரம், சுவாசரோகம், இவைகளைப் போக்கும். அற்பசூடு உண்டாகும். கறிக்குத வாது இதனை முள்ளிக்காய் என்பர். பரிகாரம் விரைபோக்கி நெய், புளி, சேர்க்கவும்.

## தேங் காயின் குணம்.

சுத்த இரத்தமுண்டாகும், தாதுவிளையும், இடுப்பு வலி, கீல்வாதம், பாரிசவாதம், முதலிய வாதரோகங்களை கண்டிக்கும் ஈரலுக்கு பலம்கொடுக்கும். உட்புண்களையும், மூலத்தையும் மாற்றும், வாய்நாற்றத்தை எடுக்கும்.

## பனை நுங்கின் குணம்.

இளங்காயுலுள்ள நுங்கின் ஜலமானது வியர்க்குருவை நீக்கும், பசியைத்தரும். தோலுடனே யிருக்கும் நுங்கு சீதபேதியை நீக்கும்.

## தென்னமரத்தின் குருத்துக் குணம்.

கபஉபத்திரவமும், ரத்தமூலமும் நீங்கும். திரேக புஷ்டி.யுண்டாகும்.

## பனைமரத்தின் குருத்துக் குணம்.

ரத்தமூலமும், அதிசாரமும் உண்டாகும். பரிகாரம் நெய், அல்லது தயிர்.

## பேரீச்சு, சிற்றீச்சு, குருத்துக் குணம்.

பேரீச்சுக் குருத்தால் சிலேஷ்ம குன்மம் போகும். சிற்றீச்சுக் குருத்தால் வயிற்றில் கட்டுப்பட்ட ரத்தவாத குன்மம் போகும்.

## மிதிபாகல் காயின் குணம்.

பித்தவாதகோபங்கள், கரப்பான், சூடலுக்குவலி இவைகள் உண்டாகும். தீனிப்பையிலுண்டாகும் பூச்சி களைக்கொல்லும், பாதரசம், அரிதாரம், பாஷாணம் முத லிய வேகங்களை முறிக்கும், இது கேரளதேசத்துப் பத்தி யக்கறியாம். சூட்டுடம்புக்குதவாது. பரிகாரம் நெய், புளி.

## காட்டுப்பாகல் காயின் குணம்.

மலையடுத்த காட்டுப்பாகற் காயால் அன்னமிறங்கலும், நல்ல பசியுமுண்டாகும், இருமலால் பிறந்த பித்தவாத கோபங்கள் நீங்கும். அற்பச்சூட்டைக்கொடுக்கும். பரிகா ரம் எலுமிச்சம்பழச்சாறு, நெய், இறைச்சி.

## கொம்புப்பாகல் காயின் குணம்.

அபத்திய பதார்த்தமாகிய கொம்புப்பாகற் காயால் நல்ல ஔஷதங்களை முறிப்பதுமன்றி வாதபித்த கோபங் கள், தீபனம், சூடு, நெஞ்சிற்கரிப்பு, தினவு இவைகள் உண்டாகும். பரிகாரம் சருக்கரை, நெய், புளி.

## பயற்றங் காயின் குணம்.

கபாதிக்கம், குன்மம், அரோசிகம் இவைகள்விலகும், பசியுண்டாகும், நீரை பெருக்கும், தீபனமாம். மருந்தை முறிக்கும். பரிகாரம் வேகவைக்கிறது அல்லது நெருப்பில் வதக்குகிறது.

## நறுமணத்தக்காளிக் காயின் குணம்.

மலம் இளகிச்சுபாவமாக இறங்கும். சிலேஷ்ம நோயும், வாதாதிக்கமும் நீங்கும். நோயாளிக்காகின்ற நல்ல மணத்தக்காளி வற்றலால் வாந்தியும், வாயிலைப்பும்நீங்கும்.

## சுண்டைக் காயின் குணம்.

மார்ப்புச்சளி, கிருமிரோகம், வாதாதிக்கம், ஆகிய இவைகள் போகும். இதன் வற்றலால் அரோசகம், மலக் கிருமி, கிரகணி, ஆசனத்துவாரச்சீதக்கட்டு இவைகள் போகும். பசியுண்டாகும்.

## களாக் காயின் குணம்.

இன்புளிப்புள்ள களாக்காயால் காதடைப்பு, தாகம், பித்ததோஷம், வாந்தி, அருசி, ரத்தபித்தம், இவைகள் போகும். மிகுபசியுண்டாகும். இதனைக்கிளாக்காய்என்பர்.

## சுக்கான் காயின் குணம்.

சுக்கான் காயால் வாததோஷம் நீங்கும். இது பித்தம் என்பர் இதன்வற்றல், வாதத்தையும், அரோசகத்தையும் நீக்கும்.

## கோவைக் காயின் குணம்.

நல்ல கோவைக்காயால் அருசி, நீங்காதவெப்பம், ஜுரகபதோஷம் இவைகள் போகும். இதன் வற்றலால் அரோசகமும், கரப்பானும் நீங்கும்.

## ஆற்றுத்தும்மட்டிக் காயின் குணம்.

கீல்பிடிப்பால் நடையின்றிக்கிடத்தல், சோர்தல், மலாவிருதமுதலிய வாதரோகங்கள், கருப்பையைப்பற்றி அடைகின்ற ஆமம்,சத்தகுன்மக்கட்டி, அகாலருது இவைகள் போகும். இதனை கலிங்கம்காய் என்பர்.

## குமட்டிக் காயின் குணம்.

பல்விழல், சுக்கிலக்ஷீணம், தேகவொளிகெடல், வாதகோபம், சிலேஷ்மாதிக்கம், இவைகள் உண்டாகும். பரிகாரம் நெய், தேன், தயிர், வெங்காயம்.

## விதுகங் காயின் குணம்.

பத்திய கரியாகிய விதுகங்காயினால் புதியஉதிரம், சுக்கிலம், அழகு, பலம், இவைவிருத்தியாம். நீடித்தபித்தமும், அதிதுர்ப்பலமும் நீங்கும்.

## பாவட்டங் காயின் குணம்.

வாதஜுரம், அரோசகம், சீதகக்கடுப்பு, பித்தாதிசாரம், சிலேஷ்ம தோஷம், ஆகிய இவைகள் நீங்கும்.

## கொடிவழுதுணேக் காயின் குணம்.

வாதமுதலிய மூன்று தேகத்தோருக்கும் பொருந்துவதுமன்றிக் கபத்தைக்கரைக்கும். பத்தியத்திற்கும்ஆகும். இதுவே வழுதலங்காயென மருவியது.

## தூதுளங் காயின் குணம்.

கபரோகங்கள், பயித்தியதோஷம், அருசி, ரத்தாசயவாய்வு,ஆந்திரபித்தவாதம், மலபந்தம், இவைகள்விலகும்.

## அதளக் காயின் குணம்.

வாய்க்கு உணவை செலுத்தும், பயித்தியமும் அடி வயிற்றியில் மந்தமும், வாதநோயுமுண்டாகும். பரிகாரம் தேன், சீரகம், இஞ்சி.

## சிகைக் காயின் குணம்.

நாசியுட்புரிகின்ற ஆக்கிராண நசியச்சிகிச்சைகளுக்கு முக்கிய மருந்தாகும். பேதியையும், வாந்தியையும் உண்டாக்கும், பலவிதஎண்ணெய்ச் சிக்குகளைநீக்கும். இதனைச் சிய்யக்காய் என்பர்.

மற்றகாய்,பிஞ்சு வகைஇதன் 2-ம்பாகபுஸ்தகத்தில்காண்க.

---


## நூதன பரிமள பற்பொடி.

இது சகல பல் வியாதிகளை நிச்சயமாய் நிர்மூலப் படுத்தி பல்லைக் கெட்டிப்படுத்தும் தவிர தேவதை ஜெப மான அறியசித்துமூலிகை பொடியும் இதில் சேர்ந்திருப் பதால் விரைவில் லக்ஷிமிகடாக்ஷமுண்டாகி மனமகிழ்ச்சி யும், மகத்தான ஆனந்தமும் காரியசித்தியுமாகும் இதன் அபார சக்தியைபற்றி ஆச்சரிபப்படுகிறார்கள். இது புதி தாக கண்டுபிடிக்கப்பட்டது.

ஒரு டஜன் டப்பி விலை ரூ 3—0—0

சாதாரண அற்புதபற்பொடி டப்பி 1 டஜன் ரூ 1—8—0

வைத்தியவாத யோகஞான சாஸ்திரம் 10 பாகமுள்ள

ஒரு செட்டு விலை ரூ 10—0—0

ஷை நயம் விலை ரூ 12—8—0

விலாசம்:—டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

# பழவகை.

## வாழைப்பழத்தின் பொது குணம்.

உடம்பை வெளுக்கச்செய்கின்ற சோமரோகம், பித்தப் பிணிகள், மதநோய், மூர்ச்சை இவைகள் போகும் தேகம் தழைக்கும் பலம்கொடுக்கும். வாழைப்பழத்தில் பலவகைப் பழங்கள் உண்டு.

## ஏழுவகை வாழைப்பழத்தின் குணம்.

செவ்வாழை, வெள்ளவாழை, ரசதாளி, அடக்கு வாழை, மலைவாழை, பச்சைவாழை, கருவாழை இந்த 7 வகை பழங்களும் நன்மையைத்தரும். வாதரோகிகளுக்கு உதவாது ஆனால் அன்னத்துடன் உண்ணில் குற்றமில்லை. செவ்வாழை, வெள்ளவாழை, மலைவாழை, பச்சைவாழை இந்த 4 வகைப்பழங்களும் நோயாளர்களுக்கும் உதவும்.

## பேயன் வாழைப்பழத்தின் குணம்.

பயித்தியமும், உட்சூடும் நீங்கும். வாதாதிக்கமும், மிகு குளிர்ச்சியும், ஜாரியாக மலமிறங்கலும் உண்டாகும். பரிகாரம் தேன் அல்லது சருக்கரை.

## தசையத்திப் பழத்தின் குணம்.

ரத்தவிருத்தியையும், தேகபோஷணையையும் தரும். ஜுரவெப்பத்தையும், ஜீரணமலத்தையும் நீக்கும்.

## விதையத்திப் பழத்தின் குணம்.

நித்திய மலபந்தத்தையும், சரீர உஷ்ணத்தையும், பித்தவேகத்தையும் போக்கும்.

## அன்னாசிப் பழத்தின் குணம்.

பிரமேகவெள்ளை, வாந்தி, பித்தநோய், தாகம், சிரஸ் தாபரோகம், இவைகள்போகும். அழகுண்டாகும். இதனை பூந்தாழம்பழமென்பர்.

## சவரிப் பழத்தின் குணம்.

சிரநோயும், உடற்கடுப்பும், நீர்ப்பீநசமும், நீங்கும்.

## பாலைப் பழத்தின் குணம்.

கருங்கரப்பான், சிலேஷ்மதோஷம், வெப்பத்தைச் செய்கின்ற கிரந்தி, இவைகள் போகும் மிகு பசியுண்டாகும். இதனை தீம்பாலை பழமென்பர்.

## நாவற் பழத்தின் குணம்.

அக்கினிமந்தம், சரீரநோவு, கடுவன், சீததாகம், கடுத்தல் இவைகள் உண்டாகும். அதி நீரும், வெப்பமும், தாகமும் நீங்கும் இதனை நாகப்பழமென்பர். பரிகாரம் தேன், சருக்கரை.

## வெள்ளை நாவற் பழத்தின் குணம்.

ரத்ததாதுவையும், சுக்கிலதாதுவையும் உண்டாக்கும், உள்வெப்பத்தை நீக்கும்.

## ஜம்புநாவற் பழத்தின் குணம்.

வாதஉஷ்ணம், பித்தஉஷ்ணம், ஒரு தோஷத்தாற் பிறந்த தாகரோகம் இவைகள் நீங்கும்.

---

மணிமந்திரவைத்தியபுக் விலை ரூ 1. ஷை நயம் ரூ 1-8-0
விலாசம்:- டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

## விழாம் பழத்தின் குணம்.

சுவாசம், காசம், கபாதிக்கம், பித்ததாகம், வாய்வேக்காடு, தொண்டைநோய், சொறிசிரங்கு, பித்தசூடு, இவைகள் விலகும். தீனிபை, ஈரல், கமலம், இவைகளுக்குபலம், உடலுக்கு சுகம், நல்லபசி இவைகள் உண்டாகும்.

## பலாப் பழத்தின் குணம்.

இனிப்புள்ள பலாப்பழம் வாதகப, பித்ததொந்தங்களையும், கரப்பானையும், முன்பில்லாத பிணிகளையும் உண்டாக்கும். கபாலத்தைப்பற்றிய நரம்புகளுக்கு வலுவைக்கொடுக்கும், மந்திக்கும், காற்றை உண்டுபண்ணும். பரிகாரம் பசுவின் நெய், அல்லது அதன் கொட்டை.

## மாம் பழத்தின் குணம்.

நமைச்சல், மார்புஎரிச்சல், கண்ணோவு, கருங்கரப்பான், கிரந்தி இவைகள் அதிகரிக்கும். பசிநீங்கும். மாம்பழத்தில் பலவகையுண்டு. மல்கோவாப் பழம். சுக்கிலப்பெருக்கத்துக்கும், அதை கட்டுவதற்குமாகும். பரிகாரம் சோம்பு, சீரகம், ஏலம், திராட்சிப்பழம்.

## தமரத்தம் பழத்தின் குணம்.

புளிப்புள்ள தமரத்தம்பழத்தால் வாதபித்த தொந்தம், வாதசிலேஷ்மதொந்தம், வாந்தி, குரல்கம்மல், நேத்திரரோகம், சுக்கிலநஷ்டம், பித்தகோபம், சிரஸ்தாபரோகம், சித்தப்பிரமை இவைகள் நீங்கும். இதனை தந்தசடம் பழமென்பர்.

## கொய்யாப் பழத்தின் குணம்.

முத்தோஷம், தலைமயக்கம், அரோசகம், மந்தம், வாந்தி, வயிறுப்பல், கரப்பான், வீரியம் இவைகள் உண்டாகும். மலங்கழியும், விக்கலைநிறுத்தும். பரிகாரம் தேன், முந்திரிப்பழம், எலுமிச்சம்பழம்.

## சீத்தாப் பழத்தின் குணம்.

பித்தசிலேஷ்ம தொந்தமும், அக்கினிமந்தமும், சித்தப்பிரமையும், உண்டாகும். பரிகாம் இதன் சத்துப் பாகப்படுத்தி வாந்திபேதிக்கிக் கொடுக்கவேண்டியது.

## மாதுளம் பழத்தின் குணம்.

சந்தேகம் நீங்க நினைப்பையும், பேச்சையும், உண்டாகும். ஒழிக்கின்ற சந்நியாசரோகம், வாந்தி, கபம், வாய் நீர்சுரப்பு, விக்கல், மாந்தம், அதிஜுரம், நெஞ்செரிவு, மிகுதாகம், பித்தநோய், காதடைப்பு, நீங்காதமயக்கம், இவைகள் விலகும். புத்ரநிமித்தம் கங்காஸ்நானஞ்செய்து யாசிக்கச்செய்யும் மலட்டு வியாதி போகும். வெடித்த அந்தப்பழத்தை சீக்கிரமாகப் பிழிந்து மெல்லிய வஸ்திரத்தால் வடிக்கட்டி தகுந்த கற்கண்டுசேர்த்து ரசத்தைச் சாப்பிட உஷ்ணம் ஒழியும். சரீரமுழுதும் குளிர்ச்சியை யடையும்.

## கொமட்டி மாதுளம் பழத்தின் குணம்.

அரோசகம், பித்தகோபம், சிலேஷ்மதோஷம், க்ஷயரோகம் இவைகள் நீங்கும்.

---

ஜோதிட களஞ்சியம் புக் விலை ரூ 1. ஷை நயம் ரூ 1-8-0
விலாசம்;— டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

## மாதுளம் பிஞ்சின் குணம்.

புளிப்புள்ள மாதுளம் பிஞ்சால் மலம், சீதம், ஜலம், ரத்தம், இவைகளினிறமாக ஆகின்ற பற்பல அதிசார ரோகம் தீரும்.

## அன்னாசிப் பழத்தின் குணம்.

பிரமேகவெள்ளை, வாந்தி, பித்தநோய், தாகம், சிரஸ்தாபரோகம், இவைகள் போகும். இதனை பூந்தாழம்பழம் என்பர்.

## எலுமிச்சம் பழத்தின் குணம்.

தாகம், நகச்சுற்று, யானைக்கால், உன்மாதம், பித்தம், கண்ணோய், காதுவலி, வாந்தி, இவைகள் நீங்கும்.

## நாரத்தம் பழத்தின் குணம்.

பித்தகுண ரோகம் நீங்கும். நீங்காத ஜடராக்கினியும், சுக்கிலவிருத்தியும் உண்டாகும்.

## சாதிநாரத்தை,கொளிஞ்சி நாரத்தை, இவைகுணம்.

சாதிநாரத்தம்பழம். தாகம், அரோசகம், வாய்கசப்பு இவைகளை நீக்கும். கொழிஞ்சி நாரத்தம்பழம். பிரமேக தேகிகளது நாவறட்சியை விலக்கும்.

## பேரீச்சம் பழத்தின் குணம்.

வாய்நீரைச்சுரப்பிக்கின்ற பித்தரோகம், மதரோகம், மூர்ச்சை, ஜ்வரம், சிலேஷ்மநீர்க்கோவைதாகம், ரத்தபித்தம், நீரிழிவு, வாயிலைப்பு, அருசி, மலபந்தம், இவைகள் நீங்கும். இதனை கற்ஜ்வரப்பழமென்பர்.

## சிற்றீச்சம் பழத்தின் குணம்.

சிதபேதி, உழலைநோய், விரணம், இவை முதலிய பற்பல ரோகங்களும், புத்திக்குறைவும் உண்டாகும் பரிகாரம் காடி, சீரகம்.

## கொட்டை முந்திரிப் பழத்தின் குணம்.

தாகமும், சரீரவெப்பமும் நீங்கும். கரப்பான், துஷ்ட விரணம், கிரந்தி, நெஞ்சிற் கரகரப்பு இவைகள் உண்டாகும். பரிகாரம் நெய், புளி, காடி.

## கிஷ்முஷ்ப் பழத்தின் குணம்.

தேகம்தளைக்கும், மலத்தைப்போக்கும், மூலம், இருமல், குரல்கம்மல், இவைகளுக்கு உபயோகப்படும், உதிரத்தை தோயபண்ணும். பரிகாரம் புளி.

## சிறிய கொடிமுந்திரிப் பழத்தின் குணம்.

ஜுரம், அரோசகம், தாகம், புண், இரைப்பு, க்ஷிண பித்தம், ரத்தபித்தம், விஷாலசகரோகம், பிரமேகம், மதரோகம், இவைகள் போகும். இதற்கே திராட்சிப்பழமென்பது.

## பெருங்கொடிமுந்திரிப் பழத்தின் குணம்.

சோமநோய், தாவரவிஷம், உன்மாதம், மூத்திரதோஷம், சாமஜுரம், இவைகள் நீங்கும். உடலுக்கு குளிர்ச்சியும், கண்துலக்கமும், சுக்கிலவிருத்தியும் உண்டாகும்.

## பழம் புளியின் குணம்.

திரிதோஷம், வாதநோய், சூலை, சிலேஷ்மகோபம், ருட்சை, வாந்தி, விழிநோவு, பயித்தியம் இவைகள் நீங்கும்.

## சரக்கொன்றைப் புளியின் குணம்.

வாதப்பிரமேகம், மலபந்தம், குடல்வலி, அக்குடலை பற்றிய அழுக்கு, உஷ்ணம் இவைகள் போகும்.

## முளகாய்ப் பழத்தின் குணம்.

ரத்தமூலமுளையும்,ஆசனக்கடுப்பும், வீரியவிருத்தியுமுண்டாகும். விஷாலசகம், அருசி, வயிற்றுநோய்,விகுணவாதம், வயிற்றுப்பிசம் இவைகள் நீங்கும்.

மற்ற பழவகை 2-ம்பாக புஸ்தகத்தில் காண்க.

---


## மகான்களால் முறைமைப்படி செய்த இரசமணி.

அபூர்வசக்தி வாய்ந்த மிகவும் மேன்மைபொருந்திய இரசமணியை கயிற்றில்கோர்த்து இடுப்பில் கட்டினால் சகல வியாதியும் துன்பமும் போகும் கெட்ட சொர்ப்பன ஸ்கலிதமாகாது. தாது விர்த்தியும் சகல சம்பத்தும் உண்டாகும். ஸ்திரீகளுக்கு பேய் பிசாசு துஷ்டதேவதை சம்பந்த கெர்ப வியாதியும் நிவர்த்திஆகி சகல சம்பத்தும் உண்டாகும். யாவரும் அணிந்துகொள்ளலாம்.

இரசமணி 1-க்கு விலை ரூ 5—0—0

சரஜோதிமாலை ஜோஸ்ய புக் 1, ரூ 1½. ஷை நயம் ரூ 2.

விலாசம்:—டி. என் சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

# கீரைவகை.

## கீரைத்தண்டின் குணம்.

அதிவாத சீதளமுள்ள கீரைத்தண்டால் பித்தகிரிச்சரம், பிரமேகச்சூடு, வயிற்றுக்கடுப்பு, ரத்தபேதிமுதலிய நோய்களும் போகும்.

## வெண்கீரைத் தண்டின் குணம்.

நோயற்ற நல்ல பதார்த்தமாகிய வெண்கீரைத் தண்டினல் வெப்பம்: வெளிமூலரோகம், பித்தஎரிச்சல் இவைகள் நீங்கும்.

## செங்கீரைத் தண்டின் குணம்.

பெருங்கறியாகிய செங்கீரைத்தண்டு தீராத பித்த நோயையும், பெண்களுக்கு பெரும்பாட்டையும், பிரலாப ஜந்நிபாதஜுரத்தையும் நீக்கும்.

## கருணைக்கிழங்குத் தண்டின் குணம்.

பத்தியத்திற்கான கருணைத்தண்டால் மூலரோகம், கபகோபம், மேதோதாதுவிருத்தி, இவைகள் நீங்கும். ஜீரணமும் பசியுமாம். இதனை சூரணத்தண்டு என்பர்.

## முளைக்கீரையின் குணம்.

காசஜுரத்தை நீக்கும். புசியைத்தரும். சூடு, பித்த எரிவு, சொறிசிரங்கு, தினவு, இவைகள் போகும். கண் குளிரும்.

## அறைக்கீரையின் குணம்.

பலபிணிக்கும் நற்கறியான அறைக்கீறையால் ஜுரம். நடுக்கல், ஜந்நிபாதம், கபரோகம், வாதநோய், இவைகள் போகும். தாதுவிருத்தியாகும். இதனை அறுகீரைஎன்பர்,

## நீர் ஆரைக்கீரையின் குணம்.

நல்ல சுவையும் நாலிதழுமுள்ள நீராரைக்கீரையால் பித்தநோய், அதிமூத்திரம், ரத்தப்பிரமேகம் இவைகளை நீக்கும். இதனை ஆரைக்கீரை என்பர்.

## அகத்திக்கீரையின் குணம்.

இடுமருந்தும், பயித்திய தோஷமும் நீங்கும். கடுவனும், வாய்வும் உண்டாகும். போஜனம் ஜீரணமாகும். இதனை அகத்தியிலை என்றும் சொல்லப்படும். பரிகாரம் மிளகு, சீரகம்.

## செவ்வகத்திக்கீரையின் குணம்.

கபதோஷத்தை உண்டாக்கும். பற்பல சிந்தூரம்,நவநீதபஸ்பம், தாளகசுத்தி இவைகளைச் செய்வதற்கு உதவும் இதனை செவ்வகத்தியிலை என்பர். பரிகாரம் நெய்.

## முருங்கைக்கீரையின் குணம்.

அக்கினிமந்தம், உட்சூடு, சிரஸ்தாபரோகம், பித்தமூர்ச்சை, கண்நோவு, இவைகள் நீங்கும். இதனை முருங்கையிலை என்பர்.

## போகம் விளைக்கும்க் கீரைகள்.

நறுந்தாளி, நன்முருங்கை, தூதுணம், பசலை, அறு கீரை, இவற்றுள் யேதேனும் ஒன்றைப்புளிநீக்கிப் பாகஞ் செய்து அன்னத்துடன் நெய்சேர்த்துக் காலையில் மாத்தி ரம் ஒரு மண்டலம் அளவையாக உண்ணில் புணர்ச்சியில் நிர்வாகம் உண்டாகும்.

## கொத்தமல்லிக் கீரையின் குணம்.

வாதஅரோசகம், பித்தவருக்கம், பித்தஜுரம் இவை கள் போகும். வன்மையும், சுக்கிலமும் விருத்தியாகும்.

## புதியனுமூலிக் குணம்.

வாய்வு, அருசி, சர்த்தி, மந்தாக்கினி, ரத்ததாதுவின் அழுக்கு, மலப்போக்கு இவைகள் நீங்கும். போஜனமும் செல்லும். இதனை புதியன்மூலி என்பர்.

---

## ரத்தமூல ரோக நிவாரண லேகியம்.

சகலவிதமான ரத்தமூல ரோகங்களுக்கும் இது தக்க ஒளஷதம். மூலத்தில் படிப்படியாய் ரத்தம் கொட்டுதலை உடனே நிறுத்தும் சர்வமேக உஷ்ணங்களையும் பறக்கச் செய்யும். மலபந்தம், மூலத்தில் அரிப்பு, சரீர உஷ்ணம் முதலியவைகளைப் போக்கி கிரமமாய் மலம் கழியும்படிச் செய்யும்.

பெரிய டப்பி 1-க்கு விலை ரூ 4—0—0

சிறிய டப்பி 1-க்கு விலை ரூ 2—0—0

**விலாசம்:**—டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

# இலைவகை.

## தேயிலையின் குணம் (டீ)

சுத்தமாயும்,புதிதாயும், வடிக்கப்பட்ட சூடானதேத்தண்ணீர் பானம் செய்துவந்தால் உண்டாகும்குணங்களாவன

சுத்த இரத்தம் உண்டாகும், தேகத்திற்கு பலம் அதிகரிக்கும், உதிரத்தின் அழுக்கைப்போக்கித் தெளியப்படுத்தும், ஜலதோஷம்,மார்சளி, இருமல், தலைவலி இவைகளை சொஸ்த்தப்படுத்தும், ஆயாசத்தையும், இளைப்பையும்ப்போக்கி உற்சாகத்துடன் தெம்பைக்கொடுக்கும், ஊக்கமும், சுறுசுறுப்பும் உண்டாகும், புத்தி தெளிவையும், நுட்பமான விஷயங்களை அறியத்தக்க சக்தியையும் விருத்திசெய்யும், அசக்தியினால் உண்டாகும் வியாதிகளை போக்கடிப்பதில் இது மிகவும் சிலாக்கியமானது ஜீரண சக்தியையும், நல்லபசியையும் கொடுக்கும், தேகம் அலுத்து காணுகிற நித்திரையை நீக்கும்.

## சிற்றுழா, பேருழா இவ்விலைகளின் குணம்.

சிற்றுழாமரத்தின் இலையானது ரத்தமூலத்தையும், சீழ்மூலத்தையும் போக்கும். பேருழாமரத்தின் இலையானது ஆசன வளயம் மூன்றிற்குள் உள்வளைய முளையையும், குதக்கடுப்பும் ஒழியும்.

## கருவேப்பிலையின் குணம்

அரோசகம், சீதபேதியால் வரும் வயிருளைவு, புராண ஜுரம், பயித்திய தோஷம் இவைகள் போகும்.

## சுவற்று முள்ளங்கியிலையின் குணம்.

நீர்க்கட்டையும், மார்பு நோயையும், வாதசோபா ரோகத்தையும் போக்கும்.

## ஆடாதோடையிலையின் குணம்.

கபாதிக்கம், வாததோஷம், பற்பலஜுரம், ஜந்நிபாதம். 13-வயிற்றுநோய் இவைகளை நீக்கும்.

## வேப்பிலையின் குணம்.

புழுக்கள், பெருவியாதி, மாந்தம், மகாவிஷம், ஜுர ரோகங்கள், அம்மைக்கொப்புள விரணம், இவைகள் போகும். இதனை நிம்பம் என்பர்.

## புளியிலையின் குணம்.

வெப்பமுள்ள புளியிலையால் அளிந்தவிரணம், சோபா ரோகம், பாண்டுரோகம், சிவந்த கண்ணோவு, இவைகளை நீக்கும்.

## மூங்கில்யிலையின் குணம்.

குடற்சூலையும், வயிற்றுநோவும், ரத்தத்தடிப்பும், பிரசவகாலத்திற்றங்கிய அழுக்கும், நீங்கும்.

## எருக்கிலையின் குணம்.

எலிவிஷம், சர்ப்பவிஷம், பெருவியாதி, சிலேஷ்ம நோய், கிருமிரோகம், ஐவகைவலி, கீல்வீக்கம், தனிவாத கோபம், அக்கினிமந்தம், மலக்கட்டு, இவைகளை நீக்கும்.

---

ஜாதகசிந்தாமணி புக் 1-க்கு ரூ 2-9-0 ஷை நயம் ரூ 3
விலாசம்:—டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

## துத்தியிலையின் குணம்.

துத்தியிலையை ஆமணக்கு நெய்பால் வதக்கிக்கட்ட மூலரோகமும், கட்டிவிரண முளைகளும், கிருமிவிரணமும் போகும். அதை எவ்விதமாவது பாகஞ்செய்துண்ணில் சகல ரோகங்களும் சாந்தமாகும்.

## புகையிலையின் குணம்.

வாய்வறட்சி, துர்ப்பலம், பித்தாதிக்கம், சுக்கிலக்ஷீணம், இவைகளை விளைவிக்கும். நல்ல மருந்தையும் முறிக்கும். பற்களின் வலியை நீக்கும். இதன் புகையினல் பற் பல விஷப்பிராணிகள் ஒடிப்போகும். மலம் கழியும். பீனிசத்தை மாற்றும். தாகம் எடுக்கும். இருதய கமலத்துக்கும், மூளைக்கும் உதவாது. சூட்டுடம்புக்கு தலைசுற்றும். புத்திமயங்கும். புலன்கள் குன்றும். ஆயாசமுண்டாகும். பரிகாரம் அகத்திக்கீரை, அகத்திப்பூ.

## கருவேல் கொழுந்தின் குணம்.

கருவேல் கொழுந்தைத் தயிரில் அரைத்துக்குடிக்கில் பாஷாணவேகம் நீங்கும், முலைப்பாலில் அரைத்து அடைதட்டி காய்ந்த சட்டியிலிட்டு வெதுப்பி அற்பச் சூடாக ஒத்தடமிடில் கண்சிவப்பு மாறும்.

மற்ற இலைகள் வகை 2-ம் பாக புஸ்தகத்தில் காண்க.

---

## மேகரண நிவாரணக் களிம்பு.

இது, மேகப்புண், மேகரணம், குழிப்புண், எலும்புகளைப் பற்றியரிணம்,கொறுக்கு, ஆருதமேகரணங்கள், கால்களில் உண்டாகும் ரிணங்கள்,சொரிசிறங்குகள், முதலியவற்றை கண்டிப்பாய் நிவர்த்தி செய்யும். டப்பி 1-க்கு விலை ரூ 1

விலாசம்:—டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

MA3 68795

# வித்து, கொட்டை, பருப்பு வகை.

## வித்துக்களின் பொது குணம்.

அதி உஷ்ணமுள்ளவும் அதிசீதளமுள்ளவும் ஆகிய இருவகை விதைகளும் விந்துவை ரக்ஷிக்கத்தக்கவை அல்ல. உஷ்ணசீதளம் சமமாயுள்ள வித்துக்கள் அதை ரக்ஷிக்கத் தக்கனவாம். அவைஎவையெனில் காய்க்குள் இடைவெளியின்றி நெருங்கியிருக்கின்ற தூதுகளை முதலிய விதைகளெல்லாம் மிகுஉஷ்ணமும் இடைவெளிமிகுந்து ஒன்றோடொன்று நெருங்காமலிருக்கிற பூசினி முதலிய வித்துக்கள் அதி சீதளமும் ஆகும். இடைவெளியுள்ளனவும் ஒன்றுக்கொவ்வோர் வித்து உள்ளனவுமான முருங்கை, வாதுமை வித்துக்கள் முதலியவை உஷண சீதளம் சமமாயுள்ளனவாம்.

## முருங்கைவித்து, ஈர்க்கு இவை குணம்.

முருங்கை வித்தினல் ஜலரூபமாகக் கரைந்த விந்துவும் பிசினிபோலாகும், சரீரம் பலக்கும், இதன் ஈர்க்கு நீரைப்பெருக்கும். பரிகாரம் கசகசா, காடி, எலுமிம்பழச்சாறு.

## மாதுளைவித்தின் குணம்.

இனிப்புள்ள மாதுளம்வித்தானது சுக்கிலத்தை இறுக்குவதும் தவிர அதிலுள்ள குற்றத்தையும், பிரமேகச்சுறுக்கையும் நீக்கும்.

## நீர்முள்ளிவித்தின் குணம்.

பிரமேகம், அதிசாரம், கபசோபை, ஆயாசம், இவைகள்நீங்கும். சுக்கிலமும், சப்ததாதுக்களும்விருத்தியாகும்.

## ஊமத்தம்வித்தின் குணம்.

ஜுரம், தாவரசங்கமம், விஷம், ஜந்நிபாததோஷம், அதிசாரம், இவைகள் போகும். வெறியுண்டாகும். பரிகாரம் நெய், காடி, எள்ளெண்ணெய்.

## பூசினிவித்தின் குணம்.

பயித்தியமும், பிரமேகமும், சரீர அழலையும், நீங்கும். தேகத்திற்கு குளிர்ச்சியும், புஷ்டியும் உண்டாகும்.

## வெள்ளரிவித்தின் குணம்.

கடுகின்ற நீரடைப்பு, கல்லடைப்பு, நீர்துவார வெடிப்பு, சதையடைப்பு, பிரமேகம், கிரிச்சரம், இவைகள் நீங்கும்.

## கழற்காய், பேய்ப்பீர்க்கு இவை குணம்.

கழற்காய்வித்து அண்டவாதமும், சூட்டினால்பிறந்த பக்கசூலையும், வயிற்றுநோயும், நீங்கும். பேய்ப்பீர்க்கம் வித்து காலிற்றழும்பேரும்படிக்குக் கடித்த துஷ்டவிஷங்களையெல்லாம் நீக்கும்.

## பூனைக்காலிவித்தின் குணம்.

கருமைநீறப் பூனைக்காலிவிதையினால் கற்றாழைநாற்றமும், ரத்தக்கிரகணியும்,கரப்பானும், நீங்கும். தாதுபுஷ்டியுண்டாகும்.

### தாமரைவித்தின் குணம்.

அலசத்தையும், அருசி முதலிய சர்வதோஷங்களை யும் நீக்கும். சுக்கிலத்தை விருத்திசெய்யும்.

### வெள்ளை அல்லி, செவ்அல்லி விதை குணம்.

இருவித அல்லிவிதைகளினாலும் சுக்கிலவிருத்தியுண் டென்று சொல்லபட்டாலும். வெள்ளைஅல்லி விதையால் சுக்கிலம் அதிகமும், செவ்வல்லி விதையால்ச் சோணிதம் அதிகமுமாம். இந்த பேதமேயன்றி ஈரலுக்கும், பீலீக கண்டங்களுக்கும் இரண்டுவித விதைகளும் சமபலஞ் செய்யும்.

### மாங்கொட்டையின் குணம்.

மாம்பழக்கொட்டைப் பருப்பால் சீதபேதி, ரத்தாதி சாரம், உதிரக்கடுப்பு, மூலச்சூடு, இவைகள் போகும்.

### பலாக்கொட்டையின் குணம்.

அள்ளுமாந்தம், குடலின்கபத்தால் மலச்சிக்கல், நெஞ்சிற்புளியேப்பம், கல்போல் வயிறு கெட்டிபடல், அதில் ஒட்டைஜாணளவு இருப்புச்சலாக்கை சொருகி னதுபோல் உபத்திரம் இவைகள் உண்டாகும். பரிகாரம் நெய், பால், இஞ்சி, மிளகு, தேன்.

### காப்பிக்கொட்டையின் குணம்.

சுத்தஇரத்தம், தீனிபைக்குபலம், சுறுசுறுப்பு, ஊக் கம், உற்சாகம், புத்திதெளிவு, இவைகள் உண்டாகும். உதிரகொதிப்பு, சளி,மார்ச்சளி, இருமல், தலைவலி,அசதி, இவைகள் நீங்கும். மூளையிற் மாசுகள் அடையாமற் காக் கும், நித்திரை பிடியாது. பரிகாரம் பசுவின் நெய், சருக்கரை.

## புளியங்கொட்டையின் குணம்.

தோலில் துவர்ப்புள்ள புளியங்கொட்டையால் சுக்கில மேகம், பித்தாதிசாரம், அதிவிரணம், மூத்திரக்கடுப்பு, வெள்ளை இவைகள் நீங்கும்.

## முந்திரிப்பருப்பின் குணம்.

பித்தவாத தொந்தம், தாதுவிருத்தி, அக்கினிமாந்தம், இவைகள் உண்டாகும். பரிகாரம் தேனும், தண்ணீரும் சேர்த்துக் குடிக்கவும்.

## வாதுமைப்பருப்பின் குணம்.

அடப்பம்விரை என்கிற வாதுமைப்பருப்பினல் விழிப் படலமும், விரணக்கொழுமையும் நீங்கும். கலவியில் விருப்பமுண்டாகும்.

## சாரப்பருப்பு, மிசரிப்பருப்பு இவை குணம்.

சாரப்பருப்பு, மிசரிப்பருப்பு இதுகளால் சிறுநீரைப் பற்றிய கடுஞ்சுறுக்கும், மூத்திரக்கடுப்பும், ஜலப்பிரமேகமும், நீங்கும் நீத்துப்போன சுக்கிலம் இறுகும். ரசகந்தங்களைத் தின்றவர்களுக்கும் நலனைத்தரும்.

மற்றவை 2-ம்பாக புஸ்தகத்தில் காண்க.

---


## தேள்கடி மருந்து.

தேள்கடி, நட்டுவாக்களி, பூரான்கடி, நாய்கடி, எலி கடிக்கு இந்தக்கல்லை அனலில் காண்பித்து கடித்த இடத்தில் வைக்க ஆச்சரியப்படத் தக்கதாக 5 நிமிஷத்திற்குள் விஷமிரங்கி கல் தானுக கீழேவிழும். அதை நல்லஎண்ணெயில் கழுவி வைத்துக்கொள்ளவும்.

இதன் விலை கல் 1-க்கு அணு 1.
குரோஸ் (144 கல்) 1-க்கு விலை ரூ 6.

விலாசம்:—டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

# மதுர வகை.

## கரும்பின் பொது குணம்.

சுத்தஇரத்தமுண்டாகும், தேகந்தழைக்கும், தாது புஷ்டியுண்டாகும், உதிரத்தை சுத்தம் செய்யும், கட்டுகளையவிழ்க்கும், நீர்பெருகும், நீர்தாரையைச்சுத்தப்படுத்தும், இருமல்,மார்வறழ்ச்சி இவைகளைப் போக்கும்,வயிற்றின் சிக்கலை அறுக்கும், காற்றை விளைவிக்கும், வயிறுப்பும், தீபனத்தைக் குறைக்கும், வாந்தியாகும். பரிகாரம் இதன் சாற்றைப்பிழிந்து சுடவைத்துக் குடிக்கவேண்டியது.

## செங்கரும்பு, ரசதாளிக்கரும்பு, புல்லகண்டங் கரும்பு இவை குணம்.

செங்கரும்பின் ரசம், பித்ததோஷத்தை நீக்கும். ரசதாளிக்கரும்பின் சாற்றினால், தாகவெப்பம் போகும். புல்லகண்டம் என்கிற கருப்பஞ்சாற்றானது, வாததோஷத்தை நீக்கும்.

## நாணர் கரும்பின் குணம்.

இதன் ரசத்தினால் வாதபயித்தியம், வமனம்,அருசி, அதிதூலம், வயிற்றிலெழுநோய், இரைப்பு, பாண்டு, இவைகள் மீறுமல் சாந்தம் செய்யும்.

## நல்ல வெல்லத்தின் குணம்.

பித்தகுன்மத்தை நீக்கும். நெஞ்சிற் கபக்கட்டு, மலாசயக்கிருமி, மதுமேகம் இவைகளை உண்டாக்கும். பரிகாரம் நெய், காடி.

## உண்டை வெல்லத்தின் குணம்.

நாணற்கருப்பஞ் சாற்றாலாகிய உண்டைவெல்லத்தால் மூலமுளை, மதுப்பிரமேகம், வயிற்றுநோய், பக்கநோய், சுக்கிலவிருத்தி இவைகள் உண்டாகும். வாதரோகம், பித்தம், இருமல் இவைகள் போகும். பரிகாரம் எலுமிச்சம் பழச்சாறு, சுக்கு.

## தேங்கின் வெல்லம், பனை வெல்லம் இவைகுணம்.

தேங்கின் வெல்லத்தால் செரியாமாந்தம், வீக்கம், நீரேற்றம், இவை அதிகரிக்கும். பரிகாரம் சுக்கு, நெய். பனை வெல்லத்தால் வாதபித்த தொந்தம், சிலேஷ்மதோஷம், ஜந்நிபாதம், அரோசகம், வாதகுன்மம், இவைகள் நீங்கும்.

## சருக்கரையின் குணம்.

கருப்பஞ்சாற்றை பக்குவப்படுத்திய சருக்கரையானது மருந்துகளுக்கு அனுப்பானமாயிருப்பதும் தவிர வாந்தி, பித்தம், அரோசகம், இவைகளைப் போக்கும், கெட்டிபட்ட கபத்தையிளக்கி மகிழ்ச்சியைத்தரும். மலம் இளகும், சுவாச உறுப்புகளுக்கும், ஈரலுக்கும், ஆத்மாவுக்கும், பலம் கொடுத்து நரம்புகளைக் கெட்டிப்படுத்தும்.

## சீனிச் சருக்கரையின் குணம்.

வாதஜ்ஜுரம், வக்கிரிக்கின்ற வாதநோய்கள், வாந்தி, கிருமிரோகம், நீங்காதவிக்கல், இவைகள் போகும். தாக முண்டாகும், பித்தம் அதிகரிக்கும். பரிகாரம் புளி, மாதுளம்பழச்சாறு.

## கற்சண்டின் குணம்.

பல்லரணை, காசம், பற்பலவாந்தி, அதிகரித்த சிலேஷ்ம தோஷம், வெப்பம், கண்களில் திரை, கண்சிகப்பு, இவைகள் நீங்கும். வெண்ணெயிற் சேர்த்து நித்தியம் சாப்பிட தேகம் பருக்கும்.

## பனங்கற்கண்டின் குணம்.

மேகஜ்ஜுரம், மசூரிகையின் வெப்பம், தங்கிவரும் நீர்ச்சுருக்கு, உஷ்ணதாகம் இவைகளை நீக்கும்.

## தேனில் உண்டாகும் கற்கண்டின் குணம்.

கண்ணிற் படருகின்ற துர்மாமிசப் படலம், உதராக்கினி, கபநோய், வாதநோய், ஜ்ஜுரரோகம், இவைகள் நீங்கும். இசைப்பாட்டுக்குரிய குரல்தொனி உண்டாகும்.

## தேன்களின் பொது குணம்.

சுத்த இரத்தமும், தாதுவிருத்தியு முண்டாகும். தேகத்திலுள்ள மாசுகளை நரம்புகளின் வழியாயிழுத்துத் தேகத்தைச் சுத்தப்படுத்தும் ஆத்மச்சூட்டின் சக்தியை அதிகரிக்கச்செய்யும். ஔஷதங்களின் குணத்தை காக்கும். விஷம், வீக்கம், காமாலை, கல்லடைப்பு, நீரடைப்பு, பக்கவாதம், சூலை, இவைகளுக்கு உபயோகப்படும். தீபனமாகும்.

## மலைத்தேனின் குணம்.

மலையிலிருக்கும் குறிஞ்சித் தேனினால் சிலேஷ்மகாசம், சுவாசம், விக்கல், விரணம், ஜுரம், தேகக்கடுப்பு, இவைகள் நீங்கும். தீபனமும், நல்ல தொனியுமுண்டாகும் இது ஔஷத அனுபானங்களுக்கு உதவும்.

## கொம்புத் தேனின் குணம்.

மாமரம் முதலிய மரக்கொம்புகளில் கட்டுகின்றதேன், திரிதோஷங்களையும், உள்மாந்தத்தையும், அரோசகத்தையும் நீக்கும்.

## புதிய தேனின் குணம்.

புதுத்தேனினால் பூர்ண ஆயுளும், சரீரவெப்பமும், தேஜசும், உண்டாகும். இது மிகவும் சேர்ந்தால் அருசியும், நெஞ்சிற் கபமும் விளையும். பரிகாரம் காடி, வாதுமைப்பிசின்.

## பழய தேனின் குணம்.

புளிப்பும், இனிப்புங்கலந்த சுவையையுடைய பழய தேனினால் வாதரோக கூட்டத்தையும், வயிற்றெரிச்சலையும், வாதமூல ரோகத்தையும் விளைக்கும். மருந்தினது நற்குணங்களைக் கெடுக்கும். பரிகாரம் காடி, வாதுமைப்பிசின். தவிர இந்தத் தேன்க்காய்ச்சி நுரையையெடுத்துவிடவும்.

மற்ற மதுரவகை 2-ம்பாக புஸ்தகத்தில் காண்க.

---

மலையாள மாந்திரீக ரத்னகரம் 8 பாகம் சேர்ந்தது மந்திர சக்கரங்களுடன் விலை ரூ 1. ஷை நயம் ரூ 1—8—0
விலாசம்:- டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

## மதுவின் வகை.

### மதுவின் சுபாவ குணம்.

மயக்கமுண்டுபண்ணுதலும், உதிரத்தை உறையப் பண்ணுதலும், மூளையை இளைக்கப் பண்ணுதலும், புலன்களைச் சிதறப்பண்ணுதலுமாம்.

### தென்னங் கள்ளின் குணம்.

சூடும் குளிர்ச்சியுமுள்ள தென்னங் கள்ளினால் சோணித சுக்கிலப்பெருக்கம், பாண்டுரோகம், சோபை, வாத பித்த கபதொந்தம், ரத்தக்களிச்சல், கரப்பான், பேதி, பிரமேகம், இவைகள் உண்டாகும். அறிவும் கெடும். உதயத்திற் புதிதாக யிறக்கியவுடனே குடித்தால் தேகந் தழைக்கும், சூட்டையகற்றும், நீரைப்பற்றிய ரோகங்களை நன்றாய்கண்டிக்கும், உதிரம்சுரக்கும், மந்திக்கும், பசியை யடக்கும். பரிகாரம் நற்சீரகம், ஏலம், கற்கண்டு

### பனங் கள்ளின் குணம்.

சுக்கிலசோணித விருத்தி, சப்ததாதுகளுக்கும்உறுதி, பித்தாதிக்கம், இவைகள் உண்டாகும். தேகஉஷ்ணம், விதாகம், பித்தவெட்டை, அழலை, பிரமியம், வெள்ளை, சொறிசிரங்கு, தினவு, இவைகளைநீக்கும் இதில் பாஷாண வகைகள் சுத்தியாகும்

---

கணித முருகசேகர ஜோஸ்ய புக் ரூ 1 ஷை நயம் ரூ 1-4-0
விலாசம்:- டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

### அத்திமர கள்ளின் குணம்.

அத்திமர வேரிலிரங்கிய கள்ளில் சீனிச்சருக்கரை யாவது, பேயன்வாழைக்கனியாவது கலந்து தினமும் சூரியோதயகாலத்தில் உண்டுவர அஸ்திமேகம், உட்சூடு, மூர்ச்சை, தாகம் இவைகள் நீங்கும்.

### ஈச்சங் கள்ளின் குணம்.

உள் அழலை, பிரமேகம், மூத்திரக்கிரிச்சரம், அரோசகம், புத்தி, இவைகள் நீக்கும். சரீரத்தில் குளிர்ச்சி, பித்த கோபம், வீக்கம், திமிர்வாய்வு, இவைகள் உண்டாகும். பரிகாரம் இஞ்சி, ஏலம், தேன்.

### திராட்சிப்பழச் சாருயத்தின் குணம்.

முந்திரிகைமது யென்கிற திராட்சிப்பழச் சாராயத்தினல் வாதபித்தகப தோஷங்களும், தேக அழற்சியும் நீங்கும். விந்துவும் ரத்ததாதுவும் விருத்தியாகும். இந்த மதுவர்க்கங்களெல்லாம் காமத்தையுண்டாக்கும் ஆதலால் காமமற்ற பெரியோர் அருந்தில் குற்றமில்லை.

### வேலம்பட்டைச் சாருயத்தின் குணம்.

போதை உண்டாகும், பித்தகோபத்தை வருவிக்கும், அதிக போதையானல் எள்ளெண்ணெய் சேர்த்தால் போதையின் கூர்மை மழுங்கிபோகும், அசதியுண்டாகும். பரிகாரம் எலுமிச்சம்பழம் அல்லது சீரகம்,புதியன, கொத்தமல்லியிலை துவயல்.

### பேரிச்சம்பழத்திலிறக்குஞ் சாராயத்தின் குணம்.

தாதுஉண்டாகும், தீபனம் அதிகரிக்கும், மலம் இளகும், விர்த்தாப்பியருக்கும், விந்து நஷ்டமுள்ளவருக்கும் அதிக உபயோகப்படும். ஆனல் வண்டலைபற்றிய ரோகங்களை அதிகப்படுத்தும் பரிகாரம் இனிப்பு மாதுளைப் பழச்சாறு.

## பற்பல தானியங்களினுல் செய்யுஞ் சாராயம்.

அதிகமயக்கமும் பசியுமுண்டாகும், மலத்தைக்கட்டும், அழுகைக்கொடுக்கும், தாதுகுறையும், வயிறுப்பும், தேகம் இளைக்கும். பரிகாரம் தேன், சுத்தஜலம்.

## கஞ்சாவின் குணம்.

மூலவாய்வு, கிரகணி, நீடித்தஅதிசாரம், அதிதூலம், கபாதிக்கம், கரப்பான், இவைகள் போகும். மிகுமயக்கமும் அதிதீபனமும், தாது விருத்தியுமாம். கஞ்சாவை புகையிலையுடன் சேர்த்து புகைக்குடித்தால் ஆனந்தக் களிப்புண்டாகும். இரைப்பையையும்,ஈரலையும், பஞ்சைப் படுத்தும், புலன்பொறிகளை குன்றவைக்கும், முகத்தின் தேஜசை மாற்றிவிடும், அசதியுண்டாகும், இந்தபுகையை அதிகமாக கொள்வதினுல் தாதுவிருத்தி குறையும். பரிகாரம் கசகசா, வாதுமைப்பருப்பு.

மற்ற மதுவர்க்கங்களை 2-ம்பாக புஸ்தகத்தில் காண்க.

---

## பிரபஞ்ச உற்பத்தி.

இந்தப் பிரபஞ்சவுற்பத்தி என்னும் சாஸ்திரமானது எல்லா பாஷைகளிலுமிருந்து மொழிபெயர்த்து எழுதியது. இதை சர்வ மதத்தினரும் வாசிக்கத்தகுந்த பொதுவான சாஸ்திரமென்றறிக. அநேக ஆப்டோன் படங்களடங்கிய பெரிய புத்தகம். இதன் விலை ரூ 4.

ஷை நயம் விலை ரூ 5.

விலாசம்:- டி. என் சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

# இறைச்சி வகை.

## வெள்ளாட்டு இறைச்சியின் குணம்.

உட்ஜுரங்களும், வாதபயித்தியமும், க்ஷயமும் போகும். சரீரபுஷ்டியும், வீரியமும் விளையும். பத்தியத்திற்கு உதவும். கபத்தைய றுக்கும், மார்புக்கும் பலம்உண்டாகும்.

## கொடியாட்டு இறைச்சியின் குணம்.

கொடியாட்டு இறைச்சியைப் பூப்போல் பாகஞ்செய்து காலையில் உண்ணில் சகஞ்விருதவாய்வு, காசம், சீழ்மேகம், உஷ்ணவாய்வு இவைகள் போகும். தேகம்தழைக்கும், மார்ப்புக்கும், இடுப்புக்கும் பலத்தைக் கொடுக்கும். பத்தியத்திற்காகும், தாதுவிர்த்தியுண்டாகும்.

## வரையாட்டு இறைச்சியின் குணம்.

வனமூலிகைகளைத்தின்கிற வரையாட்டிறைச்சி கனத்தரோகங்களையும் மிகுந்த துர்ப்பலத்தையும் போக்கும். பத்தியக்கறியாம்.

## செம்மறியாட்டு இறைச்சியின் குணம்.

செங்கரப்பனும், முன்பில்லாத பலவித ரோகங்களும், சகலதுன்பமும், மந்தமும், உண்டாகும். காற்று, கொழுமை, தாதுவிர்த்தி, சத்துக்கள், அழகு, இவைகள் அதிகரிக்கும். பரிகாரம் புதியனு, இஞ்சி, எலுமிச்சம்பழம்.

ஜோதிட சஞ்சீவி புக் விலை ரூ 1½ ஷை நயம் விலை ரூ 2.
விலாசம்:—டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

# பறவை இறைச்சி அல்லது கறி வகை.

## கோழிக் கறியின் குணம்.

சூடுள்ள கோழிக்கறியை யுண்ணில் ஔஷத வேகம், மகாவாதம், சுவாசம், தேகக்கடுப்பு, மந்தாக்கினி, மூலம் இவைகள் போகும். சுக்கிலம், கொழுப்புள்ள விரணம், பித்தம் இவைகள் உண்டாகும். உடம்பு இளைக்கும். பரிகாரம் காடி, எலுமிச்சம்பழச்சாறு.

## கருங்கோழிக் கறியின் குணம்.

மருந்தாகிய கருங்கோழிக் கறியினால் குஷ்டம், காணுக்கடி, புழு, மகாவாதங்கள், சூலை, சிறுசிரங்கு, விரணம், வலிப்பு, இவைகள் போகும். உடல் வலுக்கும்.

## கானங்கோழிக் கறியின் குணம்.

கறிய கானங்கோழிக் கறியால் வாதகப நோயினங்கள், காசம், கரப்பான், வியங்கலாஞ்சனம் இவைகள் போகும். பத்தியத்திற்குதவும்.

## வான்கோழிக் கறியின் குணம்.

விந்து, மகிழ்ச்சி, சிலேஷ்மபந்தம், கரப்பான் இவைகள் உண்டாகும். பரிகாரம் புதியனு, எலுமிச்சம்பழச்சாறு.

## வாத்துக் கறியின் குணம்.

கசிவு, வறண்டு, சிவந்தாரிய இரணம், கிரந்தி, கோழை, அருசி, இவைகள் அதிகரிக்கும், சுக்கில ஸ்தம்பனமாம். மந்திக்கும், உதிரத்தைத் தோயச்செய்யும். பரிகாரம் காடி, தேன்.

## புருக் கறியின் குணம்.

இரத்தத்தைபற்றிய ரோகங்கள் நன்றுய்க் கண்டிக்கும், பாரிசவாதம், பக்ஷவாதம், இசிவு, வீக்கம், மகோதரம் இவைகளைநீக்கும். கொழுமையுண்டாகும், குண்டிக்காய்க்கு பலம் கொடுக்கும், சூட்டுடம்புக்கு தலைவலியுண்டாகும், உதிரம் பொங்கும். பரிகாரம் கொடிமுந்திரிப் பழச்சாற்றில் சமைக்கவும்.

## கோழி முட்டையின் குணம்.

வாததோஷம், விரணம், கபப்பிணி இவைகளை நீக்கும். விந்துவிளையும்; தாதுவிருத்தி அதிகரிக்கும்.

## வாத்து முட்டையின் குணம்.

தேகபலமுண்டாகும். உடற் பருக்கும், மந்திக்கும், வயிறுவலிக்கும், காற்றுஅதிகரிக்கும். பரிகாரம் இஞ்சி, சீரகம், கொத்தமல்லி.

## மயில் முட்டையின் குணம்.

பிடிப்புகளையும் கடிகளையும் போக்கும், ஜீரணமும், பலமும் உண்டாகும். இது உஷ்ணம். பரிகாரம் கொத்தமல்லிக்கீரை, வெங்காயச்சாறு.

## காக்கா முட்டையின் குணம்.

மண்ணீரலுக்கு பலம் கொடுக்கும், காமாலை, பித்தபாண்டு, சோபை இவைகளை நீக்கும், ஜீரணமாகும், கண்ணொளி அதிகப்படும், சூட்டுடம்புக்குதவாது. பரிகாரம் வெங்காயச்சாறு, கொத்தமல்லிக்கீரை.

# கடல் மீன் கறிவகை.

## கெளிற்று மீன் கறியின் குணம்.

நெய் பசையும் மிருதுவும் உள்ள கெளிற்று மீனை உண்ணில், மாருவீரியமும், அரைக்கடுவனும், விரணமும், சிலேஷ்மமும் பெருகும். பரிகாரம் தேன், காடி.

## சுறுமீன் கறியின் குணம்.

வாதகப தொந்தம், கிருமிநோய், குடல்விருத்தி, இவைகளைநீக்கும். சகலப்பிணிகளையும் சாந்தப்படுத்தும்.

## மடவைமீன் கறியின் குணம்.

வாதப்பிணி, அக்கினிமந்தம், மூலமுளை, ஆந்திரபித்த வாதம், கடுவன், இவைகளைத்தரும். மாமிசம்விருத்தியாம், பரிகாரம் நெய், காடி.

## விலாங்குமீன் கறியின் குணம்.

இது அதிகமாக தின்றால், கபாதிக்கம், அரோசகம், தாதுவிருத்தி, சொறி, விரணம், கடுவன் இவைகள் யுண்டாகும். பரிகாரம் நெய், காடி.

## ஆற்றுமீன், கிணற்றுமீன் கறியின் குணம்.

ஆற்றுமீன் வீரிய விருத்தியை செய்யும், சீதஜுரத்தையும், நாவில் சுரக்கின்ற அரோசக நீரையும் போக்கும். கிணற்றுமீன், வாய்வு, குன்மம், பித்தம், குறைநோய், பீலிகரோகம் இவைகளையுண்டாக்கும். பரிகாரம் நெய், காடி, தேன், புளி, கொத்தமல்லி, இஞ்சி.

# கடைசரக்கின் வகை.

## சுக்கின் குணம்.

விலாக்குத்தல், அஜீரணம், மார்பு எரிச்சல், புளியேப்பம், வெப்பம், ஆசனநோய், சுவாசகாசம், ஜலபீநசம், நீரேற்றம், பேதி, வாதகுன்மம், ஜலதோஷம், சீதகிரகணி வாதநோய், வயிற்றுப்பிசம், செவிக்குத்தல், முகநோய், சிரநோய், சீதபேதி, பலவிதஅரோசிகம், அலிமுகபாண்டு, வயிற்றுக்குத்தல், கபசீதஜுரம், முதலிய ஜுரரோகங்கள் நீங்கும். இதல்லாமல் இன்னும் அநேக ரோகங்கள் நிவர்த்தியாகுமென்று மஹான்களின் கருத்து.

## கறி உப்பின் குணம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், வாதபித்தகபம், நீரடைப்பு, இவைபோகும், பசியும் சமஅக்கினியும் விருத்தியாம்.

## மிளகின் குணம்.

குளிர்ஜுரம், பாண்டு, கபம், கிரகணி, குன்மம்,வாயு, அரோசகம், பயித்தியம், மூலம்,சந்நியாசம், அபஸ்மாரம், பிரமேகம், இருமல்,பங்குவாதம், குய்யரோகம், சோணித வாதம், செவிவலி, ரத்தகுன்மம், காமிலம், அஜீரணம், இவைகள் போகும்.

## வால்மிளகின் குணம்.

திரிதோஷ கோபம், குன்மம், விதாகம், வெட்டை முதலிய சிற்சில ரோகங்கள் விலகும் பசியுண்டாகும்.

## சீரகத்தின் குணம்.

பித்தசாந்தி, அரோசகம், வயிற்றுவலி, முகரோகம், பீலிகநோய், சுவாசம், காசம், சீதரத்தகிரகணி, வாதாதிக்கம், பீநசம், பயித்தியம் ஆகிய இவை விலகும். சரீரத்திற்கு உருதியும், கண்ணுக்கு குளிர்ச்சியும் உண்டாகும்.

## காட்டுசீரகத்தின் குணம்.

கிரும்புள்ளி, பிரமேகம், பயித்தியம், வாதகுன்மம், இவைகள் போகும். குளிர்ச்சியுண்டாகும்.

## கசகசாவின் குணம்.

ரசதாதுகிருமி, தினவு, சீதரத்தக்கழிச்சல், மலபேதி, ஜலதோஷம், நித்திரைபங்கம், இவைகள் போகும். தேகத்தில் சௌந்தரியம், தேஜஸு, சுக்கிலம் இவைகள் விருத்தியாகும்.

## சிறு கடுகின் குணம்.

விஷம், சிலேஷ்மநோய், மூச்செறியச் செய்கின்ற வயிற்றுவிம்மல், இவைகள் நீங்கும். இது சர்மம், ரசம், ரத்தம், மாமிசம், மேதை ஆகிய இத்தாதுக்களின் வாய்வினல் பிரக்கின்ற பிணிக்கு விரணம் உண்டாகும்படி செய்யதக்க காரமுடையதாம்.

## வெண்கடுகின் குணம்.

கந்தகிரகம் முதலிய 12 பர்பகிரகங்கள், தேவ, பூத முதலிய 18 வகை பூதங்கள், மகாசர்பவிஷம், வண்டுமுதலிய விஷக்கடிகள், பங்குவாதம் இவைகளை நீக்கும்.

## கொத்தமல்லியின் குணம்.

உட்சூடு, நளிர்ஜுரம், பயித்தியவேகம், அஜீரணம், வாந்தி, விக்கல், நாவறட்சி, க்ஷீணசுக்கிலம், பெரும்ஏப்பம், விரணம், ஆகிய இவைகளைப் போக்கும்.

## வெந்தயத்தின் குணம்.

கணமாந்தம், அஸ்திஜுரம், பிரமேகம், க்ஷயம், சீதக் கழிச்சல், பேதி, ரத்தபித்தம், காசம், உட்சூடு முதலிய பிணிகளைவிலக்கும் நிரந்தரமாகச் சுக்கிலத்தை விளை விக்கும்.

## ஓமத்தின் குணம்.

குளிர்ஜுரம், இருமல், அஜீரணம், வயிற்உப்பிசம், அதிசாரம், குடல்இரைச்சல், ஆசனகடுப்பு, சீதபேதி, சுவாசகாசம் தந்தரோகம், தந்தமுலரோகம், குய்யரோகம் இவைவிலகும்.

## சதகுப்பையின் குணம்.

வாதரோகம், அசிர்க்கரம், தலைவலி, கர்ணசூலை, ஜல தோஷம், கபரூட்சை, ஆசனக்கடுப்பு, சலபீநசம், இவை களை நீக்கும்.

## திப்பிலியின் குணம்.

காசம், கபகுன்மம், சுவாசம், க்ஷயம், கோளை, பாண்டு, சந்நியாசம், அருசி, வயிற்உப்பிசம், வாய்வு, சிரஸ்தாபம், மூர்ச்சை, நீரேற்றம், பீலிகநோய், அதிசாரம், பெருவயிறு, திரிதோஷம், நடுக்கல்ஜுரம், மேககட்டி, குதரோகம், நெஞ்சுநோய், ஆவிருதபித்தம், பீநசம், விழிநீர்க்கம்மல், கர்ணநாதம், கிருமி, முகத்தில் எழும்புகின்ற கருத்த மச் சம் இவை போகும்.

## திப்பிமூலத்தின் குணம்.

பித்ததாகம், மூர்ச்சை, சந்தஜ்வரம், காசம், பிரமேகம், சுக்கிலரோகம், சரீரநோவு இவைகள் போகும்.

## திரிகடுகின் குணம்.

திரிகடுகு என்பது,சுக்கு, மிளகு, திப்பிலிஆம், கர்ணரோகம், பாண்டு, சிரஸ்தாபம், அஸ்தியைபற்றிய தாவரவிஷம், கபபித்தம்,சிரவாகண்டம், கிருமி, மகாசர்பவிஷம், தேள்விஷம், காசம், சந்நியாசம், அரோசகம், அபஸ்மாரம், அற்புதவிரணம், நாடிவிரணம், இவைகள்விலகும்.

## வெள்ளைப் பூண்டின் குணம்.

ஜந்நி, வாதரோகம், சிலேஷ்ம சிரஸ்தாபம், வாய்ப்பூட்டுநோய், நீரேற்றம், சீதபேதி, அரோசிகம் இவைகள் நீங்கும்.

## பெருங்காயத்தின் குணம்.

தந்தரோகம், தந்தமூலரோகம் சகல சர்பவிஷம், தேள்விஷம், கிருமி, அஜீரணம்,வாதாதிக்கம், உதாவர்த்தவாதம், யோனிரோகம், வாய்வு, எண்வகை குன்மம்,சூலை, ரத்தகிருமி, கபநோய்க்குடைச்சல் இவைகள் தீரும்.

## அரத்தையின் பொதுக் குணம்.

நெஞ்சுக்கோழை, சீதளம், கரப்பான், ஈளை இருமல், மூலம், வீக்கம், தந்தநோய், வாதசோணிதம், தீஜ்வரத்தால் பிறந்த கபம், தந்தமூலப்பிணி இவைகளை நீக்கும். பசியைத்தரும்.

## சிற்றரத்தையின் குணம்.

பயித்தியம், கரப்பான், வாய்வு, சிரஸ்தாபம், சிலேஷ்மம், சிரதோஷம், சீதளம், பலஜுரம் இவைகள் போகும்.

## வசம்பின் குணம்.

விஷங்கள், அற்புதவிரணம், ஐவகைவலி, விஷபாகரோகம், குன்மம், ரத்தபித்தம், வாய்நாற்றம், சூலை, ஜன்னிபாதம், பிசாசம், பீலிகநோய், காசம், வயிறுபோலநீண்ட மலக்கிருமி இவைகள் போகும்.

## கோஷ்டத்தின் குணம்.

கண், தாடை, வயிறு, கழுத்து, சிரசு, நா, வாய், இவ்விடங்களில் நோய்கள், தோஷஜுரம், வீக்கம், உதாவர்த்தகம், கம்பவாதம், மூளைமுலசம், ஈளை, இருமல், எலி, சர்ப்பம், நாவி, முதலியவிஷங்கள், மேகப்பிடகம், அஜகல்லிகாரோகம், விஷபாகம், 18 வகை பூதகணங்கள், பாலகிரகதோஷம், வீரியநஷ்டம், வெள்ளைவிழல், பயித்தியம்ஆகிய இவைகள் விலகும். சுகப்பிரசவம் உண்டாகும்.

## பெரிய ஏலத்தின் குணம்.

சுரக்கினம், பித்தமுகபாகம், தாளுபாகம், பித்தசிக்வாகண்டகம், சர்மகீலம், பேதி, அரையாப்புகட்டி, கிரிச்சரம், வாயில் உழலை, சர்த்தி சிலந்திவிஷம், ரூட்சை, உஷ்ணபேதி, விதாகம், இருமல், சோமரோகம், வயிற்றில் கபநிறைவு, நெஞ்சிற்கோழை, ரத்தபித்தம் ஆகிய இவ்விதநோய்களை விலக்கும்.

## ஜாதிக்காயின் குணம்.

விந்துநஷ்டம், அதிசாரம் ஆகிய வாதங்கள், தலைநோய் இரைப்பு, இருமல், உஷ்ணவாத கிரகணி முதலிய ரோகங்கள் விலகும். மயக்கமும், பித்தமும் அதிகரிக்கும்.

## ஜாதிப்பத்திரியின் குணம்.

அழற்ஜுரம், கிரகணி, ஜலமந்தபேதி, இவை நீங்கும் பயித்தியமும், சுக்கிலப்பெருக்கமும் உண்டாகும்.

## லவங்கப்பட்டையின் குணம்.

சுக்கிலநஷ்டம், அதிசாரம், பற்பல விஷங்கள், வாயை அநுசரித்த வாதம், தேவபூதமாகிய கிரகங்கள், சிலந்தி விஷம், பாம்புவிஷம், சுவாசகாசம், முதலிய நோய்களை விலக்கும்.

## லவங்கப்பத்திரியின் குணம்.

பிரமேகஜுரம், குளிர்ஜுரம், வெள்ளை, இரைப்பு, இருமல், பித்ததாகம், வமனம், க்ஷீணசுக்கிலம், வாய்கசப்பு, அரோசகம், விவுர்தாசிகம், மேகப்பிடகம், இவைகளை நீக்கும்.

## தாளிசப்பத்திரியின் குணம்.

பீநசம், களரோகம், நாட்சென்ற இருமல், இரைப்பு, அரோசகம், வாந்தி, வாய்வு, சீழ்ப்பிரமேகம், அஜீரணம், அஸ்ததாது, கதஜுரம், ஆகிய இவைகள் போகும் சுகப்பிரசவம் உண்டாகும்.

## முப்பத்திரியின் குணம்.

லவங்கம், ஜாதி, தாளிசம், என்கிற மூன்று பத்திரிகளாலும் மலபந்தம், தனிஜுரம், அதிதாகம், வமனம், விக்கல், இவைகள் போகும்.

## கடுக்காயின் பொது குணம்.

கன்னம், களம், கண், நா, ஆண்குறி, இவ்விடத்து நோய்கள், பாதவன்மீகம், அதிசாரம், பங்குவாதம், அதிதூலம், இடிப்புண்வாதம், சோணிதவாதம், காமிலம், தாவரசங்கம், விஷங்கள் இவைகள் போகும்.

## கடுக்காய் பிஞ்சின் குணம்.

கடுக்காய் பிஞ்சுக்கு ஆமணக்கு நெய்த்தடவி தீயில் வருத்து தூள்செய்து அப்போதேயுண்டால், மலசிக்கலும் எலும்மைப்போல வெளுத்து நின்ற சீதமும் நீங்கும் மூலவாய்வினால் பிறந்த முக்கலும் ஆசனகடுப்பும் போகும்.

## சாம்பிராணியின் குணம்.

வேம்பைப்போல் கசப்புள்ள சாம்பிராணி வாதகபம், விழிநோய், நீங்காத சிரநோய், ஜலபீநசம், இவைகளை விலக்கும்.

## கருப்பூரத்தின் குணம்.

கிருமி, நீரேற்றம், இசிவு, ஜன்னிவாதம், தீப்புண், கோரஜுரம், சர்த்தி, பயித்தியம், சிலேஷ்மவாதம், கர்ணசூலை, சிலேஷ்ம முகபாகரோகம் ஆகிய இவைகள் போகும்.

### பச்சைக் கருப்பூரத்தின் பொது குணம்.

8-வித குன்மங்கள், கீல்களில் குத்தல், வாதரோய், சீள்ப்பிரமேகம், சிலேஷ்மகோபம் இவை நீங்கும்.

### பேரிச்சங்காயின் குணம்.

உமிழ்நீர்ப் பெருக்கையும், மதுநீரையும் போக்கும். பசியையும், புணர்ச்சியில் நிர்வாகத்தையும் உண்டாக்கும். இதனை கர்ச்சூர்க்காய் என்பர்.

## வஸ்திர வகை.

### சகலாத்தின் குணம்.

சகலாத்தென்கிற ரோமவஸ்திரம் நடுக்கர்ஜுரத்திற்கும்உபயோகப்படுவதுமன்றி குளிர்பனி, அசிர்க்கரரோய், இவைகளை நீக்கும். இது உஷ்ணம், வர்ன சேர்க்கையால் அனந்தபேதமிருக்கினும் எதற்கும் அக்குணமே. ஆனால் வெண்மை, பசுமை, நீலம், ஊதா என்னும் நிறங்களுள்ளவைகள் அற்ப உஷ்ணமாம். பரிகாரம் வெண்ணெய், காடி.

### சாலுவையின் குணம்.

நீரேற்றம், சிரோரோகம், வலிவாதம், வாதகுன்மம், நளிர், மூடுபனி இவைகள் போகும்.

### பட்டு வஸ்திரத்தின் குணம்.

பத்தியசிலேஷ்மம் விலகும், மனக்களிப்பு, ஞானம், வியர்வு, தேஜஸ் இவைகள் உண்டாகும்.

## வெண்பட்டு வஸ்திரத்தின் குணம்.

அதிஜுரம், குளிர், வாதநோய், ஸ்திரீவசியம் இவைகள் போகும். வனப்பு உண்டாகும்.

## நாருமடியின் குணம்.

கபகட்டு, ஜலதோஷம், குடல்விருத்தி வாதம், ஜந்நிபாதஜுரம், இவைகள் போகும். சரீரம் சுசிகரமாம்.

## வெள்ளை வஸ்திரத்தின் குணம்.

வாதாதி தோஷங்களும், வியர்வும், விலகும். ஆயிசு விருத்தி, லக்ஷ்மிவிலாசம், வனப்பு, மகிழ்ச்சி, அறிவு, பலம், இவைகள் உண்டாகும்.

## சிவப்பு வஸ்திரத்தின் குணம்.

அதிபயித்தியம், உட்சூடு, தருணஜுரம், வமனம், அரோசகம், சிலேஷ்மகோபம், அலசம், என்னும் இவைகளில் ஏதேனும் ஒரு ரோகம் அனுசரித்திருக்கும் காலத்தில் மிகவும் சிவந்தவஸ்திரம் உடுக்கலாகாது. உடுத்தினல் மேற்சொல்லிய ரோகங்கள் விருத்தியடையும்.

## மஞ்சள் வஸ்திரத்தின் குணம்.

வாதநீர்ச்சுருக்கு, இருமல், விஷஜுரம், மாருத்தினவு, தனிஜுரம், மலபந்தம், இவைகள் நீங்கும்.

## பச்சை வஸ்திரத்தின் குணம்.

உட்சூடும், சிலேஷ்ம தோஷமும் போகும் கண்ணுக்குக் குளிர்ச்சியும் தேகப்பூரிப்பும் உண்டாகும்.

## கறுப்பு வஸ்திரத்தின் குணம்.

இருமல் ஜுரம், சர்ப்பநஞ்சு, அக்கினிமந்தம், பயித்தியதோஷம் இவைகள் ஒழியும்.

## அழுக்கு வஸ்திரத்தின் குணம்.

அழுக்குவஸ்திரம் தரிப்பவருக்கு, பற்பல துன்பம், மிருகளிர் துயரம், நமைச்சல், கிரகசங்கை, நாணம், இவைகள் உண்டாகும். சரீர ஒளியும், நுட்பமாகிய அறிவும் விலகும். பரிகாரம் வஸ்திரம் சுத்தமாக வைத்துக் கொள்ளவும்.

## கம்பளத்தின் குணம்.

மூடுபனியை விலக்கி உடலை காக்கும். அசிர்க்கரம், அஜீரணங்கள், திரிதோஷ கிரகணி, கீல்பிடிப்பு, அதிசாரம், கறுப்பாக ஒழுகுறசீழ் இவைகளை நீக்கும்.

## முண்டாக, கவசம், நடுகட்டு இவைகளின் குணம்.

சிறசிற் கட்டுகின்ற முண்டாக, வாதபித்த தொந்தத்தைப் போக்கும் கவசம் என்கிற அங்கியினால் தேக ஒளியும், புஷ்டியும், உதராக்கினியும் உண்டாவதும்தவிர பித்தகோபமும் நீங்கும். நடுக்கட்டு என்கிற அரைக்கச்சையால் பலம் பொருந்திய ஆண்மையுண்டாகும்.

## ஆபரணத்தின் குணம்.

ஆபரணம் பூணில் சீரத்துக்கு அழகும், மங்களகரமும், வசிகரமும், மகிழ்ச்சியும் உண்டாகும்.

---

18 சித்தர் நாடி சாஸ்திரம் புக் 1, ரூ 1. ஷை நயம் ரூ 1¼
விலாசம்:- டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

# பரிமள வகை.

## பரிமள சந்தனம் பூசுதலின் குணம்.

புசித்தவுடன் பகல் இரவிலும் பூசப்பட்ட பரிமள சந்தனத்தினல் மகிழ்வும், உதராக்கினி வன்மையும், இவ் வாசனையின் சூட்டினல் சோணித சுக்கில விளைவும் உண்டாகும். ரசதாதுவில் ஊருகின்ற அணுக்கிருமிகளும், சந்திரகிரணத்தால் வராநின்ற சீதளக்குளிரும் நீங்கும்.

## மலர்மாலையணிதலின் குணம்.

முல்லை முதலிய மிகு வாசனையுள்ள மலர்மாலையை தரிப்பவர்கட்கு சுக்கில தாதுவிருத்தியும், மங்களவார்த்தையும், மகிழ்ச்சியும், பலர் புகழ்ச்சியும் உண்டாகும். மனத்துயரம் போகும்.

## பன்னீரின் குணம்.

பன்னீரை ஔஷத அனுபானங்களிற் கூட்டி அருந்தில், சுகஜன்னியும், ஜந்நிபாதங்களும் விலகும். தனியே குடித்தால் ஆயாசமும், திரிதோஷங்களும், மனச்சங்கடமும் நீங்கும். பன்னீர்பூ சீதோஷ்ணதிரவியம் ஆதலால் இதிலிறங்கிய நீரைக் குளிர்ச்சி என்பர்.

---

ரோமரிஷிவினடி பஞ்சபக்ஷி சாஸ்திரம் உறையுடன்
விலை ரூ 1—8—0 ஷை நயம் விலை ரூ 2—0—0
விலாசம்:—டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை.

# புஷ்பத்தின் வகை.

## பச்சை குங்குமப்பூவின் குணம்.

இன்சுவையால் பிறந்த துர்குணங்கள், நீரேற்றம், நாசி, நேத்திரம், செவி, இவைகளைபற்றிய ரோகங்கள், பயித்தியம், சிலேஷ்மதோஷம் இவைகள் விலகும்.

## சண்பகப்பூவின் குணம்.

நல்ல மணமும், சூடும்உள்ள சண்பகப்பூவினால் வாத பித்தமிஸ்ரம், அஸ்திஜுரம், பிரமேகம், தனித்தோஷ ஜுரம், சுக்கிலநஷ்டம், நேத்திர அழலை, இவைகள் போ கும். மனக்கழிப்புண்டாகும்.

## பாதிரிப்பூவின் குணம்.

தீ ஜுரமும், மேகமும் நீங்கும். ஸ்திரீ வசியமாகும்

## மந்தாரப்பூவின் குணம்.

இராஜவசியத்தையும், விழிக்குக் குளிர்ச்சியையுட செய்யும். சரீர வெப்பத்தை நீக்கும்.

## பன்னீர்ப்பூவின் குணம்.

வாந்தி, அருசி, சுக்கிலக்ஷீணம், நாவறட்சி, பித் கோபம் இவைகள் போகும்.

## செந்தாழம்பூவின் குணம்.

சிரஸ்தாபரோகம், நீரேற்றம், நெஞ்சிற்கபாதிக்கம், இருமல், சலிக்கின்ற வாதகோபம் இவைகளைப் போக்கும். சரீரத்தில் மினுமினுப்பையுண்டாக்கும்.

## செவந்திப்பூவின் குணம்.

வாசனையுள்ள செவந்திபூவால் மூர்ச்சையும், தலைச் சுழலும் நீங்கும். கண்ணுக்கொளியும், ரோமச்செழிப்பும், உண்டாகும்.

## ஜாதிப்பூவின் குணம்.

திரிதோஷம், தலைநோய், தேகஉஷ்ணம், கண்படலம், இவைகள் நீங்கும். நீங்காத ஒளியும், மணமும் உண்டாகும். இதனை பிச்சிப்பூ என்பர்.

## மல்லிகைப்பூவின் குணம்.

புணர்ச்சியில் அதிவிருப்பமுண்டாக்குகின்ற மல்லிகைப்பூவால் கோழை, கண்மயக்கம், தேகஉஷ்ணம்,சூன்னி ம் இவைகள் நீங்கும். லக்ஷிமி கடாக்ஷமுண்டாகும். தனை உஷ்ணமென்பர். பரிகாரம் பால், நெய்.

## முல்லைப்பூவின் குணம்.

முல்லை என்கிற ஊசிமல்லிகைப்பூ மனோவியாதியை ம், உள்வெப்பத்தையும், அரோசகத்தையும், நீக்கும்.

## தாமரைப்பூவின் குணம்.

பலவிதமான ரோகம், வெப்பத்தால் பிறந்த விழி எரிச்சல், ஜுரம், விதாபம், இவைகளைப் போக்கும்.

## வெள்ளைத் தாமரைப்பூவின் குணம்.

ஈரலில் அதிகரிக்கின்ற உஷ்ணமும், வெப்பமும்,ஔஷத வேகமும், உட்சூடும் நீங்கும்.

## அல்லிப்பூவின் குணம்.

ரத்தப்பிரமேகம், ஆண்குறித்துவார விரணம், வெகு மூத்திரம், தாகம், உட்சூடு, இவைகள் நீங்கும்.

## வாழைப்பூவின் குணம்.

ரத்தமூலம், பிரமேகம், வெள்ளை, பயித்தியம், கபாதிக்கம், உதரக்கடுப்பு, இருமல், கை, கால் எரிச்சல்,இவைகளை நீக்கும். சுக்கிலவிருத்தியைத்தரும்.

## முருங்கைப்பூவின் குணம்.

பித்ததோஷமும், அரோசகமும் நீங்கும். கண்குளிர்ச்சியும், சுக்கில விருத்தியுமுண்டாகும்.

## அகத்திப்பூவின் குணம்.

சுருட்டு முதலிய புகைகளாலும், வெய்யிலாதி உஷ்ணதிரவியங்களாலும் பிறந்த பித்தங்களும், தேக அழலேயும் நீங்கும்.

## செவ்வகத்திப்பூவின் குணம்.

பிர்மிக்கும்படி நாசியிலிருந்து விழுகிற ரத்தப்பெருக்கை விரைவில் நிறுத்துவதும் தவிர உள் வெப்பத்தையும் நீக்கும்.

## வேப்பம்பூவின் குணம்.

நாட்சென்ற வேப்பம்பூவினால் ஜந்நி, மூர்ச்சை, ஜிம்மகதோஷம், வாந்தி அரோசகம், நீடித்தவாதம், ஏப்பம், மலக்கிருமி இவைகள் போகும்.

## மாதுளம்பூவின் குணம்.

பித்தவாந்தி, வாயிறலோதல், வெப்பம், ரத்தமூலம் இவைகள் போகும் ரத்த புஷ்டியையும், பலத்தையும் தரும்.

மற்ற பூ வகை 2-ம்பாக புஸ்தகத்தில் காண்க

## தாம்பூலப் பொது குணம்.

தாம்பூல ரசத்தினால் கிருமி, கபம், தாகம், பல்நோய், விடாய், இவைகள் நீங்கும். பசி, ஸ்திரீகள் உரவு, மல சுத்தி, நுண்ணறிவு, சுக்கிலவிருத்தி, தருமகுணம், அழகு இவைகள் உண்டாகும். அன்றியும் இது சுபாசுபங்களுக்கும் உதவும். தாம்பூலம் என்பது ஏலம் முதலிய வாசனை திரவியம், துவர்பாக்கு, உறைப்பு, வெற்றிலை, காரம் சுண்ணும்புமாம்.

## தாம்பூலத்தில் காய்ச்சுக்கட்டி, சுக்கு, லவங்கம் இவைகள் சேருதலின் குணம்.

காய்ச்சுக்கட்டி சேர்ந்த தாம்பூலத்தினால் அசைவுற்ற பற்கள் இறுகும், அந்தச்சாற்றினால்மலக்கிரிமிகள் கெடும். சுக்கு, கிராம்பு முதலிய மணவர்க்கங்கூடிய தாம்பூலத்தினால் முக களிப்புண்டாகுல். சரீரத்தைபற்றிய சிலரோகங்களும், அஜீரணம் முதலியவைகளும் நீங்கும்.

---


## ஒஸ்தி தாதுவிருத்தி சஞ்சீவி திராவகம்.

கால் அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை அணு 8.
அரைக்கால் அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை அணு 4.
விலாசம்:- டி. என். சீதாராமய்யர் கம்பெனி, மதுரை,

# விசிறி வகை.

## மையில் விசிறியின் குணம்.

மயில் இறகினுல் செய்த விசிறியால் விஷம், ஜன்னி பாதம், வயிற்றுவலி, தலைச்சுழலல், பித்தகோபம், விக்கல், வியர்வை, வாதகோபம், இவைகள் நீங்கும். அறிவு விளங்கும், இது உஷ்ணமாம். பரிகாரம் பால், நெய்.

## வெட்டி வேரின் விசிறி குணம்.

பயித்தியதோஷம். தேகஎரிவு, விதாகம் இவைகளை நீக்கும். மனோஉற்சாகத்தை உண்டாக்கும்.

## வெண்சாமரை விசிறியின் குணம்.

வியர்வை, ஆயாசம், மயக்கம், மூர்ச்சையால் வராநின்ற ஞாபகமறதி, நாவறட்ச்சி, உஷ்ணம் இவைகள் போகும். லக்ஷிமி விலாசமும், புணர்ச்சியில் இச்சையுமுண்டாகும்.

## பனையோலை விசிறியின் குணம்.

வாததோஷம், சிலேஷ்மரோகம், பித்தாதிக்கம், அரோசகம், ஆகிய இவைகள் நீங்கும்.

## தென்னோலை விசிறியின் குணம்.

கபம், ரத்தமூலம், நமைச்சல், சிரங்கு, விரணம், நீங்காத கரப்பான் இவைகள் நீங்கும்.

மற்ற விசிறி வகை 2-ம்பாக புஸ்தகத்தில் காண்க.

# படுக்கை வகை.

## புஷ்பமெத்தையின் குணம்.

முல்லை, மல்லிகைமுதலிய புஷ்பமெத்தையில் துயில்பவர்களுக்கு பசி, போகத்திலிஷ்டம், சுக்கிலவிருத்தி, சரீரம் செழித்தல், இவைகள் உண்டாகும். மருந்தினுலுண்டாகிய உஷ்ணம் தீரும்

## இலவம்பஞ்சு,பருத்திப்பஞ்சு இவைகளின் குணம்.

இலவம்பஞ்சு மெத்தையில் படுக்கையால் உட்சூடு நீங்கும், பருத்திபஞ்சுமெத்தையால் ரத்தம்,விந்து,காமம், ஜுரம், இவைகளை விருத்திசெய்யும். பரிகாரம் பனை ஓலை விசிறியால் வீசிக்கொள்ளவும்.

## தாழம்பாயின் குணம்.

வமனம், தலைசுழற்றல், பாண்டுரோகம், பித்ததோஷம்,நீராமைக்கட்டி, வெகுமூத்திரம் இவைகளைவிலக்கும்.

## கோரைப்பாயின் குணம்.

அக்கினிமந்தமும், ஜுரவேகமும், நீங்கும். தேகக்குளிர்ச்சியும், சுகநித்திரையும் உண்டாகும்.

## தலையணையின் குணம்.

கழுத்துக்கும், தோழுக்கும், மத்தியிலிருக்கும் அளவான உயரமுள்ளதாக இலவம்பஞ்சினுல் தைப்பித்த, தலையணையின்மேல் சிரசுவைத்துப் படுத்துக்கொண்டால் பாதாதிகேசம் வரைக்கும் உள்ள எந்த பக்கத்து நரம்புகளும் பிசகாமல் சமமாகயிருக்கும் அதோடு சிரசைப்பற்றிய ஆவர்த்தநோய்களும் நீங்கிவிடும்.

மற்ற படுக்கை வகை 2-ம்பாக புஸ்தகத்தில் காண்க.

# நித்திரை வகை.

## நித்திரை செய்வதின் குணம்

முறைமைப்படி இடதுபக்கமாகப் படுத்துக் காலை நீட்டிக்கொண்டு நித்திரை செய்தால், பஞ்சேந்திரியங்களின் அயர்வும், சரீரவருத்தமும் நீங்கும். இளைத்த மனதிற்கு உற்சாகமும், ஆயிசுவிருத்தியுமுண்டாகும்.

## முக்காட்டு நித்திரையின் குணம்.

தேகாதி பாதம் வரைக்கும், வஸ்திரத்தினால் மூடிக் கொண்டு நித்திரை செய்யில் இரண்டு நேத்திரத்திற்கும், இரண்டு புஜங்களுக்கும், வன்மையுண்டாகும். அன்றியும் குளிர்வாடை வெய்யிலின் வேகம், தூசி, பனிகாற்று இவைகளால் விளைகின்ற குற்றங்களும் விலகும்.

## தொக்கணத்தின் குணம்.

தொக்கணத்தினால், இரத்தசரும மாமிசதாதுக்களுக்கு மிகவும் போஷணமாவது தவிர தேக புஷ்டியும், நித்திரையும், புணர்ச்சியில் இச்சையும் அதிகரிக்கும். வாதாதிக்கமும் உழைப்பினால்வந்த வருத்தமும் நீங்கும். தொக்கணம் என்பது கையினால் குத்தி ஹிதவாக சிரசைத் தாங்குவதாம்.

## பகல் நித்திரையின் குணம்.

பகல் நித்திரையானது 18-வித வாத ரோகங்களை தருவதற்கு ஒரு வித்தாகும். பரிகாரம் இஞ்சி, பொதினா, தேன்.

## பத்தியத்தோர் பகல் நித்திரையின் குணம்.

ஔஷதம் சாப்பிட்டு பத்தியமிருப்பவர்கள் பகல் நித்திரை செய்தால், விழிநோய் உண்டாகும், ரத்தபித்த ரோகம் அதிகரிக்கும். விந்துவும் நீர்போலாகிவிடும். பரிகாரம் நாட்டுசெருக்கரை.

## இரவில் நித்திரை பங்கத்தின் குணம்.

இரவில் நித்திரை செய்யாவிடில் புத்திக்கு தெளிவின்மை, ஐம்புல சோர்வு, பயம், அக்கினிமந்தம் முதலிய நோய்கள் சேரும் அன்றியும் வேடருடைய நாய்கள்கவ்வுதல் போல பலவியாதிகளும் கவ்விக்கொள்ளும். பரிகாரம் நெய், சுக்கு.

## ஜீரணகால அளவை கூறல்.

குளிர்ந்தநீர் ஒரு ஜாமம், வென்னீர் 2 ஜாமம், காய்ச்சி ஆறிய ஜலம் மூணேமுக்கால்நாழிகை, கஷாயம் 3நாழிகை, அன்னம் 2 ஜாமம், பால் 20 நாழிகை, தேன் 12 நாழிகை, தயிர் அன்னம் 11 நாழிகை, மோர் அன்னம் 13 நாழிகை, நீர் அன்னம் 18 நாழிகை, வெண்ணை அன்னம் 2 ஜாமம், சாறுயம் ஒரு ஜாமம் அல்லது 5 நாழிகை, நல்ல பதார்த்தங்களெல்லாம் 7 நாழிகை, உயர்ந்த பழவர்க்கங்களெல்லாம் $7\frac{1}{2}$ நாழிகை, கிழங்குகளெல்லாம் $7\frac{1}{2}$ நாழிகை, வித்துகளும், கனிரசங்களும் $7\frac{1}{2}$ நாழிகை, அறுசுவை பதார்த்தங்கள் பச்சையாக அல்லது பாகம்செய்தது 5 நாழிகை,

கழுநீர், காடி, 5 நாழிகை, வடிகஞ்சி முதலிய கஞ்சிகள் 7 நாழிகை, நல்ல வெல்லம், பச்சரிசி 20 நாழிகை, கக்கரிக்காய் முதலிய காய் வர்க்கங்கள் 8 நாழிகை, இளநீர் சர்க்கரைப்பாணக்கம் 7 நாழிகை, தயிர் அன்னம் அல்லது மோர் அன்னம் புசித்து அதன்மேல் தண்ணீர் குடிக்கில் 4 நாழிகை, காய்ந்தநீர் 6 நாழிகை, முக்கால்கூறு சுண்டிய நீர் $7\frac{1}{2}$ நாழிகை, அருந்தும் பதமாயாற்றிய நீர் 9நாழிகை, விருக்ஷம், செடி, கொடி, புல், இவற்ருலுண்டாகின்ற பேசரம், புஷ்பம், தளிர், இவைகள் $7\frac{1}{2}$ நாழிகையிலும் ஜீரணமாகும் இவ்வண்ணமாகவே சகல திரவியங்களுக்கும் ஜீரணகால அளவையை ஆயுள்வேதம் கூறுகின்றதென அகஸ்தியமுனிவர் கூறியவாறும்.

முற்றிற்று.

உ
கடவுள் துணை.

# வகை அகராதி.


| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| முகவுரை | 3 |
| நோயணுகாவிதி | 5 |
| அப்பியங்கஸ்நானவிதி | 11 |
| எண்ணெய் வகை | 13 |
| ஜல வகை | 16 |
| வெந்நீர் வகை | 23 |
| இளநீர் வகை | 24 |
| பால் வகை | 25 |
| தயிர் வகை | 31 |
| மோர் வகை | 32 |
| வெண்ணெய் வகை | 33 |
| நெய் வகை | 33 |
| அரிசிகளின் வகை | 35 |
| புசிப்பு வகை | 39 |
| உண்கல வகை | 41 |
| சித்திரான்ன வகை | 43 |
| அன்னத்தின் வகை | 45 |
| ரொட்டி வகை | 53 |
| கஞ்சி வகை | 55 |
| பலகார வகை | 59 |
| பாகம்செய்த பதார்த்த வகை, குளம்பு, ரசம், ச்சாறு வகை | 62 |
| தானிய வகை | 65 |
| கிழங்கு வகை | 68 |
| காய், பிஞ்சு வகை | 74 |
| பழ வகை | 89 |
| கீரை வகை | 96 |
| இலை வகை | 99 |
| வித்து, கொட்டை, பருப்பு வகை | 102 |
| மதுர வகை | 106 |
| மதுவின் வகை | 110 |
| இறைச்சி வகை | 113 |
| பறவை இறைச்சி அல்லது கறி வகை | 114 |
| கடல்மீன் கறி வகை | 116 |
| கடைசரக்கின் வகை | 117 |
| வஸ்திர வகை | 124 |
| பரிமள வகை | 127 |
| புஷ்பத்தின் வகை | 128 |
| தாம்பூலபொதுகுணம் | 131 |
| விசிறி வகை | 132 |
| படுக்கை வகை | 133 |
| நித்திரை வகை | 134 |
| ஜீரணகாலஅளவை கூறல் | 135 |

உ

கடவுள் துணை.

# பெயர் அகராதி.


| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| அ | |
| அறுசுவைகளின் மிகுதி குணம் | 6 |
| அப்பியங்கஸ்நானவிதி | 11 |
| அப்பியங்கனத்தின் கு. | 11 |
| அரைப்பு வகை | 13 |
| அதிகுளிர்ச்சி, சரகூரல் உள்ள குளத்து ஜலம் | 19 |
| அருவி ஜலம் | 21 |
| அடவி ஜலம் | 21 |
| அரிசிகளின் வகை | 35 |
| அன்னமிளகிச் சம்பா அரிசி | 36 |
| அன்னத்தின் வகை | 45 |
| அன்னத்தின்குற்றம் | 45 |
| அற்பசுடுகை அன்னம் | 47 |
| அதிகசூடுள்ள அன்னம் | 47 |
| அதிகபலம் கொடுக்கும் வஸ்துக்கள் | 50 |
| அரிசிமாவின் ரொட்டி | 54 |
| அதிரசத்தின் குணம் | 60 |
| அப்பளத்தின் குணம் | 61 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| அ | |
| அமுக்கிருக்கிழங்கு | 71 |
| அத்திக்காய் | 76 |
| அத்திப்பிஞ்சு | 76 |
| அவரைக்காய் | 78 |
| அவரைப்பிஞ்சு | 79 |
| அருநெல்லிக்காய் | 81 |
| அதளக்காய் | 88 |
| அன்னுசிப்பழம் | 90 |
| அறைக்கீரை | 97 |
| அகத்திக்கீரை | 97 |
| அத்திமர கள்ளு | 111 |
| அரத்தையின் பொது குணம் | 120 |
| அழுக்கு வஸ்திரம் | 126 |
| அல்லிப்பூ | 130 |
| அககதிப்பூ | 130 |
| ஆ | |
| ஆமணக்கு எண்ணெய் | 13 |
| ஆற்றுநீரின் குணம் | 18 |
| ஆகா பசுவின் பால் | 27 |

பெயர்கள் பக்கம்

ஆ

ஆடையெடுத்த பால் 29
ஆடையெடுத்த தயிர் 31
ஆத்மரட்சாமிர்தம் என்னும் வயித்தியசார சங்கிரகம் 42
ஆகாயக்கக்கரிக்காய் 79
ஆற்றுத்தும்மட்டிகாய் 87
ஆடாதோடையிலை 100
ஆற்றுமீன், கிணற்றுமீன்கறியின் குணம் 116
ஆபரணத்தின்குணம் 126

இ

இளநீர் வகை 24
இளநீரின் பொது கு 24
இரவில் சுரந்து பகலில் கறக்கின்ற பசுவின்பால் குணம் 27
இந்துபாக சாஸ்திரம் 50
இராக்கால கறி வகை 62
இஞ்சியின் குணம் 71
இத்திக்காய், பிஞ்சு இவை குணம் 83
இரசமணி 95
இலை வகை 99
இறைச்சி வகை 113
இலவம்பஞ்சு, பருத்திப்பஞ்சு, இவைகுணம் 133

பெயர்கள் பக்கம்

இரவில் நித்திரை பங்கத்தி குணம் 135

ஈ

ஈச்சங்கள்ளின்குணம் 111

உ

உப்புநீரின் குணம் 20
உண்டபின் அருந்தும் இளநீரின் குணம். 25
உண்டபின் வெந்நீர் அருந்துதலின் குணம் 40
உண்டபின் குருநடைக் கொள்ளுதலின் குணம் 40
உண்கல வகை 41
உண்கலத்தில் எவை முக்கியம் 42
உழுந்தோதனத்தின் குணம் 44
உழுந்துமாவின்ரொட்டியின் குணம் 54
உழுந்துவடை 59
உழுந்தின் குணம் 65
உருளைக்கிழங்கு 68
உண்டைவெல்லம் 107

ஊ

ஊற்றுஜலம் 20
ஊணுக்கு முன்பின் நடு, இக்காலங்களில் அருந்தும்வெந்நீரின் குணம் 23

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| **ஊ** | |
| ஊசிய அன்னம் | 51 |
| ஊறுகாய் | 64 |
| ஊசிமுளை காய் | 83 |
| ஊமத்தங்காய் | 83 |
| ஊமத்தம்விதை | 103 |
| **எ** | |
| எண்ணெய் வகை | 13 |
| எள்ளெண்ணெய் | 13 |
| எருமைப்பால் | 28 |
| எருமைதயிர் | 31 |
| எருமைமோர் | 32 |
| எருமைவெண்ணெய் | 33 |
| எருமை நெய் | 34 |
| எள்ளோதனம் | 44 |
| எவர்அரிசிக் கஞ்சி | 56 |
| எள்ளின் குணம் | 67 |
| எலுமிச்சங்காய் | 81 |
| எலுமிச்சம்பழம் | 93 |
| எருக்கலை | 100 |
| **ஏ** | |
| ஏரிஜலம், கற்சுனைஜலம் இவைகளின் குணம் | 19 |
| ஏழுவகை வாழைப் பழத்தின் குணம் | 89 |
| ஐங்கூட்டு தைலம் | 15 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| **ஒ** | |
| ஒஸ்தி தாதுவிர்த்தி சஞ்சிவி மாத்திரை | 19 |
| ஒஸ்தி தாதுவிருத்தி சஞ்சிவி திராவகம் | 131 |
| **ஓ** | |
| ஓடைஜலம் | 19 |
| ஓமம் | 119 |
| **க** | |
| கடுகு எண்ணெய் | 14 |
| கரும்பாறை ஜலம் | 21 |
| கருத்தஜலம் | 21 |
| கருமை, செம்மை நிற மாதர்களின் பால் | 25 |
| கலப்பு நெய் | 34 |
| கல்லுண்டை சம்பா அரிசியின் குணம் | 35 |
| களாஞ்சம்பா அரிசி | 35 |
| கம்பு அரிசி | 38 |
| கருஞ்சோள அரிசி | 38 |
| கடுகோதனம் | 43 |
| கட்டமுதின் குணம் | 49 |
| கம்பு சாதம் | 52 |
| கடலைமாவின் ரொட்டி | 54 |
| கஞ்சி வகை | 55 |
| கஞ்சி அன்னம் | 55 |
| கடலையின் குணம் | 65 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| **க** | |
| கருடன் கிழங்கு | 70 |
| கஸ்தூரி மஞ்சள் | 72 |
| கலியாணப்பூசினிக்காய் | 75 |
| கத்திரிக்காய் | 75 |
| கத்திரிப்பிஞ்சி | 76 |
| கண்டங்கத்திரிக்காய் | 76 |
| கக்கரிக்காய் | 79 |
| கஞமிச்சங்காய் | 82 |
| கடார நாரத்தங்காய் | 82 |
| கறிமுள்ளிக்காய் | 84 |
| களாக்காய் | 86 |
| கருணைக்கிழங்குதண்டு | 96 |
| கருவேப்பிலை | 99 |
| கருவேல் கொழுந்து | 101 |
| கழற்காய், பேய்ப்பீற்குஇவை குணம் | 103 |
| கரும்பின்பொது கு. | 106 |
| கற்கண்டின் குணம் | 108 |
| கணிதமுருகேசர ஜோஸ்ய புக் | 110 |
| கஞ்சாவின் குணம் | 112 |
| கருங்கோழிக்கறி | 114 |
| கடல்மீன் கறிவகை | 116 |
| கடைசரக்கின் வகை | 117 |
| கரிஉப்பின் குணம் | 117 |
| கசாகசாவின் குணம் | 118 |
| கடுக்காயின்பொது கு. | 123 |
| கடுக்காய் பிஞ்சி | 123 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| **க** | |
| கருப்பூரத்தின்குணம் | 123 |
| கருப்பு வஸ்திரம் | 126 |
| கம்பழத்தின் குணம் | 126 |
| **கா** | |
| காலை விழிப்பின்குணம் | 6 |
| காலை மாலை வெயிலால் உண்டாகும் குணம் | 8 |
| காலைக்குளியலின் கு. | 10 |
| காய்ச்சிஆற்றியவெந்நீர் | 23 |
| காராம் பசுவின் பால் | 26 |
| காய்ச்சும் பாலுக்கு நீரளவை கூறல் | 29 |
| கால்கூறு, அரைகூறு முக்கால்கூறு காய்ந்த வெந்நீரின் குணம் | 23 |
| காலையில் பச்சைப்பால் உண்பதின் குணம் | 30 |
| காராம்பசுவின் நெய் | 34 |
| காடைச்சம்பா அரிசி | 36 |
| கார் அரிசி | 36 |
| கார் பச்சைஅரிசி அன்னத்தின் குணம் | 47 |
| காடைக்கண்ணி சாதம் | 53 |
| காடி நீரின் குணம் | 58 |
| காலைக்கறி வகை | 62 |
| காடைச்சாற்றின் கு. | 63 |
| காருக்கருணைக்கிழங்கு | 68 |
| காய், பிஞ்சு வகை | 74 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| கா | |
| காட்டுபாகல் காய் | 85 |
| காப்பிக்கொட்டை | 104 |
| கானங்கோழிக்கறி | 114 |
| காக்கா முட்டை | 115 |
| காட்டு சீரகம் | 118 |
| கி | |
| கிணற்று ஜலம் | 19 |
| கிச்சிடி அன்னம் | 51 |
| கிழங்கு வகை | 68 |
| கிழங்குகளின் பொது குணம் | 68 |
| கிஷ்முஷ்ப்பழம் | 94 |
| கீ | |
| கீரை வகை | 96 |
| கு | |
| குளத்து ஜலம் | 18 |
| குன்றிமணிச்சம்பா அரிசியின் குணம் | 36 |
| குழம்பின் பேதகுணம் | 62 |
| கும்மட்டிக்காய் | 87 |
| கூ | |
| கூந்தல்வளரும் குளிர்ச்சிதைலம் | 38 |
| கூகைக்கிழங்கு | 70 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| கெ | |
| கெர்ப்ப எண்ணெய் | 39 |
| கெளிற்றுமீன் கறி | 116 |
| கே | |
| கேழ்வரகின் குணம் | 37 |
| கேழ்வரகின் களி, கூழ் இவை குணம் | 51 |
| கொ | |
| கொள்ளுக் கஞ்சி | 57 |
| கொள்ளும், அரிசியும் சேர்த்துக் காய்ச்சிய கஞ்சியின் குணம் | 58 |
| கொழுகட்டை | 60 |
| கொள்ளுச்சாறு | 63 |
| கொள்ளின் குணம் | 67 |
| கொத்தவரைக்காய் | 78 |
| கொட்டை அவரைக் காயின் குணம் | 78 |
| கொடி எலுமிச்சங்காய் | 82 |
| கொளுஞ்சிநாரத்தங் காயின் குணம் | 82 |
| கொம்புபாகல்காய் | 85 |
| கொடிவழுதுணைக்காய் | 87 |
| கொய்யாப்பழம் | 92 |
| கொமட்டி மாதுளம் ப. | 92 |
| கொட்டைமுந்திரிப் ப | 94 |
| கொத்தமல்லிக்கீரை | 98 |
| கொம்புதேன் | 109 |
| கொடியாட்டுஇறைச்சி | 113 |
| கொத்தமல்லி | 119 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| கோ | |
| கோதாவரிநதி நீர் | 18 |
| கோரைச்சம்பா அரிசி | 35 |
| கோடைச்சம்பா அரிசி | 36 |
| கோதுமை அரிசி | 37 |
| கோதுமைமாவு ரொட்டியின் குணம் | 53 |
| கோதுமைத் தவிட்டின் ரொட்டி குணம் | 53 |
| கோதுமை நொய் ரொட்டியின் குணம் | 54 |
| கோதுமைக் கஞ்சி | 58 |
| கோதுமை அடை | 60 |
| கோடைப் பூசினிக்காய் | 75 |
| கோவைக்காய் | 86 |
| கோழிக்கறி | 114 |
| கோழி முட்டை | 115 |
| கோஷ்டத்தின்குணம் | 121 |
| கோரைப்பாய் | 133 |
| ச | |
| க்ஷவரத்தின் குணம் | 15 |
| சமுத்திர ஜலம் | 16 |
| சவ்வரிசி | 37 |
| சருக்கரைப்பொங்கல் | 43 |
| சம்பாரதோசை | 44 |
| சம்பா பச்சை அரிசி | 46 |
| சருக்கரைவள்ளிக் கிழங்கின் குணம் | 70 |
| சவரிப்பழம் | 90 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| ச | |
| சறக்கொன்றைப்புளி | 95 |
| சரஜோதிமாலை ஜோஸ்யபுஸ்தகம் | 95 |
| சருக்கரை | 107 |
| சதகுப்பை | 119 |
| சகலாத்தின் குணம் | 124 |
| சண்பகப்பூ | 128 |
| சா | |
| சாமை அரிசி | 38 |
| சாமை அன்னம், கஞ்சி இவை குணம் | 52 |
| ஷாகுல்மிசிரி | 73 |
| சாதிநாரத்தை,கொளிஞ்சிநாரத்தை இவை கு. | 93 |
| சாரப்பருப்பு | 105 |
| சாம்பிராணி | 123 |
| சாலுவை | 124 |
| சி | |
| சிலம்பம், மல்யுத்தம், குதிரையேற்றம், பாதநடை இவை குணம் | 8 |
| சிற்றாமணக்கெண்ணெய் | 13 |
| சிவந்த ஜலம் | 21 |
| சித்திரான்ன வகை | 43 |
| சிவேந்திரபாக சாஸ்தி. | 56 |
| சிறுபயறு | 66 |
| சிறுவள்ளிக்கிழங்கு | 69 |
| சிகைக்காய் | 88 |
| சிற்றீச்சம்பழம் | 94 |

| பெயர்கள் சி | பக்கம் |
|---|---|
| சிறியகொடிமுந்திரிப் பழத்தின் குணம் | 94 |
| சிற்றுழா, பேருழா | 99 |
| சிறுகடுகின் குணம் | 118 |
| சிற்றரத்தை | 121 |
| சிவப்பு வஸ்திரம் | 125 |
| சீ | |
| சீப்பால் குணம் | 29 |
| சீரகச்சம்பா அரிசி | 35 |
| சீத்தாபழம் | 92 |
| சீனிசருக்கரை | 108 |
| சீரகம் | 118 |
| சு | |
| சுத்தஸ்நானம் | 10 |
| சுத்தஜலம் | 16 |
| சுனை ஜலம் | 20 |
| சுக்கான்பாறை ஜலம் | 20 |
| சுத்த இட்டலி, சம்பார இட்டலி இவைகுணம் | 44 |
| சுத்த அன்னம் | 45 |
| சுரைக்காய் | 80 |
| சுண்டைக்காய் | 86 |
| சுக்கான்காய் | 86 |
| சுவற்றுமுள்ளங்கியிலை | 100 |
| சுறுமீன் கறி | 116 |
| சுக்கின் குணம் | 117 |
| செ | |
| செவ்விளநீர் | 24 |
| செம்மறிஆட்டுப்பால் | 28 |
| செம்மறிஆட்டுத்தயிர் | 32 |
| செஞ்சோள அரிசி | 38 |

| பெயர்கள் செ | பக்கம் |
|---|---|
| செம்புக்கலத்தின் கு. | 42 |
| செம்முள்ளங்கிகிழங்கு | 69 |
| செங்கீரை | 96 |
| செவ்வகத்திக்கீரை | 97 |
| செங்கரும்பு, ரசதாளிக் கரும்பு, புல்லகண்டங் கரும்பு இவைகுணம் | 106 |
| செம்மறியாட்டு இறைச் சியின் குணம் | 113 |
| செந்தாளம்பூ | 128 |
| செவந்திப்பூ | 129 |
| செவ்வகத்திப்பூ | 130 |
| சே | |
| சேர்க்கை அவல் | 61 |
| சேமக்கிழங்கு | 68 |
| சை | |
| சைவபாக சாஸ்திரம் | 57 |
| சைவபதார்த்த முறை | 63 |
| சோளசாதங்களின் கு. | 52 |
| த | |
| தயிர் வகை | 31 |
| தங்கக்கலத்தின்குணம் | 41 |
| ததியோதனம் | 44 |
| தயிருழுந்தின் வடை | 59 |
| தற்கால பலாபல பதார்த்தங்கள் | 64 |
| தந்திப்பிரமேக நிவாரணி | 74 |
| தசைஅத்திப்பழம் | 89 |
| தமரத்தம்பழம் | 91 |
| தலையணையின் குணம் | 133 |

| பெயர்கள் தா | பக்கம் |
|---|---|
| தாமரைகுளத்துஜலம் | 19 |
| தாமரையிலை | 42 |
| தாதுபுஷ்டி சூர்ணம் | 54 |
| தானிய வகை | 65 |
| தாமரை வித்து | 104 |
| தாளிசபத்திரி | 122 |
| தாமரைப்பூ | 129 |
| தாம்புலப்பொது கு. | 131 |
| தாம்பூலத்தில் காய்ச்சு கட்டி, சுக்கு, லவங்கம் இவை சேருதலின் கு. | 131 |
| தாழம்பாயின் குணம் | 133 |
| தி | |
| தினை அரிசி | 38 |
| தினைமாவு, சாதம்,கஞ்சி | 52 |
| திராக்ஷிப்பழச்சாறுயம் | 111 |
| திப்பிலியின் குணம் | 119 |
| திப்பிலிமூலத்தின் கு. | 120 |
| திரிகடுகின் குணம் | 120 |
| து | |
| துவையலின்பேத கு. | 64 |
| துவரையின் குணம் | 65 |
| துத்தியிலை | 101 |
| தூதுளங்காயின் கு. | 87 |
| தெ | |
| தென்னமரக்குருத்து | 84 |
| தென்னங்கள்ளு | 110 |
| தென்னோலை விசிறி | 132 |
| தே | |
| தேங்காய் எண்ணெய் | 14 |
| தேங்காய் பால் | 30 |

| பெயர்கள் தே | பக்கம் |
|---|---|
| தேன்குழலின் குணம் | 59 |
| தேங்காயின் குணம் | 84 |
| தேயிலை (டீ) | 99 |
| தேள்கடி மருந்து | 105 |
| தேங்கின்வெல்லம்,பனை வெல்லம்இவைகுணம் | 107 |
| தேனிலுண்டாகும் கற்கண்டின் குணம் | 108 |
| தேன்களின்பொதுகு | 108 |
| தை | |
| தைலாதிகளின் குணம் | 12 |
| தைலம்தேய்க்கும் விதி | 12 |
| தைலஸ்நான காலவிதி | 15 |
| தொக்கணத்தின் கு. | 134 |
| தோஷ நிவாரணம் | 21 |
| ந | |
| நளவீமபாகசாஸ்திரம் | 17 |
| நண்டுக்குழி நீரின் கு | 22 |
| நன்றாக சமையாத அன்னத்தின் குணம் | 47 |
| நல்லெண்ணெய் அன்னத்தின் குணம் | 49 |
| நரிவெங்காயம் | 73 |
| நறுமணத்தக்காளி | 86 |
| நல்லவெல்லத்தின் கு. | 107 |
| நா | |
| நாரத்தங்காய் | 82 |
| நாரத்தங்கச்சலின் கு. | 82 |
| நாவற்பழம் | 90 |
| நாரத்தம்பழம் | 93 |
| நாணார்கரும்பு | 106 |
| நாருமடியின் குணம் | 125 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| **நி** | |
| நிழலால் உண்டாகும்கு. | 9 |
| நித்திய அப்பியங்கனம் | 11 |
| நிலப்பூசினிக்கிழங்கு | 70 |
| நிலப்பனங்கிழங்கு | 71 |
| நித்திரை வகை | 134 |
| நித்திரைசெய்வதின்கு | 134 |
| **நீ** | |
| நீர்அருந்தும் கிரமம் | 40 |
| நீராகாரத்தின் குணம் | 58 |
| நீர்ஆரைக்கீரை | 97 |
| நீர்முள்ளிவித்து | 103 |
| **நூ** | |
| நூதனபரிமளபர்பொடி | 88 |
| **நெ** | |
| நெய் வகை | 33 |
| நெய்அன்னத்தின் கு. | 48 |
| நெய்அன்னத்துடன் துவரம்பருப்பு சேர்ப்பதின் குணம் | 48 |
| நெற்பொரிக்கஞ்சி | 57 |
| நெற்பொரியின் குணம் | 61 |
| நெல்லிக்காயின் கு. | 78 |
| நோயணுகா விதி | 5 |
| **ப** | |
| பல்விளக்கின் குணம் | 9 |
| பல்விளக்கத்தக்க கொம்புகள் | 10 |
| பல்விளக்கத்தகாத வஸ்துக்கள் | 10 |
| பஞ்சகற்பத்தின் கு. | 11 |
| பசுவின்நெய் முழுக்கு | 12 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| **ப** | |
| பனிகட்டி நீரின் கு. | 17 |
| பனிநீரின் குணம் | 18 |
| பச்சை இளநீரின் கு. | 24 |
| பரத்தையர் பால் | 25 |
| பசுவின்பால்பொது கு. | 26 |
| பகலில்சுரந்து இரவில் கறக்கின்றபசுவின்பால் | 27 |
| பசும்பாலின்பத்தியம் | 30 |
| பசுவின் தயிர் | 31 |
| பசுவின்புளித்ததயிர் | 31 |
| பசுமோர் குணம் | 32 |
| பசுவெண்ணெய் | 33 |
| பசுவின் நெய் குணம் | 33 |
| பச்சை அரிசி | 36 |
| பழய அரிசி | 37 |
| பருப்பு பொங்கலின்கு. | 43 |
| பசும்பால் அன்னம் | 48 |
| பழயஅன்னத்தின் கு. | 51 |
| பழய ரொட்டியின் கு. | 53 |
| பச்சரிசி,சிறுபயறு,உழுந்து சேர்த்துகாய்ச்சிய கஞ்சியின் குணம் | 55 |
| பஞ்சமுஷ்டிக்கஞ்சி | 57 |
| பச்சடியின்பேத கு | 64 |
| பட்டாணி கடலை | 66 |
| பச்சைப்பயறின் கு. | 66 |
| பயறுகளின் குணம் | 67 |
| பனங்கிழங்கின் கு. | 71 |
| பலாக்காயின் குணம் | 74 |
| பலாப்பிஞ்சின்குணம் | 75 |
| பன்றிப்புடலங்காய் | 80 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| ப | |
| பச்சைக்கடுக்காய் | 81 |
| பச்சைமுளகாய் | 83 |
| பனைநுங்கின் குணம் | 84 |
| பனைமரத்தின் குருத்து | 85 |
| பயற்றங்காய் | 86 |
| பழவகை | 89 |
| பலாப்பழம் | 91 |
| பழம்புளியின் குணம் | 95 |
| பலாக்கொட்டை | 104 |
| பனங்கற்கண்டு | 108 |
| பழயதேன் | 109 |
| பனங்கள்ளின் குணம் | 110 |
| பற்பல தானியங்களினை ல்செய்யும் சாருயம் | 112 |
| பறவைஇறைச்சி அல்லது கறிவகை | 114 |
| பச்சைகருப்பூரத்தின் பொது குணம் | 124 |
| பட்டுவஸ்திரம் | 124 |
| பச்சை வஸ்திரம் | 125 |
| 18-சித்தர்நாடி சாஸ்திர புஸ்தகம் | 126 |
| பரிமள வகை | 127 |
| பரிமள சந்தணம் பூசுதலின் குணம் | 127 |
| பன்னீரின் குணம் | 127 |
| பச்சைகுங்குமப்பூ | 128 |
| பன்னீர்பூ | 128 |
| பனையோலை விசிறி | 132 |
| படுக்கை வகை | 133 |
| பகல் நித்திரையின்கு. | 134 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| ப | |
| பத்தியத்தோர் பகல் நித்திரையின் குணம் | 135 |
| பா | |
| பாதாதிகளில் தைலமிடலின் குணம் | 12 |
| பாறைஜலத்தின் கு. | 20 |
| பாசிநீர்முதலிய பல நீரின்குணம் | 22 |
| பால் வகை | 25 |
| பாத்திரபேதத்திலுண்டாகிய பால் குணம் | 29 |
| பாலேட்டின் குணம் | 29 |
| பால்அருந்துதற்கு நாழிகையளவை கூரல் | 30 |
| பாற்பொங்கலின் கு. | 43 |
| பால்கஞ்சியின் குணம் | 55 |
| பாயசத்தின் குணம் | 61 |
| பாகம்செய்த பதார்த்த வகை, குழம்பு, ரசம், ச்சாறு வகை | 62 |
| பாவட்டங்காய் | 87 |
| பாலைப்பழம் | 90 |
| பாதிரிப்பூ | 128 |
| பி | |
| பிட்டின் குணம் | 60 |
| பிரபஞ்சஉற்பத்தி | 112 |
| பீர்க்கங்காயின் கு. | 80 |
| பு | |
| புதிய,பழய இளநீரின்கு | 24 |
| புழுங்கலரிசி | 37 |
| புசிப்பு வகை | 39 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| பு | |
| புசித்தபுசிப்பின் பிரிவு | 41 |
| புசித்த அன்னசார செய்கை கூறல் | 41 |
| புளியோதனத்தின் கு. | 43 |
| புழுங்கலரிசி அன்னம் | 47 |
| புலாவு அன்னம் | 50 |
| புளித்த அன்னம் | 51 |
| புனர்பானத்தின் கு. | 56 |
| புதுபொற்புதையல்புக் | 58 |
| புடலங்காய் | 80 |
| புளியங்காய் | 81 |
| புளியம்பிஞ்சி | 81 |
| புதியஞுமூலிக்குணம் | 98 |
| புளியிலை | 100 |
| புகையிலை | 101 |
| புளியங்கொட்டை | 105 |
| புதியதேன் | 109 |
| புரூக்கறி | 115 |
| புஷ்பத்தின் வகை | 128 |
| புஷ்பமெத்தையின் கு. | 133 |
| பூ | |
| பூநொய்க்கஞ்சி | 57 |
| பூமிச்சருக்கரைகிழங்கு | 68 |
| பூசினிக்காய் | 75 |
| பூசினிவித்தின் குணம் | 103 |
| பூனைக்காலிவித்து | 103 |
| பெ | |
| பெரும்பயறின் கு | 66 |
| பெருவள்ளிக்கிழங்கு | 69 |
| பெருங்கொடி முந்திரிப்பழம் | 94 |
| பெருங்காயத்தின் கு. | 120 |
| பெரியஏலத்தின் கு. | 121 |
| பே | |
| பேதிக்கிழங்கு | 70 |
| பேரீச்சு, சிற்றீச்சு குருத்துகளின் குணம் | 85 |
| பேயன் வாழைப்பழம் | 89 |
| பேரிச்சம்பழம் | 93 |
| பேரிச்சம்பழத்திலிறக்கும் சாறுயத்தின் கு. | 111 |
| பேரிச்சங்காய் | 124 |
| பொ | |
| பொங்கல் அன்னம் | 43 |
| பொரியுண்டை | 60 |
| பொரியலின் பேத கு | 64 |
| போ | |
| போஜனகாலவிதி | 39 |
| போஜனம் செய்விதி | 39 |
| போஜன அளவைகூறல் | 40 |
| போஜனமுடிவில் தயிர், உப்பு சேர்வதின் கு. | 49 |
| போஜிதான் மிசிரி | 73 |
| போகம் விளைக்கும் கி. | 98 |
| ம | |
| மலஜலம் விடுத்தலின் கு. | 9 |
| மஞ்சள் குளியலின் கு. | 11 |
| மழைநீரின் குணம் | 17 |
| மல்லிகைச்சம்பா அரிசி | 35 |
| மணிச்சம்பா அரிசி | 35 |
| மத்தியானக்காலக்கறி | 62 |
| மஞ்சளின் குணம் | 72 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| ம | |
| மரமஞ்சளின் குணம் | 72 |
| மரியங்காயின் குணம் | 77 |
| மணிமந்திரவைத்தியம் | 90 |
| மதுரவகை | 106 |
| மலைத்தேன் | 109 |
| மலையாள மாந்திரீக ரத்னகரம் புக் | 109 |
| மதுவின் வகை | 110 |
| மதுவின்சுபாவகுணம் | 110 |
| மயில் முட்டை | 115 |
| மடவை மீன் கறி | 116 |
| மஞ்சள் வஸ்திரம் | 125 |
| மலர்மாலைஅணிதல் | 127 |
| மந்தாரப் பூ | 128 |
| மல்லிகைப் பூ | 129 |
| மயில் விசிறி | 132 |
| மா. | |
| மாதர்பால் பொது கு. | 25 |
| மாமிசம் கலந்து சமைத்த அன்னத்தின்குணம் | 50 |
| மாங்காயின் குணம் | 77 |
| மாம்பிஞ்சின் குணம் | 77 |
| மாம்பழம் | 91 |
| மாதுளம்பழம் | 92 |
| மாதுளம் பிஞ்சி | 93 |
| மாதுளை வித்து | 102 |
| மாங்கொட்டை | 104 |
| மாதுளம் பூ | 131 |
| மி. | |
| மிதாமித வார்த்தையின் குணம் | 8 |
| மி | |
| மிளகுச்சம்பா அரிசி | 35 |
| மிலிடேரி பாகசாஸ்திரபுஸ்தகம் | 60 |
| மிளகாயின் குணம் | 83 |
| மிதிபாகல் காய் | 85 |
| மிளகின் குணம் | 117 |
| மு | |
| முகவுரை | 3 |
| முக்கூட்டு எண்ணெய் | 14 |
| முக்கூட்டு எண்ணெய் சேர்க்கும் விதி | 14 |
| முடிச்சுகஞ்சி | 56 |
| முருக்கின் குணம் | 59 |
| முள்ளங்கிக்கிழங்கு | 69 |
| முருங்கைக்காய் | 76 |
| முருங்கைப்பிஞ்சி | 77 |
| முளகாய்ப்பழம் | 95 |
| முளைக்கீரை | 96 |
| முருங்கைக்கீரை | 97 |
| முருங்கைவித்து, ஈர்க்கு இவை குணம் | 102 |
| முந்திரிப்பருப்பு | 105 |
| முப்பத்திரி | 123 |
| முண்டாக, கவசம், நடுக்கட்டு இவை கு. | 126 |
| முல்லைப் பூ | 129 |
| முருங்கைப் பூ | 130 |
| முக்காட்டு நித்திரை | 134 |
| மூ | |
| மூன்றுமீற்று, நான்கா மீற்று பசுக்களின்பால் | 26 |

| பெயர்கள் | பக்கம் |
|---|---|
| மூ | |
| மூலநிவாரணமோதிரம் | 37 |
| மூங்கில் இலை | 100 |
| மெ | |
| மெருகன்க்கிழங்கு | 70 |
| மேகரண நிவாரணம் | 101 |
| மைச்சம்பா அரிசி | 36 |
| மொ | |
| மொச்சைக்கொட்டை | 66 |
| மொச்சைக்காய் | 80 |
| மோ | |
| மோர் வகை | 32 |
| மோரும்அன்னமும் புசிப்பதின் குணம் | 49 |
| மோர்சேர்ந்த பழய அன்னத்தின் குணம் | 51 |
| ர | |
| ரசத்தின் குணம் | 63 |
| ரத்தமூலரோக நிவாரண லேகியம் | 98 |
| ரொட்டி வகை | 53 |
| ரோமரிஷி விஞடி பஞ்சபக்ஷி சாஸ்திரம் | 127 |
| ல | |
| லவங்கபட்டை | 122 |
| லவங்க பத்திரி | 122 |
| வ | |
| வயல்ஜலம் | 22 |
| வரகு சாதம் | 52 |
| வடிகஞ்சி, உறைகஞ்சி, கொதிகஞ்சி இவை கு. | 55 |
| வ | |
| வருப்பதின் பேத கு. | 63 |
| வரையாட்டுஇறைச்சி | 113 |
| வசம்பின் குணம் | 121 |
| வஸ்திர வகை | 124 |
| வா | |
| வாழையிலை | 42 |
| வாழைக்கனிவடை | 59 |
| வாழைக்காய் | 74 |
| வாழைப்பிஞ்சி | 74 |
| வாழ் அவரைக்காய் | 78 |
| வாழைப்பழத்தின்பொது குணம் | 89 |
| வாதுமைப்பருப்பு | 105 |
| வான்கோழிக்கறி | 114 |
| வாத்துக்கறி | 114 |
| வாத்துமுட்டை | 115 |
| வால்மிளகு | 117 |
| வாழைப்பூ | 130 |
| வி | |
| விழித்தவுடன் சுத்த ஜலம் அருந்தலின் கு. | 6 |
| விழித்தவுடன் பார்க்கத்தக்க வஸ்துக்கள் | 7 |
| விழித்தவுடன் கண்ணுடி பார்த்தலின் குணம் | 7 |
| விழித்தவுடன் பார்க்கத்தகாத வஸ்துக்கள் | 7 |
| விதுகங்காய் | 87 |
| விதை அத்திப்பழம் | 89 |
| விழாம்பழம் | 91 |

பெயர்கள் பக்கம்

வி

வித்து, கொட்டை, பரு
ப்பு வகை 102
வித்துக்களின் பொது 102
விலாங்குமீன்கறி 116
விசிறி வகை 132

வெ

வெயிலால் குணம் 8
வெந்நீர் வகை 23
வெந்நீரின் பொது கு. 23
வெண்மை,செம்மை,கரு
மை,கபிலை இன்னிர
பசுக்களின் பால் கு 26
வெள்ளாட்டுப்பால் 28
வெள்ளாட்டின் தயிர்,
மோர்,பாலேடு 32
வெண்ணெய் வகை 33
வெள்ளாட்டு வெண்
ணெய் 33
வெள்ளாட்டு நெய் 34
வெள்ளிக்கலத்தின் கு. 41
வெண்கலத்தின் கு. 42
வெங்காயத்தின் கு. 72
வெள்ளரிக்காயின் கு. 79
வெள்ளரிப்பிஞ்சி,பழம்,
விதை இவை குணம் 79
வெண்டைக்காய் 84
வெள்ளைநாவற்பழம் 90
வெண்க்கீரை 96
வெள்ளரிவித்து 103
வெள்ளை அல்லி செவ்
அல்லி விதை குணம் 104

பெயர்கள் வெ பக்கம்

வெள்ளாட்டுஇறைச்சி 113
வெண்கடுகு 118
வெந்தயத்தின் கு. 119
வெள்ளைப்பூண்டு 120
வெண்பட்டுவஸ்திரம் 125
வெள்ளை வஸ்திரம் 125
வெள்ளைத்தாமரைப்பூ 129
வெட்டிவேரின்விசிறி 132
வெண்சாமர விசிறி 132

வே

வேள்விப்புகை, சுடுகா
ட்டுப்புகை,தைலப்புகை 9
வேப்பெண்ணெய் 14
வேப்பிலை 1[illegible]
வேலம்பட்டைசாறுய 111
வேப்பம்பூ 130

வை

வைகைநதிநீரின் கு. 18

ஸ்

ஸ்நானபானங்களுக்
குதவாத நீரின் கு. 22
ஸ்தன்னியத்தில் பால் 32

ஜ

ஜலவகை 16
ஜம்புநாவற்பழம் 90

ஜா

ஜாதிக்காய் 122
ஜாதிப்பத்திரி 122
ஜாதிப்பூ 129
ஜீரணகாலஅளவுகூறல் 135

அகராதி முற்றிற்று.

MA3 N26
68795

# நூதன பரிமள பற்பொடி.

டிரேட் மார்க்கு



தவழ்ந்த கிருஷ்ணன்

இதை பல்துலக்கிவந்தால் சகல பல்வியாதிகளை நிச்சயமாய் நிர்மூலப்படுத்தி கண்டிப்பாய் பல்லைக் கெட்டிப்படுத்தும், பல் கருக்காது, பளபளப்பாய் பிரகாசிப்பதோடு பரிமள வாசனை மனோரம்மியமாயிருக்கும்.

இன்னொரு விசேஷம்:— இதில் தேவதை ஜெபமான அறியசத்துள்ள சித்துமூலிகையும் மற்றும் பல அருமையான வஸ்துக்களும் சேர்ந்திருக்கிறபடியால் லக்ஷ்மிகடாக்ஷமுண்டாகி அதி அற்புத தேஜசோடு மனமகிழ்ச்சியும் முகமலர்ச்சியுமாய் மகத்தான ஆனந்தம் ஏற்படுவதுடன் நினைத்த காரியம் ஜெயமாகும்.

இதன் அபாரசக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும் ஒருதரம் வாங்கினால் இதற்குநிகர் மற்றவேறு எதுவுமில்லையென அளவில்லா ஆச்சரியமடைந்து இதையே தேடுவீர்கள் இம்மாதிரி பல்பொடி பெரிய பூஜாகாலங்களில் தான் செய்யவேண்டிவரும். ஆனதால் அதிகம் வாங்கிக்கொள்வது சிலாக்கியம். ☞ பற்பொடி டப்பியில் மேல்காட்டிய தவழ்ந்த கிருஷ்ணன் டிரேட்மார்க்கு உண்டா? என்பதைபார்த்துவாங்கினால் ஏமார ஹேதுவில்லை.

இதன் விலை டப்பி அணா **4**. சிறிய டப்பி அணா **2**.

☞ ஷை அளவுள்ள சாதாரண அற்புத பற்பொடி, டப்பி அணா **2**. சிறிய டப்பி அணா **1**.

**டி. என். சீதாராமய்யர் கம்பெனி,**

ஜோஸியம், நேட்டிவ் டாக்டர் அண்டு மாந்திரீக ஹால்,

தெற்குவாசல் 49, எழுத்தாணிக்காரத்தெரு, மதுரை.